விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XVI } ருத்ரோத்காரிஹு மார்கழிமீ :: 1923 - ஹு டிசம்பர்மீ { பகுதி 3

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

இபமாந்தர் சக்ரபதி செறி
படையாண்டு சக்ரவரி சைக
ளிடவாழ்ந்து திக்குவி சயமண் ணரசாகி
இறமாந்து வட்ட வணை மிசை
விரிசார்ந்து வெற்றி மலர் தொடை
யெழிலார்ந்த பட்டி வகைபரி மளலேபந்
தபனுங்க ரத்ந வணிகல
னிவைசேர்ந்த விச்சு வடிவது
தமர் சூழ்ந்து மிக்க வுயிர் நழு வியபோது
தழல்தாங் கொளுத்தி யிடவொரு
பிடிசாம்பல் பட்ட தறிகிலர்
தனவாஞ்சை மிக்கு னடிதொழ நினையாரே!
உபசாந்த சித்த குருகுல
பவபாண்ட வர்க்கு வரதன்மை
யுருவோன் ப்ர சித்த நெடியவன் ரிஷிகேசன்
உலகீன்ற பச்சை யுமையணன்
வடவேங்க டத்தி லுறைபவ
னுயர்சார்ங்க சக்ர கரதலன் மருகோனே!
த்ரிபுராந்த கற்கு வரசுத
ரதி காந்தன் மைத்துன முருக
திறல்பூண்ட சுப்ரமணி யசண் முகவேலா!
திரைபாய்ந்த பத்ம தடவய
லியில்வேந்த முத்தி யருள்தரு
திருவாஞ்சி யத்தி லமரர்கள் பெருமாளே!

தயைநிறைந்த மனத்தை யுடையவரும் குருகுலத்திலுதித்த பாண்டவர்களி லொருவருமான தருமபுத்திரருடைய மனோபீஷ்டங்களைப் பூர்த்திசெய்தவனும், நீலநிறமுள்ள திருமேனியை யுடையவனும், மகாபலியை யடக்கிப் பிரசித்திபெற்ற திருவிக்கிரமனும், மெய்யடியார் இதயத்தி லுறைபவனும், உலகத்தைப் பெற்றருளிய உமாதேவியாரின் அண்ணனும், வடவேங்கடம் என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருப்பவனும், சிறந்த சாரங்கம் வில்லையும் சக்கராயுதத்தையும் கையில் தாங்கியவனுமான மகாவிஷ்ணுவின் மருகோனே! திரிபுர தகனஞ்செய்த தயாபரமூர்த்தியான சிவபெருமான் தேவர்களுக்கு வரமாக அளித்த புதல்வனே! இரதிதேவியின் நாயகனுகிய மன்மதனுடைய மைத்துனனே! (மன்மதன் மகாவிஷ்ணுவின் புதல்வனுதலால்); ஞானவாசனை வீசும் பெரியோனே! வலிமை பொருந்திய சுப்ரமண்யா! ஆறுமுகனே! வேலாயுதத்தைக் கையில் தாங்கியவனே! அலைமோதும் தாமரைத் தடாகங்கள் நிறைந்துள்ள வயலூரில் எழுந்தருளியிருக்கும் அரசனே! முத்தியைத் தந்தருளும் பெருமானே! திருவாஞ்சியத்திலமர்ந்துள்ள தேவர்கள் நாயகனே! இம்மண்ணுலகில் அரசராய்ப் பிறந்து யானைமீதேறிச் செல்லும் சிற்றரசர்கள் பலருக்குச் சக்கரவர்த்தியாகவும், அணியணியாக வகுத்துள்ள சேனைத்திரளை யுடையவராகவும், மிக்க செல்வத்துடன் வாழ்ந்து திக்குவிஜயஞ்செய்து பல அரசர்களையும் ஜயித்து இறமாப்புற்று வட்டமான திண்டுகளின்மேற் சாய்ந்து, வெற்றியைக் குறிக்கும் வாகைமாலையையணிந்து, பரிபூரணமான அழகுபெற்று, பலவித வெற்றிலைப் பட்டிகளையும் வாசனை மிக்க தைலங்களையும் உபயோகித்து ஆசை மிக்க அங்கங்களில் ஆபரணங்களைப் பூண்டுள்ள வடிவமானது இச்சையுருவமானது; அதைச் சுற்றத்தவர் சூழ்ந்திருக்குங்கால், அதனின்றும் உயிர் கள்ளத்தனமாய் நழுவிவிடும். அப்போது அவர்கள் அவ்வுடலை அக்கினியிலிட்டுக் கொளுத்தி விடுவார்கள்; அது எரிந்தபின் மிஞ்சுவது ஒருபிடி சாம்பலே யாகும். இவ்வுண்மையை யறியாதவர்கள் அதிகப் பொருளாசையினல் மதிமயங்கி, உனது பாதாரவிந்தங்களை ஆராதிக்கவேண்டுமென்று எண்ணங்கொள்ளமாட்டார்கள்.

திருமயிலைச் சிறப்பு.—(1) அறுபத்துமூவர் உத்ஸவம், (2) பார்வதிதேவி மயிலுருவம் நீக்கியது, (3) வாயிலாாயனுர் சரித்திரம், (4) திருவள்ளுவர் சரித்திரம், பேயாழ்வார் சரித்திரம்; இவைகளுடன், இதில் ஸ்ரீகபாலீசுவரர் கோவில் திருக்குளக்காட்சிப் படமும், திருவள்ளுவர் அவரது மனைவி இவர்களின் படமும் அச்சிட்டுச் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் விலை அணு 4.

---

11. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு.

130

விவேக போதினி

தொ. 16] ருத்ரோத்காரி, மார்கழிமீ [ப. 3

காலஞ்சென்ற ஸ்ரீமான் S. கஸ்தூரிரங்கய்யங்கார்

THE LATE SRIMAN S. KASTURIRANGA IYENGAR

தற்காலத்தில் நமது தாய்நாட்டில் சிறந்ததவையெனப் பெயர்பெற்ற இந்தியப் பத்திரிகைகளுக்குள் முதன்மையான பதவியில் யாவராலும் அமர்த்தப்பட்டிருக்கும் "ஹிந்து" என்னும் பத்திரிகையை, அவ்வளவு உயர்ந்த பதவி பெறும்படியாய்ச் செய்த புத்திமானும், சில காலமாய் இராஜாங்க விஷயங்களில் நெருக்கடியான நிலைமையை யடைந்திருக்கும் நமது தாய்நாட்டின் துக்கங்களை யகற்றி, அது தன்னுடைய பழைய உன்னத பதவியை யடையும்படி செய்வதையே தமது பிரதானமான நோக்கமாகக்கொண்டு தமது பத்திரிகையின் மூலமாகவும் பொதுஜனப் பிரசங்கங்களின் மூலமாகவும் ஆர்வத்துடனும், ஊக்கத்துடனும் இடைவிடாது ஒருமை மனத்துடன் உழைத்து வந்தவரும், இந்தியமாதாவின் சிறந்த புதல்வர்களில் ஒருவரும், தேசத்தொண்டு செய்துவந்த பெரியோர்களில் பிரபலமானவருமான காலஞ்சென்ற ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்கார், அறிவின் மிக்கார் எண்ணிறந்தவர்களின் ஜனனபூமியான வளப்பமிக்க சோழநாட்டில் தஞ்சாவூர் ஜில்லாவில் கங்கையினுஞ் சிறந்த புநித தீர்த்தமான காவிரிநதியின்கரையிலுள்ள இன்னம்பூரில் பரம்பரையாகக் கௌரவம் வாய்ந்த வமிசத்தில் ஸ்ரீமான் சேஷய்யங்கார் என்னும் பெரியாருக்கு மூன்றாவது குமாரராக 1859-ம் ஹூத்தில் ஜனித்தார். ஸ்ரீமான் சேஷய்யங்கார் சிலகாலம் தஞ்சாவூரில் ஜில்லா கலெக்டர் ஆபீஸில் உத்தியோகமாயிருந்து, பிறகு தனத்தின்மிக்க கபிஸ்தலம், சீயாழி எஸ்டேட்டுகளின் மானேஜராக இருந்தார்.

> "தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
> முந்தி யிருப்பச் செயல்"—திருக்குறள்.

என்னும் நீதியின் உண்மையைத் தெளிவாய் அறிந்த அவர், தமது ஆஸ்தி சொற்பமானதாயிருந்தபோதிலும், தமது மூன்று புதல்வர்களுக்கும், உயர்தரமான கல்வி புகட்டுவித்தார்.

அவருடைய மூத்த குமாரரான காலஞ்சென்ற திவான் பகதூர் எஸ். ஸ்ரீனிவாஸராகவய்யங்கார், போக்குவரவு வசதிகள் குறைவாக விருந்த அக்காலத்திலேயே சென்னைக்கு வந்து கல்வி பயின்று, சர்வகலாசாலையில் பட்டம் பெற்றுப் பிறகு தஞ்சை ஜில்லா கலெக்டராபீஸிலேயே உத்தியோகம் பெற்றுத் தமது வேலைத்திறமையினாலும் யோக்கிய குணத்தினாலும் படிப்படியாய் மேம்பாடு அடைந்து கடைசியாக இம்மாகாணத்தின் பத்திரப்பதிவு இலாகா இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவியை யடைந்தார். அக்காலத்தில் அவர் இயற்றிய "நாற்பது வருஷகாலத்தில் இந்தியாவின் முற்போக்கு" என்னும் நூலானது இக்காலத்திலும் சிறந்ததாக மதிக்கப்பட்டு வருகிறது. பிறகு அவர் பரோடா இராஜ்யத்தின் திவானாகித் தமது பரிபாலனத் திறமையினால் அவ்விராஜ்யத்துக்கு மிகுந்த நன்மை புரிந்து பரோடா மகாராஜாவினாலும் பிரிட்டிஷ் அதிகாரிகளாலும் தக்கவாறு நன்கு மதிக்கப்பெற்றார்.

ஸ்ரீமான் சேஷய்யங்காருடைய இரண்டாம் குமாரரான ஸ்ரீமான் எஸ். ஸௌந்தரராஜய்யங்கார், சர்க்கார் உத்தியோகத்தி லமர்ந்து கடைசியாக டிப்டி கலெக்டர் பதவியடைந்து அதினின்று இப்பொழுது நீங்கி, பென்ஷன் பெற்று மயிலையில் வசித்துவருகிறார்.

அவரது மூன்றாவது குமாரரான ஸ்ரீமான் எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார், இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் கலாசாலை கீர்த்தி பெற்றிருக்குமளவு தென்னிந்தியாவில் கீர்த்திபெற்றுள்ள கும்பகோணம் கலாசாலையில், முதன்முதலில் கல்வி பயின்று, பிறகு சென்னை ப்ரெஸிடென்ஸி கலாசாலையிற் சேர்ந்து உயர்தரக் கல்வி பயின்று, 1879-ம் ஹூத்தில் பி. ஏ., பரீக்ஷையில் தேறினார். தேறினவுடன், உத்தியோ

131

கத்தி லமர்ந்து பொருளீட்டவேண்டுமென்ற ஆசையினால் தூண்டப்பட்டு, அவர் ஸப் ரெஜிஸ்டிரார் வேலையி லமர்ந்தார். ஆனால் அவருடன் பிறந்த சுயேச்சைப் பிரியமும், அயனார் அவர் தலையிலெழுதிய எழுத்தும் சேர்ந்து அவரை அச்சேவகா விருத்தியை விட்டுவிட்டு, வக்கீல் தொழிலை யடைவதற்குரிய வழியைத் தேடச் செய்தன. ஆகவே, அவர் சட்டப் பரீக்ஷையில் தேறி, சட்ட ஞானத்தில் இணையிலியாய் விளங்கின காலஞ்சென்ற ஸர். வி. பாஷ்யம் ஐயங்கார் அவர்களிடத்தில் 1884 - ம் ஞூத்தில் உமேதவாரியாக விருந்து வேலை கற்றுக்கொண்டார். அக்காலத்திலேயே ஸர் வி. பாஷ்யம் ஐயங்கார் அவர்கள், அவருடைய தெளிவான புத்தியையும், சட்ட விஷயங்களைச் சுலபமாய் அறிந்துகொள்ளும் சக்தியையும் கண்டு வியப்புற்று, அவர் மேலான பதவியை யடைவது திண்ணமென்று பன்முறை கூறியதுண்டு.

ஸர் வி. பாஷ்யம் ஐயங்காரவர்களிடம் தொழில் கற்றுக்கொண்ட பின்னர், ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்கார் கோயமுத்தூரில் வக்கீல் தொழில் பயிலத் தொடங்கி, தமது திறமையினால் வெகு சீக்கிரத்தில் முன்னுக்கு வந்து அவ்வூர் வக்கீல்களுக்குள் தலைமை பெற்றார். ஆனால் அக்காலத்திலும் அவர் தமது தொழிலையே பிரதானமானதாகக் கருதாமல், பொதுஜன விஷயங்களுக்காகப் பெரிதும் உழைத்துவந்ததுமன்றி, "ஹிந்து" பத்திரிகைக்கு, பல அரிய வியாசங்களை எழுதி யனுப்பிவந்தார். அவ்வூர் முனிசிபாலிட்டியிலும், தாலூகா, ஜில்லா போர்டுகளிலும் அங்கத்தனராகவிருந்து பொதுஜன நன்மைக்காக உழைத்துவந்தார்.

அவ்வாறு பொதுஜன சேவையையே தமது வாழ்க்கையின் பிரதம நோக்கமாகக் கருதிய ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்கார், தாம் கருதிய வளவு பொதுஜன சேவை செய்யக் கோயமுத்தூர் இடந்தராததனால், தமது கருத்து நிறைவேறுவதற்குரிய சாதகங்களைத் தரத்தக்க சென்னைமாநகருக்கு வந்துசேர்ந்தார். அக்காலத்தில், ஸ்ரீமான் ஜி. சுப்ரமண்ய ஐயர் முதலியவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட "ஹிந்து" பத்திரிகையானது காலவித்தியாசத்தினால் பொருட்குறைவு என்னும நீர்ச்சுழியி லகப்பட்டு முழுகிப்போகும் நிலைமையி லிருந்தது. தேச சேவை செய்யத்தக்க நேரி எப்போது வாய்க்குமெனக் காத்துக்கொண்டிருந்த ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்கார் அப்பத்திரிகையின் பயங்கரமான நிலைமையைக்கண்டு, சற்றும் மனந்தளராமல் அதை வாங்கி, அக்காலத்திலும் நன்கு மதிக்கப்பட்டு வந்த அப்பத்திரிகையை உண்மையை ஒளியாமல் உரைப்பதிலும், பக்ஷபாதமில்லாமல் கண்டிப்பதிலும், தேசத்தின் நன்மைக்குரிய நெறியைப் போதிப்பதிலும் அதற்கிணையான பத்திரிகைகள் சிலவேயென்று சத்துருக்களும் மித்துருக்களும் ஒருமை மனப்பட்டு ஒப்புக்கொள்ளும்படி சொற்ப காலத்துக்குள் செய்துவிட்டார்.

ஆதி முதற்கொண்டே அவர் காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டவர்தாம். அக்காலத்தில் கல்கத்தாவில் ஒருமுறை காங்கிரஸ் மகாநாடு கூடியபொழுது சென்னையி லிருந்தவர்கள் அங்குச் செல்ல இருப்புப்பாதை இல்லாதபடியால், அவர்கள் கப்பலேறிச் சமுத்திர மார்க்கமாகச் சென்றனர். அவ்வாறு சென்றவர்களுள் ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்காரும் ஒருவர். 1907-ம் ஞூத்தில் காங்கிரஸில் கலகம் ஏற்பட்டு, கக்ஷிப்பிரதிகக்ஷி யுண்டானபோது அவர் ஸ்ரீமான் பாலகங்காதர திலகர் கக்ஷியைச்சார்ந்தவராக விருந்தார். 1908-ம் ஞூத்தில் ஸ்ரீமான் வி. கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள் காங்கிரஸைச் சென்னையில் கூடும்படி செய்து, மிதவாதிகள் கக்ஷியே காங்கிரஸில் ஓங்கும்படி செய்ய முயன்றபோது, ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்கார் தனியாக நின்று, அஞ்சாநெஞ்சுடன் அம்முயற்சியை எதிர்த்து வந்தார். அதுமுதல் 1914-ம் ஞூத்தில் லக்ஷ்மணபுரியில் கூடிய காங்கிரஸில் இருதிறத்தாரும் ஒற்றுமைப்பட்ட வரையில் அவர் காங்கிரஸில் மிதவாதம் ஓங்கி விடாதபடி தமது பத்திரிகை மூலமாகத் தடுத்து வந்தார். அவர் காரியத்திலேயே கண்ணுயிருப்பவராதலாலும், இடம்பத்தில் சிறிதும் ஆசையில்லாதவராதலாலும், அவர் பொதுஜன இயக்கங்களில் பின்னேயிருந்து உழைத்துவந்தாரேயன்றி வெகுகாலம் வரையில் முன்னுக்கு வரவேயில்லை. ஆனால் 1917-ம் ஞூத்தில் ஹோம்ரூல் கிளர்ச்சி ஏற்பட்டு, அது அதிகரித்த காரணத்தினால் மிஸஸ் பெஸண்டு முதலியோர் பாதுகாப்பில் வைக்கப்பட்டபொழுது, அவர், தாம் அப்போதும் பத்திரிகாலயத்தை

வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுத லின்று.

விட்டு வெளியேறுமலிருப்பது தேசத் துரோகமாகுமென்று கருதி, அநேகப் பொதுக்கூட்டங்களிற் சென்று பிரசங்கஞ்செய்து தம் நாட்டவருக்குத் தக்க நெறியைக் காட்டினர்.

அப்போது ஐரோப்பிய மகாயுத்தம் மும்முரமாய் நடந்துகொண்டிருந்தது. அந்த யுத்தத்தின் சங்கதிகளை உலகத்தாருக்குத் தெளிவாகத் தெரிவிக்கும் முறையைப்பற்றிப் பேசி முடிவு பண்ணுவதற்காக டில்லியிற் கூடிய கூட்டத்துக்கு அவர் இராஜாங்கத்தாரால் அழைக்கப்பட்டுச் சென்றார். அவர் அங்குப் போய் வந்த தின்பயனாக, "ஹிந்து" பத்திரிகையில், போரின் சங்கதிகள் ஒவ்வொரு வாரமும் சுருக்கமாகவும் வகுத்தும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டு வந்தன. யுத்தமுடிவில் கவர்ன்மெண்டாரவர்கள் அவரை இந்தியப் பத்திரிகாசிரியர்களின் பிரதிநிதிகளில் ஒருவராகத் தெரிந்தெடுத்து, இங்கிலாந்துக்கும், ஐரோப்பாவிலுள்ள பல யுத்தரங்கங்களுக்கும் அனுப்பினார்கள். அவர் அங்கிருந்து இந்தியாவுக்குத் திரும்பிவந்தபோது, அவர் பிரிட்டிஷ் கவர்மெண்டாரால் கௌரவிக்கப்பட்டதைக் கேட்டு மனமகிழ்ச்சியடைந்த ஜனங்கள் அவர் இலங்கையிலிருந்து சென்னைக்கு வரும் வழி முழுவதிலும் அநேக விடங்களில் அவரை மிகுந்த ஆர்வத்துடன் உபசரித்தனர்.

ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்கார் எந்த விஷயத்திலும் தாமே தீர்க்காலோசனை செய்து முடிவு செய்யும் இயல்புடையவராதலால், 1920-ம் வருஷத்தில் கல்கத்தாவில் கூடிய ஸ்பெஷல் காங்கிரஸில், மகாத்மா காந்தி பிரேரணை செய்த ஒத்துழையாமைத் தீர்மானத்தில் அடங்கிய மூன்றுவகைப் பகிஷ்காரங்களும் அச்சமயம் நாட்டுக்கு நன்மையைத் தரத்தக்கவைகளல்லவென்றும் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரக் கூடியவைகளல்லவென்றும் அபிப்பிராயப்பட்டு அவைகளை ஒப்புக்கொள்ளாமல், அவைகளை அத்தீர்மானத்திலிருந்து எடுத்துவிடவேண்டுமென்று திருத்தப் பிரேரணையொன்று கொண்டுவந்தார். ஆனல் மகாத்மா காந்தியின் தீர்மானம் அந்தக் காங்கிரஸினால் ஒப்புக்கொள்ளப்பட்டு, பிறகு நாகபுரி காங்கிரஸினால் ஊர்ஜிதப் படுத்தப்பட்டபடியால், ஒரு சங்கத்தில் அதிகமான அங்கத்தினரால் ஒப்புக்கொள்ளப்பட்டு அச்சங்கத்தில் ஏற்படும் தீர்மானத்தை ஏனைய அங்கத்தினரும் ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டவரென்ற நீதியைக் கடைப்பிடித்தொழுக நிச்சயித்து ஸ்ரீமான் ஐயங்கார் அப்பஹிஷ்காரங்களை ஒப்புக்கொண்டு அத்தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டிருந்தார். பிறகு அதிற்கண்ட பஹிஷ்காரங்கள் அவசியமென அவர் புத்திக்கே தோன்ற, அவர் அவைகளுக்காகப் பாடுபடத் தொடங்கினர்.

1922-ம் வருஷ ஏப்பிரல் மாதத்தில் அவர் அபாயகரமான அண்டவாதத்துக்காக அறுத்துச் சிகிச்சை செய்யப்பெற்று மிகவும் பலஹீன மடைந்திருந்த சமயத்தில், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் அக்கிராசனதிபதியானவர் அக்கமிட்டியார் அவரைச் சட்ட மறுப்புக் கமிட்டியின் ஒரு அங்கத்தினராக நியமித்ததாக அவசரமாய்த் தந்தி மூலம் அவருக்குத் தெரியப்படுத்தினர். தேச சேவையைய தமது பிரதம நோக்கமாகக் கொண்ட ஸ்ரீமான் ஐயங்கார் தமது தேக ஸ்திதியைச் சிறிதும் பாராட்டாமல், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் தமக்கிட்ட பணியைக் களிப்புடன் ஏற்றுக்கொண்டு, சட்டமறுப்புக் கமிட்டியிற் சேர்வதற்காகக் கூடிய சீக்கிரத்தில் நாகபுரிச்குச் சென்றார். சட்ட மறுப்புக் கமிட்டியின் ஓர் அங்கத்தினராக இந்தியா முழுவதும் அலைந்து, ஆங்காங்கு பிரமுகர்களை விசாரணை செய்து தேசத்தாரின் கருத்தையறிய மிகவும் உழைத்த காரணத்தினல் ஏற்கெனவே பலஹீனமுற்றிருந்த தேகம், இன்னும் அதிக பலஹீனமுற்றது. ஆகையினல் அந்தக் கமிட்டியின் யாதாஸ்தை வெளியாக்கிவிட்டு அவர் சென்னைக்குத் திரும்பியபின், அவர் பத்திரிகாலயத்துக்குப் போய் வரவும் சக்தியற்றவராகி, வீட்டிலிருந்த வண்ணமே பத்திரிகையை நடத்தினர்.

தமது தேகம் அவ்வளவு பலஹீனமுற்ற பின்னும், அவர் தமது பிரதம நோக்கத்துக்குச் சிறிதும் பங்கமேற்படா வண்ணம், திலகர் ஸ்வராஜ்ய நிதிக்குப் பொக்கிஷதாரராகவிருக்க ஒப்புக்கொண்டார். அவர் தமது வீட்டைவிட்டு வெளியேறச் சக்தியற்றவரானபின்னும், ஜனங்களின் தலைவர்களும் மற்றும் பலரும் அவரிடம் சென்று பொது விஷயங்களைக் குறித்து அவரிடம்பேசி அவரது அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டுபோவது வழக்கம். அவர் தினந்தோறும் பிற்பகலில் இரண்டுமணி நேரம் மத சம்

பந்தமான பாடல்களையும்,பக்தியை யூட்டும் சாஸ்திரங்களையும் கருத்துடன்கேட்டுவந்தார். தம்மைப் பார்க்க வந்தவர்களில் எவரிடமும் அவர் தாம் நோயினால் அனுபவித்துக் கொண்டிருந்த துன்பங்களைப்பற்றிப் பேசுவதேயில்லை. அவருக்குச் சிகிச்சை செய்ய வந்த எல்லாமுறை வைத்தியர்களும் அவருடைய பொறுமையின் அளவைக்கண்டு வியப்புற்றுச் சென்றனர்.

நாளது௵ கார்த்திகைமீ 27உ புதன் கிழமை யன்று அருணோதய காலத்தில் அவர் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து சென்றார்.

காலை 9½-மணிக்கு அபரக்கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டன. 10-மணிக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி சுவாமி கோவிலிலிருந்தும், திருமயிலை ஸ்ரீவேதாந்த தேசிகர் கோவிலிலிருந்தும் பரிவட்டம், நிர்மால்ய புஷ்பமாலை முதலிய மரியாதைகள் தக்க விருதுகளுடன் வந்து சேர்ந்தன. வைதிகப் பிராமணர்கள் மந்திரங்களை ஓதவும், திருவாய்மொழிப் பிரபந்தத்தைப் பாடவும், அவரது தேகத்தின்மீது புண்ணிய தீர்த்தம் ப்ரோக்ஷிக்கப்பட்டது. பிறகு பரிவட்டம், மாலை முதலியவைகளால் அவரது தேகம் அலங்கரிக்கப்பட்டது. பிறகு நேயர்கள் நமது மாதாவின் அரிய புதல்வரின் ஆவிக்கு 64-வருஷகாலம் உறைவிடமாயிருந்து உதவிய அத்தேகத்தைச் சுமந்துகொண்டுபோய் சுடலையிற் சேர்த்தனர்.

சுடலையில், ஸ்ரீமான் டி. ப்ரகாசம், மௌலானா, யாகுப் ஹுஸேன், ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார், ஸ்ரீமான் சிங்காரவேலு செட்டியார் இவர்கள் ஸ்ரீமான் ஐயங்கார் அவர்களுடைய குணாதிசயங்களை எடுத்துக்கூறி, அவரை இழக்கும்படி நேர்ந்த தௌர்ப்பாக்கியத்தைப்பற்றித் துக்கித்தனர். பிறகு அவ்வரிய தேகமானது மனிதனுக்கும் பரம்பொருளுக்கும் இடையே நடக்கும் தூதனான அக்கினி பகவான் கையில் ஒப்புவிக்கப்பட்டது. மறுநாள் ஸஞ்சயனமான பிறகு அவருடைய அஸ்திகளை யெடுத்துக்கொண்டு ஸ்ரீமான் கிருஷ்ணசுவாமி சர்மா திரிவேணி சங்கத்துக்குச் சென்று, தொன்றுதொட்டு ஹிந்துக்களுக்குள்ள நம்பிக்கைக் கிணங்க, கங்காநதியிற் சேர்த்தார். செய்ந் நன்றி மறத்தல் மகாபாபமென்று அறிந்துள்ள நமது நாட்டவர், அவருடைய அஸ்திகளையும் பலவிடங்களில உபசரித்தனர்.

தக்க நெறியில் தங்களைச் செலுத்தி வந்த ஒரு தலைவரையிழந்த ஜனங்களுக்கு அவரளித்த புத்திமதிகளும் அவருடைய கோட்பாடுகளுமே உற்ற துணையாகின்றன. ஆதலால் ஸ்ரீமான் ஐயங்கார் தமது பத்திரிகை மூலமாகவும் பிரசங்கங்கள் மூலமாகவும் கூறியுள்ள புத்திமதிகளையும் தெரிவித்திருக்கும் அவரது கோட்பாடுகளையும் சேகரித்துத் தமது மனத்தில் இருத்திக்கொள்ளவேண்டுவது இந்தியர்களின் கடமையா யிருக்கிறது.

இராஜாங்க விஷயங்களைப் பற்றினமட்டில் மாத்திரமன்றி, வர்த்தக விஷயங்களைப்பற்றிய மட்டிலுங்கூட நமது தேசத்தவரைத் தக்கபடி திட்டப்படுத்தி வைக்கவேண்டு மென்பது அவரது அபிப்பிராயம். அவர் சோம்பேரித்தனத்தையும் வேலைத்திறமின்மையையும் கண்டிப்பவரே யெனினும், தொழிலாளர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதோடு நின்றுவிடாமல், அவர்களை மனிதர்களாக மதித்துத் தக்கபடி நடத்தவேண்டிய ஏற்பாடுகளும்செய்யவேண்டு மென்பது அவரது அபிப்பிராயம். தேசீயக் காரியங்களை நடத்துவதற்கு அப்போதைக்கப்போது நன்கொடைகள் பெற்று, பொருள் சேர்க்கக்கூடாதென்றும், தேசீயநிதியொன்று ஏற்படுத்தி வேண்டியபொருளை அதிலிருந்து எடுத்து எல்லாத் தேசிய இயக்கங்களுக்கும் உபயோகப்படுத்தவேண்டுமென்றும், பொது நன்மைக்காக உழைப்பவர்களுக்கு அவர்கள் உழைப்புக்குத் தக்க கூலி கொடுத்துவிடவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டார். இந்தியாவானது தன்னிடத்தே பிறக்கும் எல்லோருக்கும் உணவும் உடையும் ஏராளமாக அளிக்கத்தக்க விஸ்தீரணமுடையதாதலால், எவரும் இந்தியாவை விட்டு வெளியேறி அயல்நாடுகளுக்குப் பொருளீட்டச் செல்லவேண்டிய அவசியமேயில்லை யென்றும் அவர் அபிப்பிராயப்பட்டார்.

தவறான கோட்பாடுகளையும் தவறான ஏற்பாடுகளையும் கண்டித்து அவர் எழுதுவாரேயன்றி, மனிதர் ஒருவரையும் கண்டித்து எழுதி அவருடைய மனத்தைப் புண்படுத்தும் இயல்புடையவரன்று. அவர் இராஜாங்க விஷயங்களில் தம்முடைய அபிப்பிராயத்துக்கு நேர் விரோதமான அபிப்பிராயமுடைய சிநேகிதர்களுடனும் முன்போலவே பழகும் இயல்புடையவர். அவர் ஜாதபேத

வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி மிச்சின் மிசைவான் புலம்.

மில்லாமல் யாவரும் மேம்பாடடைவதே நாட்டை அபிவிருத்தியடையச் செய்யுமென்று கருதி அதற்கிணங்க நடந்துவந்தார். ஒரு நோக்கமானது அவர் புத்திக்குத் தகுதியான தென்றும், நன்மை பயக்கத்தக்க தென்றும் தோன்றிவிட்டால், அவர் மிகுந்த ஊக்கத்துடன் உழைத்து எப்பாடு பட்டும் அதை நிறைவேற்றுவார். அவரது இந்தச் சுபாவத்தை மிஸஸ் பெஸண்டு வகையறாவைக் காவலிலிருந்து விடுவிக்க அவர்செய்த ஓயா முயற்சிகள் நன்றாய் விளக்கிக் காட்டுகின்றன.

அவரது மரணசங்கதியைக்கேட்ட இந்தியா முழுவதும் பெருந் துக்கமடைந்தது. ஆங்காங்கு நமது நாட்டவர்கள் கூடித் தங்களுக்கு நேர்ந்த பெரிய நஷ்டத்தைக் குறித்து பெருந் துயரத்துடன் பேசினர். நமது தேசத்திலுள்ள பத்திரிகைகளெல்லாம் அவரது அஞ்சா நெஞ்சையும், உண்மைக் குணத்தையும், அநுதாபத்தையும்பற்றிப் புகழ்ந்து பேசின. இந்திய பத்திரிகாசிரியத்தொழிலை அதன் தற்கால உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவந்தது அவரே யென்றும், அவர் அதற்கு ஆதாரமான பலமான கோட்டையாயிருந்தா ரென்றும் சத்துருக்களும் மித்துருக்களும் புகழ்ந்து பேசினர். அவைகளிற் சிலவற்றை இங்கு எடுத்துக்கூறுவோம்.

“ * * ஆன்மாக்கள் இம்மண்ணுலகந்துறந்து விண்ணுலகத்துக் கேகுங்கால் அவரவர்களுடைய பேரேட்டுக் கணக்கைச் சோதிக்கப் படுங்கால், ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்காரின் கணக்கில் தேச கைங்கரியம் பெருமிதமாகக் காணப்படும். தேசிய இயக்கம் பரவவும், ஜனங்களுக்குச் சுயமதிப்புப் பெருகவும் ஆரம்பமான காலத்தில் ஸ்ரீமான் ஜி. சுப்ரமணிய ஐயர் முதலியோர்கள் விதை போட்டு முளைக்கவைத்து வளர்த்துவந்த தேசிய இயக்க ரூபமான “ஹிந்து” என்ற செடியை ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்கார் ஏற்றுக்கொண்டு அதைப் போற்றி வளர்த்து அதன் மணம் நாடெங்கும் கமழும்படி செய்துவிட்டார். பொதுஜன இயக்கத்தைப் பத்திரிகையின் மூலமாய் மட்டுமல்லாமல், நேரிலும் வந்து தலைமை வகித்து எப்போதும் அதிக வலிமை பெற்றிராத தமக்கு தேகத்திற் கேற்பட்ட சிரமத்தையும் கஷ்டத்தையும் பொருள் படுத்தாது தேசியப் போராட்டத்தை முன்னணியில் நின்று நடத்தி அரும்பாடுபட்டு வந்ததை நாம் விவரிப்பதென்றால் சாத்தியமில்லை. * ” —சுதேசமித்திரன்.

“ * * ஐயங்கார் விசேஷத் திறமையும், தீர்க்காலோசனை செய்து தவறாது முடிவுசெய்யும் சக்தியும், தெளிவாகத் தெரிவனவும் தேசபக்தியைக் காட்டுவனவுமான கோட்பாடுகளையுடையவர். அவர் இந்தியாவுக்கு ஹோம்ரூல் சித்திக்கச் செய்வதற்கு மாறாது உழைத்து வந்தார். * ” —நியூ இந்தியா.

“ * * * அவர் (ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்கார்) “ஹிந்து” பத்திரிகையை வாங்கி அதற்குப் பத்திரிகாசிரியராகவான நாள் முதல், இத்தேசத்தில் இந்திய பத்திரிகாசிரியத் தொழிலில் அவர் வந்து சேர்ந்ததனால் அத்தொழிலின் பலம் மிகவும் அதிகரித்ததென்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அப்பத்திரிகையை அவர் நடத்தி வந்த திறமையினால் வெகு சீக்கிரத்தில் அதன் கீர்த்தி அதிகரித்து, அது இம்மாகாணத்திலுள்ள இந்திய பத்திரிகைகளில் மிகுந்த செல்வாக்குடையவைகளுள் ஒன்றாக ஆயிற்று. * அவர் மரணத்தில் தென்னிந்தியா தனது பிரமுகர்களில் ஒருவரை இழந்துவிட்டது. * ” —மெட்ராஸ் மெயில்.

“இந்திய பத்திரிகாசியர்களுக்குள் முக்கியஸ்தரான ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்காரின் மரணத்தினால், இம்மாகாணம் தனது பத்திரிகாசிரியத் தலைவர்களுக்குள் ஒருவரையும், பத்திரிகாசிரியத் தொழிலானது தனது மிகச் சிறந்த பிரதிநிதியையும் இழந்துவிட்டன. * ஸ்ரீமான் ஐயங்கார் பொதுஜன இயக்கங்களில் சேர்ந்த காலம்முதல் ஆயுள் முழுவதும் காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டவராக விருந்தார். அதன் ஆடம்பரமான காரியங்களில் அதிகமாகச் சேரவில்லையே யெனினும், அவருடைய வார்த்தைகளும் புத்திமதியும் தேசிய இயக்கத்தின் அந்தரங்க யோசனைக் கூட்டங்களில் பெரிதும் நன்கு மதிக்கப்பட்டன. ஆகையினால் மறைந்திருந்த போதிலும் அவரது செல்வாக்கு அதிகமாகவிருந்தது. *” —ஸ்வராஜ்யா.

"ஸ்ரீமான் ஐயங்கார், பிராமணரல்லாதார் இயக்கத்தை, தேசத்தில் பின்னடைந்திருந்த வகுப்பினர்கள் மிகவும் முன்னுக்கு வந்திருந்த வகுப்பினர்களுக்குச் சமானமான நிலைமையை யடையச்செய்யும் தகுதியான முயற்சியாகக் கருதிய பிராமணர்களுள் ஒருவராவர். அப்படிப்பட்ட தமது அபிப்பிராயத்தை அவர் மறைக்கவுமில்லை. இராஜாங்க விஷயங்களில் அவர் எப்போதும் பத்திரமானவைகளும் ஜாக்கிரதையானவைகளுமான அபிப்பிராயங்களையே கொண்டிருந்தார். * * அவரது சரியான புத்திமதியைக் கேட்காமலும், இராஜதந்திர நிபுணரையொத்த அவரது தலைமையைக் கோராமலும் ஒரு இயக்கமாவது இந்நகரத்தில் நடத்தப்படவில்லை. *"

—ஜஸ்டிஸ்.

"* 'ஹிந்து' உலகம் போற்றும் ஒரு பத்திரிகையா யொளிர்வதை அறியாதாரில்லை. அரசியல் உலகில், நெருக்கடியான நிலை நிகழும்போது, தேசம் 'ஹிந்து' வின் உள்ளக்கிடக்கை யுணர அவாவி நின்றதை எவரேயறியார்? 'ஹிந்து' பத்திரிகை அரசியல் கூட்டத்தார்க்கும், அத்துறை நண்ணு வனையோர்க்கும் வழிகாட்டியா யிலங்குவதோடு, அரசாங்கத்தார்க்கும் வழிகாட்டியாக இலங்குவது குறிப்பிடத் தக்கது. இந்நெறி செல்வதென்று தேசம் விழிக்கும் வேளையில், 'ஹிந்து' சிக்கல் அறத்தக்க ஒரு செம்மை நெறி கோலுவது வழக்கம்.

எவரும் போற்றுஞ் செவ்விய முறையில் ஸ்ரீ கஸ்தூரிரங்கய்யங்கார் 'ஹிந்து'வை வளர்த்து வந்தமையாலன்றோ, அவர் அப்பத்திரிகாசிரியர் என்ற முறையில் அரசாங்கத்தாரால் யுத்த காலத்தில் இங்கிலாந்துக்கு அழைக்கப்பெற்று, ஆங்கே அரசர் பெருமானோடு அளவளாவிப் பேசும் பேறு பெற்றார்! அவர் மேலுலக வாழ்வெய்துவதற்கு இரண்டொரு நாட்கு முன்னர் இந்திய பத்திரிகாசிரியர் சங்கத்தலைவராகவுந் தெரிந்தெடுக்கப்பட்டுச் சிறப்பிக்கப் பெற்றார்.

நமது தலைவர் கஸ்தூரிரங்கய்யங்கார் செய்த தேச சேவை பெரிதுங் கவனிக்கற்பாற்று. யுத்தகாலத்தில் நமது நாட்டிடை வீறிட்டெழுந்த சுய ஆட்சிக்கிளர்ச்சியில் ஸ்ரீமான் ஐயங்கார் ஆரவாரமின்றி அமைதியாகச் சேவை செய்துவந்தார். அச்சுய ஆட்சிக்கிளர்ச்சி பின்னை பிதவாத வழியைக் குறிக்கொண்டது கண்டு நமது ஐயங்கார் தமது கூர்த்தமதியால் காங்கரஸைத் தேசீய முறையில் திருப்பத் திலகர் பெருமானுக்குப் பக்கத்துணையாக நின்று முயன்று, அம்முயற்சியில் வெற்றி பெற்றாரென்றே கூறலாம். நெருக்கடியான நிலையுறுங் காலத்துத் தேசத்துக்கு ஒரு நல்வழி கோலும் நுண்மதி ஐயங்காரிடத்தில் விளங்கியது கவனிக்கத் தக்கது. ஒத்துழையா இயக்கம் தோன்றிய போது, அதன்பால் சிறிது அநுதாபமில்லாதவராகவே நமது ஐயங்காரிருந்தார். பின்னை அவ்வியக்கத்தின் நுட்பத்தையும் அதனால் நாட்டுக்கு விளையக்கூடிய நலன்களையும் ஓர்ந்து உண்மை தெளிந்து அவ்வியக்கத்தின் மாட்டுத் தணியாக்காதல் கொண்டார். அவர் நோயால் பீடிக்கப்பட்டிருந்த வேளையில் சட்ட மறுப்புக் கூட்டத்தில் ஓர் அங்கத்தினராகத் தெரிந் தெடுக்கப் பட்டார். அவ்வேளையில் நமது தலைவர் தமது நோயை ஒரு பொருட்படுத்தாது தேச சேவை யொன்றே கருதி, அக்கூட்டத்தில் சேர்ந்து பல மாகாணந் திரிந்து, அறிக்கையில் பகிஷ்கார முறையை வலியுறுத்தினார். அவர் செம்மொழிகளால் ஒத்துழையா இயக்கத்தில் அவர் கொண்ட உறுதியும் உண்மையும் வெள்ளிடை மலைபோல் விளங்கும். சட்ட மறுப்புக் கூட்டத்தில் அவர் கலந்து உழைத்ததையும் அவர் நோய் பெருகியதற்கும் முடிவில் இவ்வுலக வாழ்வை நீத்ததற்கும் ஒரு காரணமாகக் கூறலாம்.

சென்னையில் தொழிலாளர் வேலை நிறுத்த காலங்களில் பல முறை அவர்கள் பொருட்டு, ஸ்ரீ ஐயங்கார் பலவழியிலும் உழைத்துள்ளதும் அவர் வாழ்நாளில் குறிப்பிடத்தக்க தொன்றாம்.

காலஞ்சென்ற கஸ்தூரிரங்கய்யங்கார் வாழ்வில் அறியக் கிடக்கும் உண்மைகள் பல. ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்கார் மனைவி மக்களோடு வாழும் ஒருவராயிருந்து தேச சேவை செய்து புகழுடல் தாங்கியது கவனிக்கற்பாலது. அவர் வெற்றுரைகளையும் வீண் வாதங்களையும் ஆரவாரத்தையும் விரும்புவதில்லை. தம்மீது பலவித பழி கூறும் மாற்றார் தம்மைக் காணவரும்போது, அவர் மாட்டு எவ்வித பகைமையும் பாராட்டாது, நன்மொழியால் பொறுமையாகப் பேசுவர். இன்னார்க்கும் இனியவை செய்யும் நீர்மை அவர்பால் விளங்கிற்று. அவர் அபிப்பிராய பேதங் காரணமாக மனிதரை வசை

மொழிகளால் அலங்கரிப்பது கிடையாது. ஸ்ரீமதி பெஸண்ட் அம்மையார்க்கும் ஸ்ரீகஸ்தூரி ரங்கய்யங்கார்க்கும் பலதிற அபிப்பிராயபேதங்களுண்டு. அவ்வம்மையார் தேச விடுதலையின் பொருட்டுச் சுயஆட்சிக் கிளர்ச்சியில் தலைப்பட்டபோது அவருக்கு உறு துணையாய் நின்று நமது ஐயங்கார் உழைத்தார். ஸ்ரீ ஐயங்கார் வீண் புகழ் கருதி ஓர் இயக்கத்திலுஞ் சேர்வதில்லை. எதையும் நன்கு, பொறுமையாக, ஆராய்ந்து அதனால் நாட்டுக்கு நலன் விளையும் என்று தோன்றினால், அதனை ஆதரிக்க முந்துவர். ஒத்துழையா இயக்கத்தில் அவர் முதலில் பற்றுக்கொள்ளாமலும், பின்னை அதன் மாட்டு இடையறா அன்புகொண்டதும் எமது கூற்றை வலியுறுத்தும். ஸ்ரீ ஐயங்கார் சாதிமத வேற்றுமைகளைக் கவனியாது தம்மையும் இந்தியரெனக் கருதி, நாட்டிற் பிறந்த அனைவரையும் இந்தியரெனக் கொண்டே தேசத் தொண்டு செய்து வந்ததை நாம் பெரிதுங் கவனித்தல் வேண்டும்.

முடிவாகக் காலஞ்சென்ற தலைவர்பால் விளங்கிய சிறந்த இயல்புகளில் ஒன்றை ஈண்டுக் குறிப்பிடாது செல்ல மனமெழவில்லை. உலகில் மனிதனை உத்தியோகப்பேறும் பட்டப்பேறும் மயக்காது விடுவதில்லை. அவை நமது தலைவர் ஐயங்காரை மயக்கவில்லை. சட்டசபை ஆசைக்கும் வேறுபல அமைப்பு ஆசைக்கும் நமது தலைவர் எளியராயினரோ? ஸ்ரீ கஸ்தூரி ரங்கய்யங்கார் பத்திரிகைப் பிரதிநிதியாகச் சென்று அரசர்பெருமானைக் காணும்பேறு பெற்றவர். அக்காரணத்தாலும் வேறு பல காரணங்களாலும் இப்போது 'உயர் பட்டம்' என்று கருதப்படும் 'ஸர்' பட்டம் எளிதில் முயற்சியின்றி அவர்க்குக் கிடைத்திருக்கும். அவர் இங்கிலாந்தினின்று திரும்பினதும் அவர் அப்பட்டம் பெறப் போகிறாரென்று சென்னை முழுவதும் பேசப்பட்டது. கஸ்தூரிரங்க ஐயங்கார் சிறிது அதிகாரவர்க்கச் சார்பு காட்டியிருந்தால் அப்பட்டம் பெற்றிருக்கக்கூடும். ஆனால் நமது பாரத புதல்வர் என்ன செய்தார்? பஞ்சாப் படுகொலையையும் லார்ட் செம்ஸ்பர்ட் ஆட்சி முறை ஊழல்களையும் எடுத்துத் தூற்றித் தேச விடுதலையிலேயே குறிக்கொண்டு நின்று, இறுதியில் ஒத்துழையாதா ராயினார். நமது ஐயங்கார் பட்டஆசையை வெறுத்த தேசபக்தர் என்பதைச் சிறப்பாக ஈண்டுக் குறிப்பிடுகிறோம். தேசப்பற்று உண்மையாக உடையவரைப் பட்டஆசை என் செய்யும்? பிற மாயை என் செய்யும்?

உலகில் 'ஹிந்து' என்னும் பத்திரிகையை ஓரிலக்கிய பத்திரிகையாக நிறுத்திய ஆசிரிய மேகம் - பாரத நாட்டின் விடுதலைக்காக உழைத்த தேசபக்த சிங்கம் - பட்டஆசை துறந்த பான்மை-நம்மை விட்டகன்றது; பொறுமைக் குறையுள்-குணமலை-பிறர்குற்றம் பாராட்டாப் பெருந்தகை-நம்மை விட்டகன்றது; சென்னையின் மகுடம் - தமிழ்நாட்டின் அணிகலன் - பாரதமணி - நம்மை விட்டகன்றது! என் செய்வோம்! என்செய்வோம். எமது அநுதாபத்தை அவர் உறவினர்க்கும் நாட்டார்க்குந் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஸ்ரீ கஸ்தூரி ரங்கய்யங்கார் பூதவுடல் நம்மை விட்டுப் பிரிந்தாலும் அன்னார் புகழுடலாம் போதனைகளும், வாழ்வுக்குறிப்புகளும் நம்மெதிரில் நிற்கின்றன. அவை யென்றும் நம்மை விட்டகலா.

ஆண்டவனே! தேசம் மிக நெருக்கடியான நிலையில் நின்று வருந்தும்போது, காங்கரஸ் ஒற்றுமை குலைந்துள்ள இவ்வேளையில் ஒரு பெருந் தலைவரை அழைத்துக் கொண்டாய். எல்லாம் உன் திருவிளையாடல்.

கஸ்தூரிரங்கய்யங்கார் ஆன்மா நித்தியானந்த வாழ்வில் சாந்தியடைவதாக. சாந்தி! சாந்தி! சாந்தி!"

—நவசக்தி.

"* அவர் நமது நாட்டின் தேசீயவிருத்திக்கு அப்பத்திரிகை (ஹிந்து) வாயிலாகப் பாடுபட்டு உழைத்திருப்பதைப்போல, வேறு எவரும் உழைத்ததே கிடையாது. இவர் சென்னை மஹாஜன சபைக்குக் காரியதரிசியாயிருந்து, அரியவேலை செய்திருக்கிறார். சென்னையில் நடந்த 19-வது காங்கிரஸுக்குக் காரியதரிசியாயிருந்து அதைத் திறம்பட நடத்திவைத்தார்.

ஸ்ரீமான் ஐயங்காரின் எழுத்துக்கள் வீர மொழிகளாகவும், தேசபக்தி நிறைந்தவையாகவும், கௌரவமுள்ள கம்பீரமான நடையோடு கூடியனவாகவு மிருக்குமென்பதை நாம் நமது நாட்டாருக்கு எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை. * * தேசீய இயக்கத்தில் ஓரோர் காலத்தில் கக்ஷிபேதங்களும், விவாதங்களும்

பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி வேள்வி தலைப்படா தார்.

மனஸ்தாபங்களும் பிற நெருக்கடியான நிலைமைகளும் ஏற்பட்டிருந்த போதெல்லாம், ஸ்ரீமான் ஐயங்கார் தமது "ஹிந்து" பத்திரிகையின் வாயிலாக, தீர்க்காலோசனையின்மேல் அவற்றை நுட்பமாக ஆராய்ச்சிசெய்து நியாயத்தை விளக்கிக்காட்டி, எக்கக்ஷியினரும் மனஸ்தாபப்படாதவழியில் மிக்க திறமையுடன் அபிப்பிராயங் கூறிவந்திருக்கிறார். பத்திராதிபர்களின் நிலைமையை உணர்ந்து, அவர் எந்த இயக்கத்திலும் தலையிட்டுக்கொள்ளாது விலகிநின்று, தேசிய நிகழ்ச்சியையும் காலப்போக்கையும் கவனித்து, ஜனங்கள் மனதை ஈடுபடுத்தித் தேசிய இயக்கத்தை வளர்த்துவந்திருத்தல் பாராட்டத்தக்கனவே யாகும்." —ஸைபுல் இஸ்லாம்.

நாளது௵ கார்த்திகைமீ 26௳ பம்பாயில் ஸ்ரீமான் கே. நடராஜனது தலைமையின்கீழ் நடைபெற்ற அகில இந்திய பத்திராசிரியர்களின் சங்கக் கூட்டத்தில், ஸ்ரீமான் ஐயங்கார் 'ஹிந்து' பத்திரிகையின் சொந்தக்காரராகவும் இருந்ததை ஒரு குறையாகக் காட்டி ஒருவர் ஆக்ஷேபித்தும், அவ்வாக்ஷேபணை அக்கூட்டத்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாமல் ஸ்ரீமான் ஐயங்காரே அச்சங்கத்துக்கு அக்கிராசனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டதே, பத்திரிகாசிரியத் தொழிலில் அவரடைந்திருந்த மேம்பாட்டையும் மதிப்பையும் கீர்த்தியையும் நன்கு விளக்கிக் காட்டுகிறது.

ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்காரவர்களது புத்திமதியானது இந்தியர்களுக்கு அத்தியாவசியமாயிருக்கும் இச்சமயத்தில், அவர்கள் நம்மை விட்டுவிட்டு விண்ணுலகத்துக்குச் சென்றுவிட்டார். இத்தேசாபிமானியின் பிரிவிற்கு நாம் மிகவும் துக்கிப்பதுடன், அவருடைய குடும்பத்தாருக்கும் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீமான் ஐயங்கார் இதற்குமுன் கூறியுள்ள புத்திமதிகளே நமக்கு உற்ற துணையாகும். ஆதலின் நாமெல்லோரும் அவைகளுக் கிணங்க நடந்துகொண்டு அவ்வகையினால் நமக்கு அவரிடத்திலுள்ள விசுவாசத்தையும்,மரியாதையையும் காட்டுவோமாக!

திருமூலர் திருமந்திரம்.—புதிய பதிப்பு. உயர்ந்த காகிதத்தில் அழகாய் அச்சிடப்பட்டது. நல்ல பைண்ட் ரூ. 2—4—0

ஸ்ரீ லக்ஷ்மீ சுயம்வரம்

LAKSHMI SWAYAMVARAM

ஸ்ரீபதியின் திருவருளால் மகேந்திரன் மூவுலகிற்கும் அதிபதியாகி வெகுகாலம் விளங்கினான். சகல சம்பத்துக்களும் சம்பூர்ணமாயிருந்ததால் தனக்கு ஒருவரும் நிகரில்லையென்று மிக்க கர்வங் கொண்டான். இவ்வளவு பெயரையும் பெருமையையும் தனக்குத் தந்த தனிமுதற் கடவுளான ஜகதீசனையும் மறந்தான். தன்னையே சர்வேசுவரனாக வெண்ணி மதிமயங்கினான். நீர்க்குமிழிபோல் நிலையில்லாதவையான போகங்களையே புருஷார்த்தங்களாய் நினைத்து அவற்றுள் அமிழ்ந்தான். எப்பொழுதும் பாட்டுக்கச்சேரிதான். எப்பொழுதும் ஆடல் பாடல்கள்தான். சதாகாலமும் விருந்தும் விளையாட்டுந்தான். நவரத்தினக் கற்களிழைத்த சிம்மாசனத்தில் விடாது உட்கார்ந்ததால் அக்கற்களின் கடினத்தன்மை அவன் மனத்தையும் கல்லாக்கியது. வெண்குடையின் நிழலில் இருக்கஇருக்க, அக்குடையின்கீழுள்ள இருள் அவன் இதயத்தையும் மங்கச் செய்தது. தாமதகுணம் மேலிட்டுத் தன் காரியங்களையெல்லாம் கைநழுவவிட்டான். உலக ரக்ஷணத்திற்கு ஆதாரமாயுள்ள மழை பொழிவதையும் நிறுத்தினான். மழை நிற்கவே, புற்பூண்டுகளும் தழைக்காமல் வாடின. ஆறு குளங்கள் வற்றின. பயிர்கள் குன்றின. யாகாதிகள் நின்று ஜனங்கள் அபரிமிதமான கஷ்ட நஷ்டங்களுக் குள்ளானார்கள். இவையெல்லாம் மகேந்திரன் நீதி தவறினதால் என்றறிந்து உலகங்கள் இவனை வெறுத்தன.

தனக்கேற்பட்ட மதம் போதாதென்றெண்ணினவன்போல் ஒருநாள் ஒரு மதம்பிடித்த யானையின்மீது ஆடம்பரமாய் உட்கார்ந்துகொண்டு இவன் தேவவீதியில் பவனிவந்தான். அரம்பை, ஊர்வசி முதலிய அப்ஸர ஸ்திரீகள் மின்னல் கொடிகள்போல் தோன்றி இவன் முன்பாக ஆடிக்கொண்டே சென்றனர். கந்தருவர்கள் பாடிக்கொண்டு இவர்களைத் தொடர்ந்தனர். "ஜய விஜயீபவ! பராக்கு! பராக்கு!" என்று கட்டியங்கூறிக்கொண்டு கின்னரர்கள் பக்கங்களில் வந்தனர். அசுரர்கள் மிகுந்த பொறாமையுடன் தூரத்தில் மறைந்தபடி இவனைப்பார்த்து, "எத்தனை நாள் இவனுக்கு

இந்த வாழ்வு! பார்க்கலாமே" என்று சொல்லிக் கொண்டார்கள்.

இப்படி இவன் வரும் வழியில் எதிராக துர்வாஸ மகரிஷி வந்துகொண்டிருந்தார். அவருக்கு வணங்காமலும் வழிவிடாமலும் இவன் சென்றுகொண்டிருந்தான். ஏதாவது அவசர காரியமா யிருக்கலாமென்று முனிவர் இதனைப் பாராட்டவில்லை. ஆதரவாகவே இவன் சமீபம் வந்து, "மகேந்திரா! ஏதோ காரியமாய்த் தான் போவாய். மங்களங்கள் உன்னை வந்தடையட்டும். இந்தா! இந்த மலர்மாலையை வாங்கி உன் மார்பில் அணிந்துகொள். இஃது மாதவன் திருமார்பில் மகிழ்வுடன் வாழும் மலர்மாது மிகவும் பரிவாய் என்னை அழைத்து எனக்கு அருளியது. உன்னிடத்தில் பிரீதியால் தருகின்றேன். உன் பாக்கியமே பாக்கியம்" என்று முனிவர் ஒரு நறுமலர்மாலையைக் கொடுத்தனர். "இப்படித் தாரும்" என்று சொல்லி அலக்ஷியமாய் அங்குசத்தை நீட்டி அம்மலர்மாலையை இந்திரன் வாங்கினன். வாங்கினவன் அதைத் தரித்துக்கொள்ளக் கூடாதா? ஏன் போட்டுக்கொள்வான்? கர்வம் தலைமட்டம் கொண்டுவிட்டதே. வைத்தான் அதை அந்த யானையின் மத்தகத்தில்; 'சலோ' 'சலோ' என்று சொல்லிக்கொண்டே மா வெட்டியால் அந்த யானையை ஒரு வெட்டு வெட்டினன். அதுபிடுங்கிக்கொண்டு எடுத்தது ஓட்டம். ஓடின வேகத்தில் அம்மலர்மாலை கீழ் வீழ்ந்தது.

முனிவர் இதைப் பார்த்தார். வந்துவிட்டது அவருக்கு அடங்காக் கோபமும் மனஸ்தாபமும். "பிடிசாபம்" என்றார். "ஆகா! என்ன தவறு இது. பரிசுத்த பக்தனை ஒரு ஏழையைப் பார்த்து இதை அவனுக்குத் தராமல், இந்த அயோக்கியனுக்கு ஏன் கொடுத்தேன்? ஏன் இந்த துராத்மாவினிடத்தில் எனக்கு இவ்வளவு அநீதமான வாஞ்சை! ஏ! ஜகதம்பிகே! உங்கள் திவ்விய ஹாரத்தை இப்படி அலக்ஷியம் செய்த இவனிடம், இனி க்ஷணமும் ஐசுவரியமென்பது நிற்கக்கூடாது. தன் மதம் இவனை முற்றிலும் குருடனாக்கி விட்டது. கொடிய வறுமை என்னும் மையைத் தீட்டினலொழிய இவனுக்கு இனி கண்கள் திறவாது. இவன் இந்த க்ஷணமே திருவில்லாதவனாக ஆகிவிடட்டும். தரித்திரத்தால் மெத்தவும் தவிக்கட்டும்" என்று சொல்லி விட்டு முனிவர் பொட்டென மறைந்தார்.

முனிவர் இட்ட சாபம் தெரிந்ததும், மகேந்திரனுக்கு முகம் வாடியது. ஒன்றுந்தோன்றாது வெகுநேரம் தபித்தான். எடுத்த காரியங்களெல்லாம் ஈடேறாது மயங்கினன். அசுரர்களுக்கு இது ஜயகாலமா யிருந்தது. திடீரென்று அவர்கள் வலுத்தார்கள்; தேவர்கள் தோல்வியுற்றார்கள். மகேந்திரன் ஓடி யொளிந்தான். அவன் வறுமைப்பிணியால் பட்ட கஷ்டங்களுக்குக் கணக்கு வழக்கில்லை. குபேரன் பட்டணமே கொள்ளை போகலாச்சுது. வருணன் வற்றி யுலர்ந்தான். அக்கினியும் கருத்தான். காலனும் அரண்டோடிவிட்டான்.

பிரகஸ்பதி பகவான் தேவர்கள் எல்லோரையும் இரகசியமாய்க் கூட்டி இதற்குப் பரிகாரம் எப்படி யென்பதை வெகுநாள் ஆலோசித்தார். "பிரும்மதேவனிடம் போய் முறையிடுவோம்" என்று நிச்சயித்தவர்களாய் தேவபரிவாரங்கள் அவரிடம் சென்று முறையிட்டனர். சதுர்முகன் எல்லோரையும் ஸ்ரீமன் நாராயணனிடம் அழைத்துப்போனர். வாடிய முகங்களும் வடியுங்கண்ணீருமாய் தலை குவித்தபடி வந்து கூடிநின்ற தேவர்களை ஸ்ரீனிவாசன் கடாக்ஷித்தார். "மகேந்திரா! மதம் அகன்றதா? குபேரா! கொட்டம் படிந்ததா? வருண! புத்திவந்ததா? தருமராஜனே! வழிக்கு வந்தீரோ" என்று கருடபகவான் இவர்களைக் கேட்கலானர். பிரும்மதேவன் தேவர்களது தீனமான ஸ்திதியைப் பகவானுக்கு அந்தரங்கம் உருகும்படி எடுத்துரைத்தார்.

கருணாநிதியான ஸ்ரீபகவான் தேவர்களைக் கண்குளிரக் கடாக்ஷித்து, "தேவர்களே, அஞ்ச வேண்டாம். அபயம் தந்தேன். அவரவர்கள் தொழில்களை, வேதங்கள் மூலமாய் நான் வெளியிட்டபடி சரிவரச் செய்திருந்தால், இந்தக் கஷ்டங்கள் உங்களுக்குக் கனவிலும் நேர்ந்திராது. நீதிகளை மறந்து தோன்றினபடி செல்லத் தலைப்பட்டீர்கள். 'தன்வினை தன்னைச்சுடும்' என்றபடி அதெல்லாம் இப்படி உங்களை வருத்தியது. இனிமேலாவது ஜாக்கிரதையாய் இருங்கள். சகல நிதிகளும் பாக்கியங்களும் இந்தப் பாற் கடலில் மறைந்திருக்கின்றன. உங்களுடைய நடவடிக்கைகள் பிடியாமல் என் திருமார்பை விட்டகலாத ஸ்ரீமதி லக்ஷ்மிதேவியும் அதில்

இப்பொழுது மறைந்து வசிக்கின்ருள். இந்தப் பாற்கடலை நாம் கடையவேண்டியது அவசிய மாகின்றது. கடைந்தால் எல்லாவற்றையும் திரும்ப நாம் எடுத்துக்கொள்ளலாம். மிகுந்த பலத்தையும், நீங்காத ஆயுளையும் தரக்கூடிய அமிர்தமும் இதில் கிடைக்கும். இதற்குச் சரி யான பெரிய மத்தும், நீண்ட பலமான கடை யும் கயிறும் வேண்டும். கடைவதற்காக ஏரா ளமான ஆட்களும், திருப்பாற்கடலின் கரை யில் வந்து ஆஜராகவேண்டும். அசுரர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டியது முறையா கும். மந்தரகிரி மத்துக்கு உதவும். வாசுகியே இதற்குத் தகுந்த கயிறுகக் கூடியவன். இவை யெல்லாம் ஏற்பாடு செய்யுங்கள். நான் சமயத் தில் வந்து தகுந்த உதவிகள் செய்கிறேன்" என்று திருவாய் மலர்ந்தருளி, உடனே அந்தர்த் யானமாயினுர். ஸ்ரீ பகவானுடைய கடாக்ஷ வீக்ஷண்யங்கள் இவர்களுக்கு இதுவரையிலு மில்லாத தைரிய பராக்கிரமங்களையும் உற்சா கத்தையும் கூட்டிவைக்கும் அமிர்த சஞ்சீவி யாய்த் திகழ்ந்தன.

எல்லோரும் குதூகலமாய் அசுரராஜனை விருஷபர்வனிடம் வந்தார்கள். பிரகஸ்பதி வெகு சாதுரியமாய், "அசுரேந்திரனே! கன்று கூடிக் களம்புறித்தால் என்னதாகும்? இந் தத் தேவர்கள் அசாத்தியமான கார்யத்தைச் சங்கற்பித்திருக்கிருர்கள். அது நிறைவேறினல் அதன் பலன் உங்களுக்கு முண்டு. எங்களுக்கு முண்டு. க்ஷீரசமுத்திரத்தைக் கடையவேண் டும். கடைந்தால் சகல சம்பத்துகளும் கை கூடும். அது மாத்திரமில்லை. நரை, திரை, மூப்பு என்பதே யில்லாமல் என்றும் சிரஞ்சீவி யாய் வாழக்கூடிய அமுதமும் அதினின்று கிடைக்கும். இந்தத் தேவர்களுக்கு இதில் நிர ம்ப ஆசைதான். நடக்கவேண்டுமே! இவர்களு க்கு பலமேது? ஒருவருக்கொருவர் ஒற்றுமை தானேது? நான் யோசித்துப் பார்த்தேன். கற்ப தருவை அடைவதுபோல தங்களை அடைந் தால, இக்காரியம் சுலபமாய்க் கைகூடும் என்று எனக்குத் தோன்றியது. அதனுல் தங்களி டம் சலுகையாய் அழைத்துவந்தேன். இந்த ஆலோசனை எப்படியிருக்கிறது?" என்று பழம் நழுவிப் பாலில் வீழ்ந்ததுபோல் சொலல, அசுர ராஜன் சம்மதத்தார். முப்பத்து முக்கோடி தேவர்களும், அறுபத்தாறு கோடி அசுரர்களும் ஏகோபித்து சமுத்திரம்போல் திரண்டு வந் தார்கள்.

மந்தர பருவதத்தினிடம் வந்துநின்று, வந்த காரியத்தைச் சொல்லி, "நீ மத்தாய் வருகிருயா! வேண்டிய அமிர்தம் தருகிருேம்? என்று இவர் கள் வேண்ட, பருவதராஜன், "என்னல் ஆகாது. எனக்கு இந்த வேலையும் வேண்டாம்; இந்தக் கூலியும் வேண்டாம். எங்கள் துணையும் எப்பொழுதாவது வேண்டியிருக்கும் என்று கொஞ்சமாவது எண்ணமிருந்தால், இந்த இந்தி ரன் எங்கள் இறக்கைகளையெல்லாம் வெட்டி யிருப்பானு? நான் வரமுடியாது" என்று பதி லுரைத்தான். அசுரர்கள், "பருவதராஜனே! ஒருவன் செய்த குற்றத்திற்காக, பொதுக் காரி யத்தில் நீங்கள் ஆக்ஷேபிப்பது அழகல்ல. உப காரிகளுக்கு யாருமே உதவி புரிவார்கள். இதில் என்ன குணம் இருக்கின்றது? அபகாரிகளுக் கும் உபகாரம் செய்வதல்லவோ சாதுக்களுக்கு அழகு. நல்லோர்கள் அபகாரங்களை நினைக்கவு மாட்டார்களே! நீங்கள் வரத்தான் வேண்டும்" என, மந்திரன் "நல்லது. சிறகு இல்லாத நான் தானய் வரமுடியாது. என்னைத் தூக்கி எடுத் துச் செல்லுங்கள்" என்று சொல்லி இணங்கி னன். வெகு சிரமப்பட்டு தேவாசுரர்கள் அவ னைப் புரட்டி உருட்டிப் பாற்கடலில் கொண்டு வந்து தள்ளினுர்கள். அது விழுந்த வேகத்தில் அலைகள் புரண்டெழும்பி மேகமண்டலங்களை முழுக்காட்டின.

மறுபடியும் புறப்பட்டு யாவரும் பாதாள லோகம் சென்றுர்கள். வாசுகியை நாணக வர வேண்டுமென்று மன்றுடிக் கேட்டுக் கொண் டார்கள். "காரியம் உங்களது. எனக்கொன்றும் அவசியமில்லை. வேண்டுமானுல் என்னைத் தூக் கிப் போங்கள்" என்று வாசுகி சொல்ல, "இவ்வ ளவாவது வழிவிட்டானே" என்று அவனையும் எல்லோருமாய் எடுத்து வந்தார்கள். வரும் வழியில் தன்னுடைய சுயரூபம் முழுவதையும் காண்பித்து, இவர்களை வாசுகி பலவிதத்திலும் பயப்படச் செய்தான். காரியத்தில் கண்ணு யிருந்ததால் அவர்கள் இதையெல்லாம் பொ றுத்திருந்தார்கள்.

நடுவில் உன்னதமான பருவதமும், சுற்றுமுற் றும் வெள்ளை வெளேரென்று புரண்டுவரும் பால்அலைகளுமாய் க்ஷீரசாகரம் பார்க்கப் பார் க்க வெகு அழகாய் இருந்தது. ஆயிரம் தலை

களுடன் படமெடுத்தபடி வாசுகி யென்னும் பெரும்பாம்பு அந்த மலையைப் பல மடிப்புகளுடன் சுற்றிக்கொண்டு, வாலை ஒருபக்கமும் தலையை ஒருபக்கமுமாய் பரக்க நீட்டியது. மகா விஷ்ணு தலைப்பக்கம் வந்துநிற்க, தேவர்களும் அப்பக்கமே வந்து கூடினார்கள். தேவர்கள் எது செய்தாலும் தங்களுக்கு அதுவிரோதத்திற்காகவே என்று நினைக்கும் சுபாவமுடைய அசுரர்களுக்கு இது அக்கிரமமென்று மனதிற்பட்டது. "நாம் ஆதிதேவர்கள் ; தலையிருக்க வாலாடுமோ ? நாம் தலைவர்களாயிருக்க, இவர்கள் எப்படித் தலைப்பக்கம் பிடிக்கலாம்" என்று முணுமுணுத்துக்கொண்டு, அசுரர்கள் நின்ற விடத்திலேயே நின்றுவிட்டார்கள். இதைக் கவனித்த ஸ்ரீமகா விஷ்ணு, காதுடன் காதாய் தேவர்களை நோக்கி "தேவர்களே ! அவர்கள்தான் இந்தப் பக்கம் பிடிக்கட்டுமே ; பலமாய்ப் பிடிப்பார்கள். வலி பொறுக்கமாட்டாமல், புஸ் என்று சீறி வாசுகி விஷத்தைக் கக்குவான். விஷம் தீண்டி அவர்கள் துடிக்கட்டுமே" என்று சொல்ல, தேவர்கள் வெகு நிர்ப்பந்தத்தால் கொடுப்பதுபோல் அபிநயித்து "எங்களுக்குத் தலைப்பக்கம் கூடாதாக்கும். நீங்களே பிடியுங்கள். நாங்கள் ஏழைகள் தானே ! எங்களுக்கு இந்தத் தாழ்மையான வால்தான் கொடுத்து வைத்தது" என்று சொல்லி வால்புறம் வந்து கூடினார்கள். அசுரர்கள் கொந்தளித்துக் கொண்டு தலைப்பக்கம் மாறி நின்றார்கள்.

வெகு முடுக்காய் அந்தக் கடல் கடையப்பெற்றது. வாசுகியின் மூச்சுக்காற்று உஷ்ணமாய் வெளிப்பட, அசுரர்கள் அதைச் சகிக்க முடியாது மெதுவாய் அந்த சர்ப்பத்தைப் பிடித்தார்கள். மந்தரம் நழுவி விழுந்து பாதாளஞ் சென்றது. வாசுகியும் கட்டவிழ்த்துக் கொண்டான். சமுத்திரம் திமிதிமிங்கலங்களுடன் கலங்கிக் குழம்பியது. எடுத்த காரியம் வீணாயிற்றே! எப்படி மந்தரத்தைக் கடலில்மூழ்கி எடுத்து மறுபடி நாட்டுவது ?" என்று கலிபிடித்தவர்களாய்த் தேவர்கள் ஸ்ரீமகா விஷ்ணுவினிடம் சரண்புகுந்தார்கள். "தேவ தேவோத்தமா ! தேவதா சார்வபௌமா ! போய் விட்டதே மலை பாதாளத்திற்கு! என்ன வழி எங்களுக்கு? தாங்களே எங்களுக்குக் கதி. என்ன செய்வோம் ? ஒன்றுந் தெரியவில்லையே" என்று குழறிய மொழியுடன் வேண்டினார்கள். பரம கிருபாகரரான பரந்தாமன், "அஞ்சவேண்டாம், இதோ எடுத்து நிறுத்துகிறேன் இந்தமலையை" என்று சொல்லி சட்டென்று மறைந்தார்.

கடலோரமாய் ஒரு ஆமைக்குஞ்சு காணப்பட்டது. வெகு அழகாய் அது குதித்தது. அதனைப் பார்க்கப் பார்க்க நிமிஷத்திற்கு நிமிஷம் அது பெருத்து, பர்வதம்போல் ஆகி ஒரே பாய்ச்சலாய்க் கடல் நடுவில் வீழ்ந்துநேராய் கிர்ரென்று அது கடலைக் கிழித்துக்கொண்டு கீழே சென்றது. சிறிது நேரத்திற்கெல்லாம் மந்தரகிரி முன்போல் கடல்மீது நிற்கக் கண்டு எல்லோரும் களித்தார்கள். ஆகாயத்துக்கும் பூமிக்குமாய் கரையெல்லாம் ஜோதியால் நிரப்பிக்கொண்டு பகவான் ஒரு விசுவரூபம் எடுத்தார். அநேக கைகளும் கிரீட குண்டலங்களால் பிரகாசிக்கும் உன்னதமான சிரசும், விஸ்தாரமான வனமாலை அணிந்த மார்புமாய்த் தோன்றிய ஜகதீசன் சில கைகளால் மலையை மேல் எழாது அமிழ்த்திக்கொண்டார். பல கைகளால் வாசுகியை இருபுறமும் பிடித்துக் கடைந்தார். ஆமைரூபமாய் அடியில் நின்றும் மலையைத் தாங்கினார். இப்படி சர்வதேச சர்வகால சர்வவித பந்துவாயிருந்து, பகவான் தேவர்களுக்கு உதவி புரிந்தார். தேவாசுரர்கள் கடைந்ததென்பது பெயருக்கு மாத்திரமே. இந்தக் காரணத்தினால் கிடைக்கப்போகிற அமிர்தத்தை ஸ்ரீ பகவான் தம்மிஷ்டப்படி வினியோகம் செய்வதும் உசிதமாகின்றது. பிரயாசைப் பட்டதெல்லாம் இவர் ஒருவரே யல்லவா ?

இப்படி வெகு நாள் கடையப்படவே, பால்மயமான அக்கடல் தளதள வென்று கொதித்தது. பகவானது கைகளால் கரகர வென்று இழுக்கப்பட்டதனால், வாசுகி திணறினான். வைரத்தினும் கடினமான அவனது உடல் நொறுக்குண்டு, மலை மடிப்பு மடிப்பாய் பள்ள மிட்டது. கொதிக்கும் கடலிற்குள் இருக்க முடியாமல் திமிதிமிங்கிலங்களும், மற்ற கடல் யானை, கடற் சிங்கம் முதலிய ஜலஜந்துக்களும் மேல் வந்தன. தபித்துத் தபித்து அவைகள் வட்ட மிட்டுச் சுழன்றன. அவற்றின் வால்களால் பலமாய் அடிபட்டு அலைகள் அண்டகடாஹம் வரையில் எட்டுத் திக்குகளெங்கும் முட்டி உலகங்களை ஒரே ஜலமயமாய்க் காண்பித்தன. உலை நீர்போல் படபடவென்று பயங்

கரமாய் இந்த ஜந்துக்களையெல்லாம் பொறித்துக்கொண்டு அக்கடல் பேரிரைச்சலிட்டது.

சில காலம் செல்லவும் திடீரென்று இவ்வோசை அடங்கியது. ஜீவராசிகளெல்லாம் உயிரற்று வற்றலாய் மிதந்து நின்றன. உலகெல்லாம் ஓரே இருள் மயமாய் மூடிண்டது. மைச்சுருள்போல் ஏதோ ஒன்று கடலின்மீது சுழன்று சுழன்று கண்களை மயக்கிக்கொண்டு எழும்பியது. அதனைப் பார்த்த கண்களெல்லாம் அப்படியே விலுவிலுத்து அசைவற்று நின்றன. மொழிகள் தெரிக்கலாயின. அஸ்திகள் விலவிலத்தன. மூச்சுப்பேச்செல்லாம் யாவருக்கும் ஒடுங்கியது. உத்தரக்ஷணத்தில் உலகெல்லாம் சூன்யமாய் விடவேண்டியது தான் தாமதமாயிருந்தது. அப்படிக் கடோரமாகக் கடலினின்றெழும்பியது மகாபயங்கரமான காளகூடவிஷமென்று அறிந்து, பரமேசுவரனைத் தியானித்தபடி யெல்லோரும் பொம்மைபோல் ஸ்தம்பித்து நின்றார்கள்.

ஸ்ரீமன் நாராயணன் பரமேசுவரனைக் கிட்டிவந்து, 'ஏ! பிரணதார்த்திஹர! ஏன் சும்மா யிருக்கின்றீர்கள்? இந்த ஆலகாலம் முதன்முதல் வந்தது. முதன்மையான பூஜைக்குத் தாங்களே தகுந்தவர்கள். இது உங்கள் பாகமாகட்டும். இதை உடனே உட்கொண்டு ஜகத்தை ரக்ஷியுங்கள். உங்கள் வாமபாகத்திலுள்ள மங்கை நாயகியின் கடாக்ஷ வீக்ஷண்யத்தினால் இது உங்களை ஒன்றும் செய்யாது" என்று வேண்டினார்.

தயாநிதியான த்ரயம்பகக் கடவுள், அபயஹஸ்தத்தால் தேவாசுரர்களைத் தேற்றிவிட்டு, "ஏ! விஷமே? இங்கே வா?" என்று அங்கையை மலர்த்திக் காட்டினார். பரமபக்தியுள்ள சீடன்போல் அவ்விஷம் அடங்கி யொடுங்கி ஒரு சிறு லேகியத்துண்டத்தையொத்து அங்கையின்மீது வந்துநின்றது. அதை அப்படியே ஈசன் அமுதமாய் உட்கொண்டார். அது நெஞ்சினிடமிறங்க, ஈசனது கழுத்து கன்னங்கரேலென்று கருத்தது. இதனால் நீலகண்டனென்று இக்கடவுள் புகழ்பெயர் பெற்றார். பார்வதிதேவி, "நாதா! இது கண்டத்தின்கண்ணே நிற்கட்டும். இதை உண்டதால் வெளியிலுள்ள புவனங்களை ரக்ஷித்துவிட்டீர்கள். கழுத்தின்கீழே இது சென்றால் அங்கு உங்கள் இருதயத்திலிருக்கும் புவனங்களனைத்தும் அழித்துவிடுமே. என் பச்சைக் குழந்தைகள் வாழுமிடமாச்சுதே" என்று சொல்லி, மெல்லிய மலர்க்கையால் ஈசனது கண்டத்தைப் பிடித்து விஷத்தை அப்படியே அங்கு நிற்கச் செய்தாள். "குழந்தையின் அருமை தாய்க்குத் தெரியும்" என்று பிரம்மாதிகள் அம்பிகையைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். சராசரங்கள் பிழைத்தன. மறுபடியும் பார்க்கடல் கடையுண்டது. ஜ்யேஷ்டாதேவி என்ற அக்காள் வெளிவந்தாள். அவள் எவ்வளவு அழகாயிருந்தும் ஒருவரும் கவனிப்பாரில்லாமல் மகாவிஷ்ணுவை அவள், "எனக்கு என்ன வழி?" என்று கேட்க, பகவான் அவளைப் பார்த்து, "பெண்ணே! உன்னை வீணாய்ச் சிருஷ்டிக்கவில்லை. நிக்ரஹ ரூபமான என் அனுக்கிரகத்திற்கு நீ முக்கியமான துணையாகின்றாய். பொய்புகலல், சூதாடல், கள்ளுண்டல், சோம்பித் திரிதல், சந்தியா காலங்களில் துயிலுருதல், ஆள்காட்டி விரலால் பல்துலக்குதல், ஈரக்காலுடன் படுத்தல், கழுதை, வாருகோல் இவைகளின் நுனிபட நிற்றல், தீபநிழல் மனிதர் நிழலில் தங்குதல், துர்வார்த்தையாடல் முதலிய துர்க்குணங்களுள்ளவர்களை நீ பீடித்துப் படுத்தும் பாட்டில் அவர்கள் சன்மார்க்கத்திற்கு வரவேண்டும். இதுவே உன் தொழில். செல்வாய்"என்று அவளுக்கு கட்டளையிட்டார்.

உச்சைசிரவஸ் என்று சொல்லப்பெற்ற வெண்குதிரை நீந்திக் கரைவந்தது. ஐராவதம் என்ற வெள்ளையானையும் வெளிவந்தது. இவைகளை இந்திரன் எடுத்துக்கொண்டான். கௌஸ்துப ரத்னம் பளபளவென்று வெளிப்பட்டது. அதனை ஸ்ரீனிவாசன் திருமார்பில் அணிந்துகொண்டார். பாரிஜாதம் தோன்றியது. அதை இந்திரன் தன் தோட்டத்திற்கு அலங்காரமாக்கினான். கண்களால் நீலோற்பல மலர்களையும், முகங்களால் பல சந்திரர்களையும், அங்கங்களால் கோடிகோடியாய் தங்கக்கொடிகளையும் வருஷித்துக்கொண்டு, சலசலவென்று தண்டைகள் ஒலிக்க, அலைகள்மீது அப்ஸர ஸ்திரீகள் தோன்றி நடனமிட்டுக்கொண்டே கரையேறினார்கள். எல்லோரும் அவர்களை விரும்பியதால் அவர்கள் தேவர்களுக்குப் பொதுவானார்கள். இதன்பிறகு, ரத்தினங்களும் ஓஷதிகளும் வெளிப்பட்டன. இவற்றை எல்லோரும் வேண்டினார்கள். (தொடரும்.)

முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா மின்சொ லினதே யறம்.

ஸ்ரீகிருஷ்ண கர்ணாமிருதம்

SRI KRISHNA KARNAMRUTHAM

त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवराम्बरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥

"த்ரிபுவனகமனம் தமாலவர்ணம்
ரவிகரகௌரவராம்பரம் ததானே ||
வபு ரளககுலாவ்ருதானனாப்ஜே
விஜயஸகே ரதிரஸ்து மே நவத்யா"

---

(5) मधुरतरस्मितामृतविमुग्धमुखाम्बुरुहं
मदशिखिपिञ्छलाञ्छितमनोज्ञकचप्रचयं ।
विषयविषामिषग्रसनगृध्नुषि चेतसि मे
विपुलविलोचनं किमपि धाम चकास्तु चिरम् ॥

மதுரதர ஸ்மிதாம்ருத விமுக்த முகாம்புருஹம்
மதசிகி பிஞ்சலாஞ்சித மனோஞ்ஞ கசப்ரசயம் ||
விஷய விஷாமிஷ க்ரஸன க்ருத்னுஷி சேதஸி மே
விபுலவிலோசனம் கிமபி தாம சகாஸ்தி சிரம் ||

"சுகந்தம், செவ்வி, மென்மை முதலிய குணங்களால் தாமரைப் பூப்போல் விளங்கும் ஸ்ரீ கண்ணனது திருமுகமானது, அமுதிலும் இனியதான முறுவலினால் பார்ப்பவரைத் தம்மிடமே மயங்கச்செய்யக் கூடியதாயிருக்கிறது. ஸ்வயம் சுந்தரமான அவரது குழற்கற்றைகளோ மதங்கொண்ட மயில்களின் தோகைகளாலலங்கரிக்கப்பெற்று வெகு அழகாய் விளங்குகின்றன. அவரது நேத்திரங்கள் வெகு விசாலமானவைகளாயும், காண்பவர் மனத்தைக் கவரக்கூடியவைகளாயுமுள. இவ்வித வைபவங்கள் நிரம்பியதும், இன்னது என்று முழுதிலும் வர்ணித்துச் சொல்ல முடியாததுமான தேஜோ ரூபமாயுள்ள பரதத்வமானது, விஷங்கலந்த மாம்ஸத்துக்கொப்பான சிற்றின்பாதிகளில் ஆசைகொண்டு அலைந்துதிரியும் என் மனத்தில் நீடித்திருந்து விளங்குகிறது." இதனால் லீலாசுகர், ஆதிமுதல் அற்பமான விஷய சுகங்களிலேயே பற்றுவைத்துத் தடுமாறிக் கொண்டிருந்த தமது மனத்தை, ஸ்ரீ பகவான் கருணைகூர்ந்து, தமது திருமேனி ஸௌந்தர்யாதுகளைக் காட்டி, விஷத்திற்கொப்பான ஐஹிக சுகங்களிலிருந்தும் விடுவித்து, தம்மிடமே நிலைபெற்று நிற்கும்படி செய்துள்ளார் என்று சொல்லி, தமக்கேற்பட்ட பகவத் ஸ்வரூப ஆனந்தத்தை வெளியிடுகிறார். கண்ணனுடைய உத்தம ரூபலாவண்யத்தைக் கண்டு ஈடுபடுவோருக்குக் கேவல உலகசுகங்களில் ருசி பிறக்குமா? "அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றைக் காணாவே" எனவே ஆழ்வார்கள் அனுசந்தித்து ஆநந்தபரவசரானார்கள்.

(6) मुकुलायमान नयनाम्बुजं विभो
र्मुरली निनादमकरन्दनिर्भरम् ।
मुकुरायमान मृदुगण्डमण्डलं
मुखपङ्कजं मनसि मे विजृम्भताम् ॥

முகுளாயமான நயனாம்புஜம் விபோர்
முரளீ நிநாதமகரந்தநிர்பரம் |
முகுராயமான ம்ருதுகண்டமண்டலம்
முகபங்கஜம் மனஸி மே விஜ்ரும்பதாம் ||.

"ஸ்ரீ கண்ணபிரானது கண்கள் தாமரை மொக்குகள்போல் நடுப்பெருத்து, இரண்டருகுகளில் சிறுத்தும், சற்றுச் சிவந்தும் மனோஞ்ஞமாயிருக்கின்றன. அவரது முகத்தில் வேணுகானமாகிற தேன், எங்கும் பரவி நிற்கிறது. அவருடைய கபோலப் பிரதேசமானது மிக்க மிருதுவாயும், சுத்தமான கண்ணாடிபோல் பளபளவென்று பிரகாசமுள்ளதாயும் விளங்குகிறது. இவ்வித சிறப்புற்ற அவரது முகாரவிந்த தர்சனத்தாலுண்டாகும் ஆநந்தம் என் மனத்தை விட்டகலாமல் பெருகக் கடவது!" இதனால், லீலாசுகர் தம் மனதை அழிவுள்ள விஷய சுகங்களிலிருந்து திருப்பிக் காப்பாற்றின கருணாநிதியான பகவான் விஷயத்தில், அவரது முககமல ஸேவையை இடைவிடாது அனுபவித்து வருவதே தக்கதோர் உபகார ஸ்மிருதியாகும் எனக் கருதுகிறார்.

(7) कमनीयकिशोरमुग्धमूर्तेः
कलवेणुक्वणितादृताननेन्दोः ।
मम वाचि विजृम्भतां मुरारे
र्मधुरिम्णः कणिकाऽपि कापि कापि ॥

கமநீயகிசோர முக்தமூர்த்தே ః
கலவேணுகவணிதாத்ருதானநேந்தோః |
மம வாசி விஜ்ரும்பதாம் முராரேர்
மதுரிம்ண ః கணிகாபி காபி காபி ||

"பகவானுடைய இளம்பர்வத்திலுள்ள திருமேனியின் சோபையைக்கண்டு ஆசைப்படாதவர் யாருளார்? சந்திரனைப்போல் பார்ப்பவர் கண்களுக்கு அளவற்ற ஆநந்தத்தை உண்டுபண்ணக்கூடிய அவரது திருமுகமண்டலத்துக்கு, அவர் அற்புத வேணுகானத்தாலுண்டாகும

தன்புறாஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு மின்புறாஉ மின்சொ லவர்க்கு.

சோபையை வர்ணிக்கவொண்ணாது. முராஸுரனை ஸம்ஹரித்த பகவானுடைய ரூபலாவண்யங்கள் மிகவும் போக்கியமானவை. இவ்வித போக்கியதையின் ஒரு அணுவையாவது வர்ணிக்கும் திறமை என் வாக்கிலுண்டாகட்டும்." பகவானது ஸௌந்தர்யாதி விபவங்களை மனத்தால் அறிந்து அனுபவிப்பது போதாது என்று நினைத்த லீலாசுகர், அவற்றைச் சற்றாவது வர்ணித்துத் துதிக்கவேண்டிய சக்தி தமக்கு உதிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறார். "பகவானை நோக்கும் ஆடவர்களுடையவும் பார்வையையும் மனோவியாபாரங்களையும் கவர்ந்து, அவர்களை மெய்ம்மறந்து நிற்கச்செய்யும்" ரூபசௌந்தர்யம் அபாரமென்றும், அதில் ஒரு லேசத்தையாவது எடுத்துக் கூறுவதற்கான சக்தி தமக்குண்டாகவேணுமென்று கர்ணாம்ருதாசாரியர் கோருகிறார். பகவானுடைய குழந்தைப் பர்வத்திலுள்ள திருமேனியழகு, அதிலும், அவர் வேணுகானஞ் செய்யுங்கால், அமிர்த தாரைபோன்ற கீதத்தின் இனிமை, அப்போது அவர் முகத்தில் காணப்படும் விசேஷ சோபை இவற்றின் ஸ்வாரஸ்யத்தை நம்போன்ற சாதாரண மானிடர்கள் அறிவது அரிது. பகவத் கிருபா கடாக்ஷத்தால் லீலாசுகர் அவற்றையெல்லாம் ஸாக்ஷாத்கரித்து அனுபவித்தவராதலால், பல அவசரங்களில் பலவாறாக விளங்கும் பகவானுடைய ரூபலாவண்யாதிகளை அடிக்கடி வர்ணித்துக் கூறுவதில் புனருக்ததோஷ மேற்பட நியாயமில்லை.

(8) मदाशिखण्डिशिखण्ड विभूषणं
मदनमन्थरमुग्धमुखाम्बुजम्।
व्रजवधूनयनाञ्चलवाञ्चितं
विजयतां मम वाङ्मयजीवितम्॥

மதசிகண்டி சிகண்ட விபூஷணம்
மதனமந்தர முக்தமுகாம்புஜம் |
வ்ரஜவது நயநாஞ்சல வஞ்சிதம்
விஜயதாம் மம வாங்மயஜீவிதம் ||

"மதமேறின் மயில்களின் தோகைகளாலலங்கரிக்கப்பட்ட கொண்டையோடு கூடினவனும், ஸௌந்தர்யம் நிரம்பியதும், பார்ப்பவர் மனத்தைக் கவர்ந்து வசீகரிப்பதில் தாமரை மலரைக் காட்டிலும் விசேஷ சோபை வாய்ந்ததுமான முகத்தை யுடையவனும், ஆயர்பாடியிலுள்ள ஸ்திரீகளின் கடைக்கண்பார்வைகளால் வசீகரஞ் செய்யப்பட்டவனும், எனது கிரந்தத்துக்கு ஆதார வஸ்துவாயுமுள்ள பகவான் ஸர்வோத்கர்ஷமாய் விளங்கக்கடவர்!"

உலகில் முகவழகை தாமரைப்பூவுக்கு ஒப்பிட்டுச் சொல்வது கவி சம்பிரதாயம். ஆனால், சாதாரணத்தாமரை மலரை பகவானுடைய திருமுகமண்டலசௌந்தர்யத்துக்கு உபமானமாகச் சொல்லுதல் பொருந்தாது. தாமரைப் புஷ்பத்தைக் காட்டிலும் எத்தனையோ ஆயிரமடங்கு விசேஷ சோபையுள்ள திவ்விய புஷ்பத்தை அவரது முகத்துக்கு ஈடாக ஒருவாறு சொல்லக்கூடும். இதைக் காட்டுவதற்காகவே அவரது முகாரவிந்தம் விசேஷகாந்தியும் வசீகரிக்குந்தன்மையுள்ளது என்று சொல்லப்பட்டது. பகவான் கோபஸ்திரீகளுக்கு வச்யனாயிருந்தார் என்பதால்அவர் ஆச்ரிதபரதந்திரர் என்று கொள்ளவேண்டும், உலகசுகங்களாகிற வலையிற் சிக்கித் தவிக்கும் சாதாரண மானிடர்போல், பகவான் கோபிகளின் ப்ராகிருத அழகில் மயங்கி அவர்களுக்கு வசமானார் என்று நினைத்தல் தவறு. கோப கன்னிகைகள் அவரிடங்கொண்ட மனப்பாங்கையும், நிஷ்களங்கமான பக்தியையும், இறுதியில் அவர்களுக்குத் தேகாபிமானமழிந்து, அவர்கள் அவருடன் ஐக்கியமாகி அடைந்த நற்கதியையும் யோசித்துப் பார்க்கில், அவர்களுடைய சலனமற்ற பக்திக்குக் கட்டுப்பட்டே பகவான் அவர்களைச் சந்தோஷிப்பித்துக் காப்பாற்றினார் என்பது விளங்கும். நரஸ்துதி செய்து கிடைத்த தனத்தை மிகக் கேவலமான விஷயசுகங்களிற் செலவிட்டு, மகா பாபத்தை மூட்டைமூட்டையாய்ச் சம்பாதித்துவந்த லீலாசுகரை பகவான் நல்வழியில் திருப்பித் தம்மைக் கவிபாடிக் கிருதார்த்தமாகும்படி செய்ததற்காக, அம்மஹான் நன்றியறிதல் பாராட்டி, அந்த பரமாத்மாவின் மாகான்மியம் மேன்மேலும் வளர்ந்தோங்கக் கடவது என்று மங்களாசாஸனஞ் செய்கிறார்.

பஞ்சாத் தினம்.—புதிய பதிப்பு. 5-அழகிய ஆப்டோன் படங்கள் கொண்டது. சிறுவர் சிறுமியருக்கு உபயோகமாகும்படி, எளிய நடையில் எழுதப்பட்டது. இதில் சீதை, ருக்குமணி, சகுந்தலை, தமயந்தி, சாவித்திரி முதலிய ஐந்து ஸ்திரீ ரத்தினங்களின் சரித்திரம் கொண்டது. இது ஒவ்வொருவர் வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய நூல். அதி விரைவில் ஆறு பதிப்புகள் வெளிவந்திருப்பதே, இந்நூலின் உயர்வை நன்கு விளக்கும். விலை அணா. 12.

√காளிதாஸ் மகா கவி

KALIDASA, THE GREAT POET

காளிதாஸ மகாகவியின் ஜீவகாலத்தைப் பற்றி மேனாட்டு ஸம்ஸ்கிருத வித்வான்களின் அபிப்பிராய பேதங்களும், ஆங்கிலபாஷையில் தேர்ச்சிபெற்று மேனாட்டாரின் வழியை யனுசரித்து நம் நாட்டுச் சரித்திரத்தை ஒழுங்கு படுத்துவதில் ஊக்கமுள்ள இந்திய வித்வான்களுடைய ஆலோசனைகளும் முன்னர் எடுத்துக் கூறப்பட்டன. இவற்றின் பிரகாரம் காளிதாஸ மகாகவி கிறிஸ்து பிறந்து 500-வருஷங்களுக்குப்பின்னரும், 550-வருஷங்களுக்குமுன்னரும் இருந்திருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. அதாவது, கலியுகாதி 3600-வருஷங்களுக்கு முந்தி அவர் இருந்திருக்க முடியாதென்று மேற்கூறியவர்கள் நிச்சயிக்கிறார்கள். நமது காளிதாஸ கவி மேற்கூறிய காலத்துக்குப் பல நூற்றாண்டு முன்னுள்ளார் என்று சொல்வதால் ஏற்படக்கூடிய பிராசீனகாலத்தைஒப்புக்கொள்ளச் சகியாத பாச்சாத்ய பண்டிதர்களும், இந்திய சரித்திரக்காரர்களும் பலருளர். நமது தேசகவிகள், சரித்திரங்கள் முதலானவற்றின் காலநிர்ணயஞ் செய்வதில், மேற்கூறிய இரு வகுப்பினர்களின் கொள்கைகள் பெரும்பாகம் ஒற்றுமையுள்ளவையெனச் சொல்லலாம். நம் நாட்டிலுள்ள புராணங்களோ, பூர்வீக சரித்திரங்களோ முழுமையும் நிராகரிக்கத்தக்கவை என அவர்கள் எண்ணுகிறார்கள். அவர்கள் நினைக்குமாறு முந்திய யுகங்களில் நடந்ததாய்ச் சொல்லப்பட்டுள்ள சம்பவங்கள், அமானுஷிய கிருத்யங்கள் முதலானவை கட்டுக்கதைகள்; இவைகள் நம்பத்தக்கவையல்ல என்று வைத்துக்கொள்வோம். பாரத யுத்தத்திற்குப் பிறகு உண்டாய ராஜ்யங்கள், அரசாட்சிகாலம் இவை போன்ற விபரங்கள் பாகவதம், விஷ்ணுபுராணம், வாயுபுராணம் முதலிய கிரந்தங்களில் வியக்தமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளைக்கொண்டும், தாமிரசாஸனாதி சாதனங்களைக்கொண்டும் பூர்வீக கவிகள் முதலானோரின் கிரந்தங்களில் தோன்றும் சாக்ஷியங்களை சமரசப்படுத்தி, நம் பூர்வீகர்களின் சரித்திரத்தைக் கண்டறியக்கூடியதா யிருப்பினும், மேற்கண்ட புராணாதிகள் முன்பின் விரோதங்கள் நிறைந்து, சரித்திர காலநிர்ணய விஷயத்தில் உபயோகமற்றிருக்கின்றன என்பதே மேனாட்டு வித்வான்களுடையவும், அநேகமாய் அவர்களை யனுவாதஞ் செய்து பேசும் ஆங்கிலபாஷா பண்டிதர்களான நம் தேசத்தவர்களுடையவும் அபிப்பிராயம்.

பூர்வீககாலத்தில் மிக்க நாகரிகம் வாய்ந்ததெனக் கொண்டாடப்பட்ட **கிரேக்கதேச** சரித்திரத்தில் நமது பரதநாட்டைக்குறித்து ஏதாவது தகவல்கள் காணப்பட்டால், அவற்றை வேதவாக்கியமாகக் கொண்டு, அவற்றிற்கு ஏற்றவாறும், **ஹ்யூன்ஸாங்** முதலிய சீனதேசத்துப் பிரயாணிகளின் குறிப்புகளுக்கு ஒத்த விதமும், இந்திய நாட்டின் பூர்வீக சிறப்பைக் குறைத்துக் கூறவேண்டுமென்று இயல்பாயுண்டான ஆவலோடுகூடிய பாச்சாத்திய ஸம்ஸ்கிருத பண்டிதர்களின் மனப்பாங்குக்கு அனுகூலமாயும், நமது நாட்டுச்சரித்திர விஷயமாக காலநிர்ணயம் பண்ணவேண்டுமென்கிற சம்பிரதாயம் காணப்பட்டுவருகிறது. அவர்களிடமுள்ள கௌரவ புத்தியாலோ, தம் நாட்டின் பெருமையை எடுத்துப் பேசுவது வீண்பெருமையாகும் என்று பயந்தோ, மற்றைய எவ்வித காரணங்களாலோ ஆங்கிலபாஷாப் பிரவீணர்களான நம்மவர் பலரும் இவ்வித சம்பிரதாயத்தைத் தழுவியே பேசிவருகிறார்கள்.

சரித்திர காலநிர்ணய விஷயமான இவ்வித தோரணையை ஒப்புக்கொள்ளாத நம் தேசத்து ஸம்ஸ்கிருத பண்டிதர்களும் ஆஸ்திகர்களுமிருக்கிறார்கள். அவர்களது புத்திசாதுரியமும், படிப்பின் விசாலமும், பக்ஷபாதமின்றியே பிரமாணங்களை ஆராய்ந்து அபிப்பிராயமளிக்கும் தன்மையும் குறைந்தவை யல்ல. 'அதி நுட்பமான ஆராய்ச்சி' (Critical Research) விஷயத்திலும் இவர்களது சாதுர்யம் மெச்சத்தக்கதே. இவ்வித ஆராய்ச்சியின் மேம்பாடு, மேனாட்டுப் பண்டிதர்களின் மனப்பாங்குக்கு ஒவ்வாததா யிருத்தலால், அவர்களும், அவர்கள் கோஷ்டியைச் சேர்ந்த நம்மவர்களும் இதை அங்கீகரியார்; எனினும், பரததேச வாசிகள் நமது பண்டிதர்களின் அபிப்பிராயத்தை ஸ்தூலமாயாவது தெரிந்துகொள்ளல் அவசியம். இருதிறத்தார்களது அபிப்பிராய பேதங்களையும் தெரிந்துகொண்டு நமது தேசவாசிகள் தத்தமக்குத் தோன்றும் தீர்மானத்தைக் கைப்பற்றல் உசிதமாகும்.

காளிதாஸன் கி. பி. ஆறாவது நூற்றாண்டிலிருந்ததாய்ச் சொல்வதற்கான முக்கிய கார

ணங்களும் அவற்றிற்கு ஆக்ஷேபரூபமான நம் தேச பண்டிதர்களின் ஆலோசனைகளும் :—

(1) "**மேகஸந்தேச** கிரந்தத்தில் காளிதாஸ விரோதியான **திங்நாகர்** என்பவரைப் பற்றிய தகவல் காணப்படுகிறது. இவர் சுமார் கி. பி. 530-ல் ஸ்ரவஸ்தி விக்ரமனது காலத்தில் இருந்தாரென அவர்களால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் காளிதாஸனும் சற்றேறக்குறைய அக்காலத்தி லிருந்திருக்கவேண்டும்."

இதற்கு ஆக்ஷேபம் :—காளிதாஸன் குறிக்கும் **திங்நாகாசாரியரே** அக்காலத்தி லிருந்தவரில்லை. கிறிஸ்து பிறப்பதற்கு முந்தியே உண்டாய **பட்டாசாரியர்** என்னும் வித்துவான், '**ச்லோக வார்த்திகம்**' என்ற தமது கிரந்தத்தில் திங்நாகருடைய மதத்தை அனுசரித்துக்கூறியிருக்கிறார். ஆகையால் திங்நாகரே, கிறிஸ்துவின் பிறப்பிற்கு முன்னுண்டானவர்; சுமார் கி. பி. 530-ல் ஏதாவது திங்நாகர் இருந்ததாய் ஏற்பட்டால், இவர் முற்கூறிய திங்நாகரைக் காட்டிலும் வேறானவராக இருக்கவேண்டும்.

(2) "கி. பி. 499-ல் இறந்த **ஆரியபட்டர்** என்ற வானசாஸ்திர வித்வானது கொள்கைகள் காளிதாஸனது கிரந்தங்களில் காணப்படுகின்றன. இவர் கிரேக்கர்களிடமிருந்து அநேக வானசாஸ்திரத் தகவல்கள் கற்றறிந்துள்ளோர். இவ்வாறு அவர் கற்று உபயோகப்படுத்திய வார்த்தைகளுள் '**ஜாமித்ரம்**' என்பது ஒன்று. இது கிரேக்க பாஷையிலுள்ள **டயமெட்ரன்** (Diametron) என்னும் பதத்திலிருந்துண்டாயது. இந்த ஜாமித்ர பதத்தைக் காளிதாஸன் **மேகஸந்தேசத்தில்** உபயோகப்படுத்தி யிருக்கிறார். ஆகையால் இவர் ஆரியபட்டருக்குப் பின்னர் இருந்தவரே."

கிரீஸ்தேசத்துக்கு வெகுகாலம் முந்தியே, வெகுவித நாகரிகம்வாய்ந்துள்ள நமது பாரததேசத்திலிருந்து பூர்வகாலத்தில் மேனாட்டார் பலரும் அநேக அரிய விஷயங்களைக் கற்றுணர்ந்துள்ளார் எனினும், இதுவிஷயத்தில் மேனாட்டு ஸம்ஸ்கிருத பண்டிதர்களுக்குப் பொதுவான மனப்பாங்கு ஒன்றுண்டு. அதாவது நாகரிகத்திலோ, கல்வி விஷயங்களிலோ உத்கர்ஷமானது நமது தேசத்திலும், **கிரீஸ்** முதலிய மேனாடுகளிலும் இருப்பதாய்க் காணப்பட்டால், அதை நம் நாட்டார் பிறரிடமிருந்து கடன்வாங்கி யிருக்க வேண்டுமென்பதே அவரது துரபிமான மூலமான கொள்கை. இதை அனுசரித்தே, நமது பூர்வீக வானசாஸ்திரங்களில் காணப்படும் பல விஷயங்கள் கிரேக்கர்களிடமிருந்து ஹிந்துக்களால் கிரகிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதை ஒப்புக்கொண்டே பேசுவோம். மேற்கூறிய **ஜாமித்ரம்** என்பது ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட ராசிச் சக்கரத்தில் ஜன்ம லக்கினத்துக்கு ஏழாவது பாவம் (7th sign) அல்லது **ஸ்தானத்தைக்** குறிக்கும் பதம். வெகுப் பிராசீனமான **நாரதஸம்ஹிதை** முதலான கிரந்தங்களில் ஜாமித்ரபதத்தின் சப்தோற்பத்தியும் (Derivation), அதுவும் மற்ற ஆறு பதங்களும் இலக்கினத்துக்கு ஏழாவது பாவத்தைக் குறித்துக் கூறுமென்கிற தகவலும் பிரசித்தமாய்க் காணப்படுகின்றன. ஆகையால் கிரேக்கர்களிடம் ஞானப்பிச்சை வாங்கியுள்ள ஆரியபட்டரிடமிருந்துதான் காளிதாஸன் அந்தப் பதத்தைக் கடன்வாங்கிப் பிரசித்திபெற்றான் என்று சொல்வதற்கிடமில்லை. ஆகவே, அவர் ஆரியபட்டருக்குப் பின்புதான் இருந்திருக்கவேண்டுமென்று நிர்ணயிக்க வொண்ணாது.

(3) இவ்விதமே **ரகுவம்ச** கிரந்தத்தில் "பூமியின் பிரதிபிம்பம் அல்லது சாயையானது, சுத்தமான சந்திரனுக்குக் களங்கமாக ஆரோபிக்கப்படுகிறது." இங்குப் பூமியின் சாயை சந்திரபிம்பத்தின்மீது படுவதால், கிரகண முண்டாகிறது என்று அர்த்தம் பண்ணிக்கொண்டு, இவ்விதக் கொள்கை கிரேக்கர்களிடமிருந்து ஹிந்துக்கள் அறிந்தவர்களாதலால், காளிதாஸன் **ஆரியபட்டருக்குப்** பிறகுண்டானவர் எனச் சொல்லப்படுகிறது. பிராசீன கவிகளின் சம்பிரதாயத்தை யனுசரித்து, சந்திரனில் காணப்படும் களங்கத்தைப் பலவாறாக உத்பிரேக்ஷித்துக் கூறுவதுண்டு. அதன் பிரகாரம் காளிதாஸனும் கூறியிருக்கிறாரே ஒழிய, இது கிரஹண விஷயமான சர்ச்சை இல்லையாதலால், மேனாட்டுப் பண்டிதர்களின் இது சம்பந்தமான ஊஹம் ஆதாரமற்றதே யாகும்.

(4) "**ரகுவம்சத்தில்**, ரகு மஹாராஜன் **ஹூணர்களை** (Hunas) ஜயித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஹூணர்கள் கி. பி. ஐந்தாவது நூற்றாண்டுக்குப் பிறகே இப்பாரத தேசத்தின் மீது படையெடுத்து வந்திருக்கிறார்கள். காளிதாஸன் தமது காலத்திலுள்ள ஏதோ அரச

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

னது வீரச்செயல்களையே, சூரிய வமிசத்துப் பிரசித்த சக்கிரவர்த்தியான **ரகுவின்** பராக்கிரமங்களாக ஆரோபித்துக் கூறிக் கொண்டாடியிருக்கிறார். ஆதலின் அவர் கி.பி. 500-வருஷங்களுக்குப் பின்னரே இருந்திருக்கவேண்டும்'' என்பது மேனாட்டாரின் கொள்கை. வெகுப் பிராசீனர்களான ரகுவமிசத்தவர்களுக்கு உத்கர்ஷம் சொல்லவிரும்பிய காளிதாஸ கவி விஷயத்தில், தற்கால அரசர்களைப் பூர்வீகர்களுக்கு சமானமானவர்க ளென்றே அவர்களாகவே ஆரோபித்து வர்ணித்திருக்கிறார் என்பது பொருந்தாது. இவ்விதக் கற்பனை வேறெங்கும் காணப்படவில்லை. மேலும், ஹூணர்கள், சீனர்கள் முதலானோர் விசுவாமித்திர ராஜாவால் உபத்திரவிக்கப்பட்ட வசிஷ்ட மஹரிஷியின் காமதேனுவினிட மிருந்து சிருஷ்டிக்கப்பட்டனர் என்று ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது. யுகாந்தரத்தி லுண்டான ரகுமஹாராஜன், மேற்சொன்னவாறு அக்காலத்திலுண்டாயுள்ள ஹூணர் முதலான ஜாதியாரின் ஸந்ததியாரை ஜயித்தான் என்று வர்ணிப்பதில் உசிதக் குறைவு இருப்பதாகத் தெரியவில்லை. ரகுசக்கரவர்த்தி, மேனாட்டிலிருந்து வந்ததாகக் கூறப்படும் கலியுக ஹூணர்களை ஜயித்தான் என்று ஏமாற்றிச் சொல்வதில் காளிதாஸனுக்கு லாப மிருப்பதாய்த் தெரியவில்லை.

(5) "**விக்கிரமாதித்ய** அரசனது சபையை அலங்கரித்துவந்த நவமணிகளுள் காளிதாஸனும், வராகமிகிரரும் கூறப்பட்டுள்ளார். இந்த விக்கிரமாதித்யன் **காரூர்** சண்டையில் சகர்களை ஜயித்து, **விக்கிரமசகம்** எனும் காலாரம்பத்தை ஏற்படுத்திய உஜ்ஜயினீ சக்ரவர்த்தியான ஸ்ரீ ஹர்ஷ விக்ரமாதித்யன் என்றும், இவன் சுமார் கி.பி. 580-ம் வருஷத்தில் சிலாதித்யனுக்குப் பிறகு ராஜ்யபாரம் வகித்துவந்ததாய்ச் சீனதேசீய யாத்திரிகனான **ஹ்யூன் ஸாங்** எழுதியுள்ள குறிப்புகளிலிருந்து ஏற்படுகிற தென்றும், அவ்விதமே வராகமிகிரரும் கி. பி. 587-ம் வருஷத்தில் இறந்தாரென்று அவரது கிரந்தங்களிலுள்ள சில பிரமாணங்களைக் கொண்டும், அவர் காலத்திருந்ததாகக் கூறப்பட்டுள்ள நக்ஷத்திரங்களின் நிலைமையைக் கொண்டும் ஊஹிக்கப்பட்டிருக்கிற தென்றும், ஆகையால் இவர்களுக்கு ஸமகாலிகரான காளிதாஸனும், கி. பி. ஆறுவது நூற்றாண்டி லிருந்திருக்க வேண்டும்'' என்று சில மேனாட்டுப் பண்டிதர்கள் நிர்ணயித்து, அதை நம்மவரில் பலசரித்திரக்காரர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவ்வித கால நிர்ணயத்தை ஒப்புக்கொள்ளாத பாச்சாத்ய வித்வான்களும் உளர். மேற்கூறியவற்றிற்கு நமது பண்டிதர்கள் வெகு சமாதானங்கள் கூறியுள்ளார். அவற்றைச் சுருக்கமாய் எடுத்துக்கூறுவோம்.

(6) விக்கிரமாதித்யன் எனப் பெயர்பூண்ட மன்னர்கள் அநேகர். இவர்களுள் எவர் **சகப் பிரவர்த்தகர்** எனச் சொல்வது கஷ்டம். கி. மு. 57-ம் வருஷத்தில், சகர்களை விக்கிரமாதித்யன் முறியடித்ததாகப் பலர் ஒப்புக்கொண்ட **காரூர்** சண்டையை, 600-வருஷகாலம் பின் தள்ளிப்போட்டு, கி.பி. 543-ல் நடந்ததாகச் சொல்வது தவறு. இவ்வித மனமயக்குக்குக் காரணம், **சகர்** ஜாதியரைப்பற்றிய பிரஸ்தாபமே. இப்பரத நாட்டில் பூர்வ காலங்களில் சகர்கள் என்னும் ஜாதியார் இல்லையென்றும், சுமார் கி.மு. 323-ம் வருஷத்தில் இந்தியாவுக்கு வந்த **அலெக்ஸாண்டர்** (Alexander) என்னும் கிரேக்க சக்கரவர்த்தி காலத்துக்குப் பின்னரே, சகர் முதலான அந்நிய தேசியர்கள் இந்தியாமீது படையெடுத்து வந்தார்க ளென்றும், இவர்களை ஜயித்த விக்கிரமாதித்யனது காலத்தை இதற்கு ஏற்றவாறு நிர்ணயிக்க வேண்டுமென்றும் சொல்வது புத்திசாதுர்யத்துக்கு அறிகுறியாகாது. சகஜாதியார் இப்பரத நாட்டிலுள்ள விராத்ய ஜாதியாருள் ஒருவர் என்பது வடமொழிப் பாஷையிலுள்ள பூர்வீக கிரந்தங்கள் பலவற்றில் காணப்படுகின்றது. ஸ்ரீராமாயணம், மஹாபாரதம், மனுஸ்மிருதி, கௌதம தர்மசாஸ்திரம், பாத்மபுராணம், விஷ்ணுபுராணம், மாத்ஸ்யபுராணம், பாணினி அஷ்டாத்யாயீ இவைகளில், சகர்கள், யவனர்கள் காம்போஜர்கள், கிராதர்கள் முதலானோர்கள் வைதிக தர்மம் துறந்து, பஹிஷ்கிருதமான ஜாதியர்களாகச் சொல்லப்பட்டிருப்பதுடன், இவர்கள் பல சமயம் மற்ற அரசர்களுடன் போராடி தோல்வியுற்றிருப்பதாகவும் தெரியவருகிறது.

ஆகவே, **அலெக்ஸாண்டருக்குப்** பின்பு, இந்தியாமீது படையெடுத்து வந்த ஜாதியாருள் சகர் ஒருவரென நினைத்து, அதற்காக விநோதமான கற்பனைகளைச் செய்து, மனம்போனபடி யெல்

லாம் சரித்திர காலநிர்ணயம் ஏற்படுத்தியிருப்பது நம் நாட்டின் தௌர்ப்பாக்கியமெனக் கொள்ளவேண்டும். பரத தேசத்தில் பிரசித்தமாய்க் கொண்டாடப்பட்ட யுதிஷ்டிராதி ஆறு சககர்த்தர்களுள், வரிசைக்கிரமத்தில் **சாலிவாஹன**னுக்கு முந்தி, விக்கிரமனைச் சொல்லியிருக்கிறது. ஆகையால் விக்கிரம சகம் கி. பி. 543-ல் உண்டாயிற்றென்றும், கி. பி. 78-ல் ஏற்பட்ட சாலிவாகன சகத்திற்குப் பிந்தியதென்றும் நிர்ணயிப்பது பிசகு. (b) **வராகமிகிரர**து 'பிருஹத் ஸம்ஹிதை' என்னும் கிரந்தத்தில், சககாலத்திற்கு 2526 வருஷம்முந்தியே யுதிஷ்டிரர் ராஜ்யபரிபாலனம் செய்தாரென்று சொல்லப்பட் டிருக்கிறது. காச்மீர தேசசரித்திரமாகிற **ராஜதரங்கிணி** (Rajatarangini) எனும் கிரந்தத்தை இயற்றிய **கல்ஹண** கவி (Kalhana) இதை ஒப்புக்கொண்டிருப்பதுடன், காச்மீரதேச ராஜ்யத்தை ஸ்தாபித்து, முதல் அரசனாகக் கொண்டாடப்பட்ட **கோனண்டா** I (Gonanda I) என்பவன் யுதிஷ்டிரருக்கு ஸமகாலத்திலிருந்தான் எனவும் கூறுகிறார். அவ்வரசனது காலத்திலிருந்து கணக்கிட்டுப்பார்த்தால், காச்மீரதேசத்தில் ஹிரண்யன், மாத்ருகுப்தன், ப்ரவரஸேனன் II முதலானவர்களின் காலம் சற்றேறக்குறையக்கிடைக்கிறது. இக்காலத்தில், உஜ்ஜயினி அரசனை ஸ்ரீஹர்ஷ விக்ரமாதித்ய சக்கரவர்த்தி சகரர்களை முறியடித்து, சககாலத்தை ஏற்படுத்தியதாகக் கல்ஹணரே கூறியிருக்கிறார். ஆகையால் யுதிஷ்டிரரது அரசாட்சி முடிவு காலமாகிய கி. மு. 3102 லிருந்து, 2526-வருஷம் கழித்துப் பார்த்தால், ஏறக்குறைய கி.மு.576-ல் சககாலம் ஆரம்பித்ததாக ஏற்படுகிறது. **ஸ்ரீஹர்ஷாப்தம்** கி. மு. 457-முதல் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. **விக்கிரமஸம்வத்** என்னும் காலாரம்பத்திற்கு ஆதிபுருஷனான **மாலவ விக்கிரமாதித்யன்**, மேற்கூறிய ஸ்ரீஹர்ஷனைக் காட்டிலும் வேறானவன். இவனது ஸம்வத், கி. மு. 57-ல் ஆரம்பித்தது. இவ்வாறு 400-வருஷம் வித்தியாசமுள்ள **ஸ்ரீ ஹர்ஷசகாப்தம், விக்கிரமஸம்வத்** என்னும் இரண்டுகாலாரம்பங்கள், நேபாலம் முதலிய வடதேசங்களில் இருப்பதாய்ப் புகழ்பெற்ற மகம்மதிய சரித்திரக்காரரான **அல்பேருனி**யின் (Alberuni) கிரந்தங்களால் விளங்குகிறது. மாலவ விக்கிரமகாலத்தில், வராஹமிஹிரருடன் காளிதாஸன் இருந்ததாக ஏற்பட்டால், இந்தக் காளிதாஸன், ரகுவம்சம், குமாரஸம்பவம், சாகுந்தலம், மேகஸந்தேசம், விக்கிரமோர்வசீயம், மாளவிகாக்கினிமித்திரம் இவற்றை இயற்றிய பிரஸித்த காளிதாஸ கவியைக் காட்டிலும் வேறுபட்டவர் எனக்கொள்ளல்வேண்டும். காளிதாஸன் என்ற பெயருடன் வழங்கியவர் மூவருண்டென்கிற ஐதிஹ்யமானது, பிந்திய ராஜசேகரகவி எழுதிய சுலோகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேற்கூறியவற்றால் காளிதாஸகவி **கிறிஸ்து பிறப்பதற்கு முந்திய முதல் நூற்றாண்டுக்கும்** பிராசீனமாயுள்ளவர் என்று ஏற்படுகிறது. ஆனால் எவ்வளவுகாலம் முந்தியென்று ஒருவாறு நிச்சயிக்க இடமிருக்கிறது.

(6) **ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளுக்குச்** சமகாலிகரான **குமரிலபட்டர்** என்னும் மகான் தமது **தந்திரவார்த்திகம்** எனும் கிரந்தத்தில், காளிதாஸனது **சாகுந்தல** நாடகத்திலுள்ள அடியிற்கண்ட ஒரு சுலோகத்தின் உத்தரார்த்தத்தை உதாரணமாக எடுத்துக் கூறியிருக்கிறார்:- "**ஸதாம்ஹி ஸந்தேகபதேஷு ப்ரமாணமந்த: கரணப்ரவ்ருத்தய:**" இதன் பொருள்:—ஸத்புருஷர்களுக்கு ஏற்பட்டுள்ள ஸந்தேகாஸ்பதமான விஷயங்களை நிர்ணயஞ் செய்வதில், அவர்களது மனச்சாக்ஷிப்படி நடத்தலே தக்கதோர் பிரமாணமாகும். துவாரகாமடத்தைச் சார்ந்த தாமிரசாஸனங்கள், ஸ்ரீ ஆதிசங்கராசாரியரது ஜீவியசரித்திரத்தைக் கூறுவதற்காகச் சிஷ்யர்களால் இயற்றப்பெற்ற **சங்கரவிஜயம்** என்னும் பலகிரந்தங்கள், அவரது வேதாந்த பாஷியாதி அற்புதகிருதிகள் இவற்றால், அம் மகான் யுதிஷ்டிர சகத்தின் 27-வது நூற்றாண்டில் (அவரது ஜீவகாலம் சுமார் கி. மு. 510-480); அதாவது இக்காலத்துக்கு 2400-வருஷகாலம் முந்தி இருந்திருக்க வேண்டும் என்று ஏற்படுகிறது. இதனால் காளிதாஸன் இதற்கும் முந்தினவரென்று கூறக்கூடும். முன் சஞ்சிகையில் கூறப்பட்ட பிரகாரம் கி. மு. 8-வது நூற்றாண்டில் அக்கினி மித்திர அரசனது ராஜ்யமுடிவுகாலத்தில் காளிதாஸன் வசித்திருக்க வேண்டுமென்று பாச்சாத்திய பண்டிதரான **ஹிப்போலீட் பான்சே** (Hippolite Fanche) குறிப்பிட்டிருப்பதும் இவ் வபிப்பிராயத்தை யனுசரிக்கிறது. ஆனால்

இதை ஆக்ஷேபித்துப்பேசக் கருதிய சரித்திரக்காரர் சிலர் இதை நிராகரிப்பதற்குத் தக்க காரணம் அளிக்காமல், "காளிதாஸர் அக்காலத்தியவரா யிருந்திருந்தால், அக்காலத்திய அரசனது சரித்திராதிகளை விசேஷித்துக் கூறுமலிருப்பது சம்பாவிதமன்று" என்ற இவ்வித யுக்திவாதத்தால் அக்கால நிர்ணயத்தை நிராகரித்துவிட்டனரென்று முன்னரே சொல்லப்பட்டது. அடியில் குறிக்கப்படும் விஷயத்தால் இவ்வித அற்பமான ஆக்ஷேபத்துக்கும் இடமில்லாமற் போகக்கூடுமென்பது, ஸம்ஸ்கிருதாபாஷாமர்மமறிந்து, நிஷ்பக்ஷபாதமாய் ஆராய்ந்து, குணாகுண விவேசனம் பண்ணுவோருக்கு விளங்குமென்பது நம்பிக்கை. **மாளவிகாக்கினி மித்திர நாடகத்தின்** பிரஸ்தாவனையில், 'வெகுப் பிரஸித்திபெற்ற தௌமில்லர், தாவகர், கவிபுத்திரர் முதலானோர்கள் கிருதிகளை விட்டுவிட்டு, **இப்போதுள்ள காளிதாஸனுடைய** நாடகத்தில் கௌரவம் பாராட்டுவது எங்ஙனம்?" என்று ஸூத்திரதாரன் கேட்கப்படுகிறான்.

ஒவ்வொரு நாடகத்தின் கடைசியில், **பரதவாக்கியம்** (மங்களவாழ்த்து ; அல்லது கதாநாயகனது கோரிக்கை) சொல்லவேண்டுமென்பது நாடகலக்ஷணங்களில் ஒன்று. இவ்வாறு கூறப்படும் பரதவாக்கியங்களில், பொதுவாய், பிரஜைகள் முதலானோருக்கு க்ஷேமமோ, ஸத்புத்தியோ, அரசர்களுக்கு **நற்கீர்த்தியோ** உண்டாகட்டும் என்னும் கோரிக்கை காணப்படுகிறது. பிரகிருத நாடகத்தின் **பரதவாக்கியத்தில்,** "அக்கினிமித்திரன் **ரக்ஷகனுக** விருக்குமளவில், பிரஜைகளுக்கு அனுவிருஷ்டி முதலிய ஈதிபாதைகள் நீங்கவேண்டும் என்பது முதலான விருப்பம் ஸித்திக்காது என்பதில்லை; (அவசியம் ஈடேறும்)" என்று கதாநாயகனை அக்கினிமித்திரனே வேண்டுகிறான். ஆகையால் கதாநாயகனை அக்கினிமித்திரன் அக்காலத்திய அரசன் என்றும், அந்நாடகத்தில் காளிதாஸன் தமது காலத்திலுள்ள அரசனது சரித்திரத்தையே கூறியுள்ளாரென்றும் ஊஹிப்பது அசம்பாவித மாகாது. காளிதாஸனது இதர நாடகாதிக்கிரந்தங்களிலும், இதிஹாசங்களிலும் பிரசித்திபெற்ற பூர்வீக மகா சக்கிரவர்த்திகளோ அவர்களது வம்சங்களோ கூறப்பட்டுள்ளன. அவ்வித கௌரவம் யாதொன்றுமில்லாத அக்கினிமித்திரனை முக்கிய நாயகனுய்ப் பாராட்டி நாடகம் இயற்றியதே, அவன் காளிதாஸ காலத்திய அரசன் என்பதற்கு ஓர் அறிகுறியாகும். வேறு தீரோதாத்தநாயகன் அகப்படாமலா அவ்வாறு செய்திருக்கக்கூடும்? அக்கினிமித்திரனை நாடகரூபமாய்க் கொண்டாடியதற்குத் தாத்பரியந்தான் என்னே? அக்கினிமித்திர அரசனே **சுங்கவம்ச** ஸ்தாபகனை புஷ்பமித்திர ராஜனது புத்திரன். கலியுகம் பிறந்தபிறகு **மகததேசத்தில்** அரசாண்டுவந்ததாய்ப் பாகவதாதிகளில் கூறப்பட்டுள்ள **பார்ஹத்ரத, ப்ரத்யோத, சைசுநாக, நந்த, மௌரிய, சுங்க** முதலிய ராஜவம்சங்களுக்குரிய ஆட்சிகாலத்தில், அக்கினிமித்திரனது காலம் வரையில் கணக்கிட்டுப் பார்த்தால், சுமார் 1850-வருஷமாகிறது. கலியுகம் கி.மு. 3102-ல் ஆரம்பித்ததாய் ஒப்புக்கொண்டால், அக்கினிமித்திரன் காலம், ஏறக்குறைய கி. மு. 1250-ஆகிறது. இதனால் காளிதாஸன் கி. மு. 13-வது நூற்றாண்டி லிருந்ததாக ஊகிக்க இடமுண்டு. மேனாட்டு ஸம்ஸ்கிருத வித்வான்களும், இவர்களை அனுசரித்தே பேசும் ஆங்கில வித்தையில் தேர்ந்தவர்களான நமதுதேச சரித்திரக்காரர்களும் பெரும்பாலும் இதைக் கேட்டுச் சகியாது, கோபமாயோ, பரிகசித்தோ கூறக்கூடுமெனினும், நம்நாட்டு ஸம்ஸ்கிருத பண்டிதர்களும் ஆஸ்திகர்களும் இதற்காகப் பயந்து தங்களது நிஜமான எண்ணத்தை வெளியிடாதிருத்தல் தேசாபிமானக்குறைவையே குறிக்கும். இந்த அபிப்பிராயத்தைச் சில சரித்திரக்காரர் எளிதல் ஒப்புக்கொள்ளார் எனினும், இதையாராய்ந்து பார்க்கவேண்டுமென்ற விருப்பமாவது அவர்களுக்கோ மற்றையவர்களுக்கோ ஏற்படுமானால், அதுவே போதுமான நற்பயனென நினைக்கப்படும்!!

ஸ்ரீமத் பாகவத ஸாரம்.—நமது இந்தியநாட்டில் பிரசித்திபெற்றுள்ள பதினெட்டுப் புராணங்களில், ஸ்ரீமத்பாகவதம்மிகப்புண்ணியமானது; யாவரும் கேட்டு ஆனந்திக்கத்தக்க விஷயங்கள் நிரம்பியது. மற்றைய அவதாரங்களைக் காட்டிலும் ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தில்தான் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் மகிமையும் பக்தவாத்ஸல்யமும் மற்றைய கல்யாண குணங்களும் சாதாரண ஜனங்களும் அறியும் வண்ணம் சரித்திர மூலமாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. அழகிய ஆப்டோன் படங்கள் கொண்டது. விலை ரூபா **1—2—0** போதினி சந்தாதார்க்கு அணு **14.**

நமது சிறு கதை

OUR SHORT STORY

சசீந்திரன்

("மௌத்கல்யன்" எழுதியது.)

IV

இராஜநாராயணருடைய ஏற்பாட்டின்படி சுஜாதைக்கும் சசீந்திரனுக்கும் வைகாசி மாதம் பதினெட்டாந்தேதி வெள்ளிக்கிழமை உதயாதி நாழிகை ஆறுக்குமேல் எட்டுக்குள்ளாக கடகலக்கினத்தில் விவாகம் நடைபெறுவதாக இருந்தது. வைகாசி மாதம் இரண்டுதேதி ஆகிவிட்டது. விவாகத்திற்கு இன்னும் பதினாறு நாட்களே இருக்கின்றன. இதற்குள் இராஜநாராயணருடைய மனதை மாற்றி, நாராயணதாஸனுக்கு இந்த விவாகத்தை முடித்துவைக்கவேண்டுமென்று இராதாபாய் எண்ணியிருந்தாள். ஆனால் நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறதல்லவா ? இராஜநாராயணருக்குச் சசீந்திரனிடம் எந்தெந்த விதத்தில் அதிருப்தி உண்டாகவேண்டுமோ அவைகளையெல்லாம் இராதாபாய் செய்து பார்த்தாள். ஒரு ஜமீன்தார், தன் பெண்ணை மணந்துகொள்ள இசைந்ததை இவள் ஒரு பெரிய அதிருஷ்டமாக நினைக்கவில்லை. இங்ஙனமே விவாக காலங்களில் பெண்கள் காட்டும் மடமையினால் அநேக குடும்பங்கள் நாசமாகின்றன. ஆனால் இம்மடமைக்கு ஆண்கள் இணங்குவதன்றோ ஆச்சரியம். தாங்கள் பிடித்த பிடியைச் சாதிப்பதற்காகப் பெண்கள் செய்யும் ஆர்ப்பாட்டமும், தருக்கங்களும், சொல்லொணாக் கொடுமைகளும் எழுதப்புகின் உடல் நடுங்குகிறது. ஹிந்து குடும்பம் ஒவ்வொன்றிலும் இத்தகைய விநோதங்களைக் காணலாம். சீமானாயிருந்தாலென்ன ? சிறு குடிசையில் வாழ்பவனானாலென்ன ? உலகவாழ்க்கையை, கவலையின்றி நாணயமாக உயர்ந்த தன்மையில் நடத்த அவனுக்கு இசைந்த மனைவி இருக்கவேண்டும். இஃதொருதலைப் பட்சமான கூற்று என்று சிலர் கருதலாம். ஆம், உண்மை. பெண்களும் இங்ஙனம் நினைக்க உரிமை உண்டு என்பதை யார் அங்கீகரியாமலிருக்கமுடியும் ? உலக வாழ்க்கையை இனிதாக நடத்த தன் உள்ளத்துக்கிசைந்த புருஷன் இருக்கவேண்டுமென்று ஒவ்வொரு பெண்ணும் நினைக்க உரிமையுடையவள். ஏன் ? அவள் அங்ஙனம் நினைத்தே தீரவேண்டும். இதனாலேயே இருவர் மனதும் ஒன்றுபட்டிருக்கவேண்டுமென்று கூறுவதும். பதினெட்டாந்தேதி முகூர்த்தமென்று இராஜநாராயணர் சசீந்திரனுக்கும் அவனைச்சேர்ந்த பிறருக்கும் தெரிவித்து விட்டார். சசீந்திரனும் சத்தியாபாயின் அங்கீகாரத்தைப் பெற்று விவாகத்திற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருக்கிறான். மயூரபுரி ஜமீன்தாருக்கு விவாகம் என்று அறிந்த குடிகள் அதிக குதூகலத்துடன், விவாக ஊர்வலம் வரும் வீதிகளை அலங்காரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இராதாபாயின் உள்ளமும் கொதித்துக்கொண்டிருக்கிறது. என் செய்வாள் ? நாகசர்ப்பம் போல் பெருமூச்சு விடுகிறாள் ; அங்குமிங்கும் பித்தம் பிடித்தவள்போல் நடக்கிறாள் ; கண்டவரையும் கடிந்து கொள்கிறாள். திவான் வீட்டில் விவாகமானதால், விவாகத்திற்கு வேண்டிய சாமான்கள் யாவும் தயார் செய்யப்பட்டு வருகின்றன. திவானுடைய நேரான மேற்பார்வையின் மீதே எல்லாம் நடைபெறுகின்றன. தன் வயிற்றில் பிறந்த பெண்ணுக்கு இவ்வளவு விமரிசையாக விவாக ஏற்பாடுகள் நடைபெறுவதைக்கண்டு இராதாபாய் சந்தோஷிக்கவேண்டியவளாயிருக்க, மந்தரையின் உபதேசத்தைக் கேட்ட கைகேயி, இராமனுடைய பட்டாபிஷேக ஏற்பாட்டைக்கண்டு எங்ஙனம் நடந்துகொண்டாளோ அப்படியே நமது இராதாபாய் அம்மாளும் தேவியும்—எத்தனை அடைமொழிகள் வேண்டுமானாலும் இந்தப் பெருந்தேவிக்குக் கொடுக்கலாம்—மயூரபுரி கைகேயியாக விளங்கினாள் என்று கூறுவது முற்றிலும் பொருந்தும். இந்த விவாகத்தை நிறுத்தப் பலவித கீழ்த்தரமான யோசனைகளையும் செய்தாள். கடைசியில், காலையில் அவர் பருகும் பானத்தில் ஒரு மருந்தைக் கலந்து கொடுப்பதென்று தீர்மானித்தாள். இம்மருந்து ஒருவனுடைய அறிவைக் கலங்கச் செய்வதென்று, இராதாபாயின் வேண்டுகோளின்பேரில் ஒரு வேலைக்காரியால் அளிக்கப்பட்டதொரு பச்சிலையாகும். இதனைப் பிழிந்து ஏதேனும் ஒருபானத்தில் கலந்துகொடுத்தால், அதில் சிறிதுபாகம் உள்ளேசென்று அறிவைக் கலக்கி விடுகிறதென்று அவள் சொல்லிக்கொடுத்தாள். இராஜ

நாராயணருக்கு இதனைக் கொடுத்து, அவருடைய அறிவை மயக்கித் தம் விருப்பத்தைச் சாதித்துக் கொள்ளவேண்டுமென்பது இராதா பாயின் விருப்பம். ஐயோ! பெண்மை அறிவே!

வயோதிகம் என்னும் தொட்டிலில் தவழ்ந்து விளையாடும் இராஜநாராயணர், யௌவனமிடுக்குடன் இருக்கும் இராதாபாயினல் கொடுக்கப்பட்ட பானத்தை ஒருநாள் காலை வழக்கம் போல் பருகிவிட்டார். காலை யுண்டியை முடித்துக்கொண்டு இவர் தமது உத்தியோக அறைக்குச்செல்வது வழக்கம். அங்ஙனமே இராதாபாயினல் கொடுக்கப்பட்ட பானத்தைக் குடித்துவிட்டு இவர் தமது உத்தியோக அறைக்குச் சென்று அமர்ந்து சிறிதுநேரம் கழித்ததும் இவரது கண்கள் சுழலமிட்டன; ஒருமுறை வாந்தியெடுத்தார். அங்ஙனமே தமது நாற்காலியில் சாய்ந்து கொண்டார். உடனே வேலைக்காரர் ஓடோடியும் வந்து இவரைத் தூக்கிக் கட்டிலின்மீது படுக்க வைத்தனர்; திவான் அம்மாவுக்குத் தெரிவித்தனர். அம்மையார் பரபரப்போடும் அழுத கண்ணீரோடும்—என்ன பாசாங்கு?—ஓடிவந்தாள். இராஜ நாராயணர் தேகத்தை ஒருமுறை தடவிக்கொடுத்தாள். திவான் கண் திறக்கவில்லை. முகம் சரியான தன்மையில் இல்லை. வைத்தியரை அழைத்துக் கொண்டுவரச்சொல்ல இராதாபாய்க்கு மனதில் இஷ்டமில்லை. ஆனல் வைத்தியரை அழைத்துக்கொண்டுவா என்று நான்கு பேருடைய நம்பிக்கையைப் பெறுவதற்காகவேனும் சொல்லாமலும் இருக்க முடியவில்லை. என்ன செய்வாள்? தம்மிடத்தில் வசப்படுத்துவதற்காக மருந்து கொடுத்தாள். அது வேறுவிதமாக முடியும்போ லிருக்கிறது. மருந்தின் வேகத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய சக்தி இராஜநாராயணருடைய தேகத்தில் இல்லை. திவான் இறந்துவிட்டால், நாம் இத்தனைகாலமாக வாழ்ந்த வாழ்வெல்லாம் போய் விடுமே யென்ற எண்ணம் இராதாபாய்க்குத் தோன்றவில்லை. அவரைத் தம் வசப்படுத்துவதிலேயே அவளுடைய எண்ணங்கள் யாவும் ஒன்றி நின்றன. இராஜநாராயணருடைய கட்டிலின் பக்கத்தில் இராதாபாய் பாசாங்கு அழுகைசெய்து கொண்டிருக்கும் போது, ஜமீன் உத்தியோகஸ்தர் பலர் வந்து கூடிவிட்டனர். உடனே சமஸ்தான வைத்தியர் அழைத்துக்கொண்டு வரப்பட்டார். நிகிலசந்திரனுக்குத் தந்தி பறந்தது. ஜமீன்தார் சசீந்திர பாபுவுக்கும் சமாசாரம் சொல்லியனுப்பப்பட்டது. திவான் வீட்டில் பெரிய கும்பல் சேர்ந்துவிட்டது. சமஸ்தான பண்டிதர் கணநாதர் வந்தார். நாடி பரீட்சை செய்தார். இராஜநாராயணருடைய கண்ணையும் நகவையும் பன்முறை கூர்ந்து கவனித்தார். பிறகு தமது மருந்துப்பெட்டியைத் திறந்து ஒரு சீசாவிலிருந்து சிறிது சூரணத்தை எடுத்துத் தேனில் குழைத்து உள்ளே செலுத்தும்படி சொன்னர். இங்ஙனம் இவர் மருந்தைத்தேனில் குழைத்துக் கொண்டிருக்கும்போதே, ஜமீன்தார் சசீந்திர பாபு வந்தார். எல்லோரும் சிறிது விலகி நின்றனர். படுக்கையிலிருக்கும் இராஜநாராயணரை உற்று நோக்கினர். வைத்தியர் கணநாதரைப் பார்த்து, "என்ன விசேஷம்?" என்று கேட்டார்.

"விஷமூலிகை ஒன்று உள்ளே சென்றிருக்கிறது. அது குடல் முழுவதையும் சின்ன பின்னப் படுத்தியிருக்கிறது" என்றார் வைத்தியர். 'விஷமூலிகையா?' என்று எல்லோரும் பிரமித்தார்கள். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். இராதாபாய் தலையைத் தொங்கவிட்டுக்கொண் டிருக்கிருள். விஷ மூலிகை என்று வைத்தியர் சொன்னதும், சசீந்திரன் எக்காரணத்தாலோ இராதாபாயைப் பார்த்தான். இராதாபாயும் சசீந்திரனை நோக்கினள். சிறிதுநேரம் கழித்து, இராஜநாராயணர் கண்ணைத்திறந்தார். சிறிது தாகத்திற்குக் கேட்டார். வெந்நீரில் சிறிது உப்பைக் கலந்து கொடுக்கும்படி வைத்தியர் சொன்னர். அங்ஙனமே கொடுக்கப்பட்டது. உடனே இராஜநாராயணர் வாந்தி எடுத்தார். பச்சைப் பசேலென்று வாந்தியெடுத்த கல்மஷத்தோடு கலவாமல் திரவபதார்த்தமொன்று விழுந்தது."அப்பாடி" என்று சொல்லிக்கொண்டு இராஜநாராயணர் படுக்கையில் சாய்ந்தார். உடனே அவருக்கு நீர் ஆகாரமாக ஏதேனும் கொடுக்கும்படி வைத்தியர் கூறினர். பிறகு வாந்தியெடுக்கப்பட்ட பச்சைபாகத்தை வைத்தியர் நன்ருகப் பரிசோதனை செய்தார். பெருமூச்சுவிட்டார். உடனே இராதாபாய் விர்ரென்று உள்ளே சென்றுவிட்டாள். சசீந்திரனுக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. ஏற்கெனவே இராதாபாயிடத்தில் இவனுக்கு அதிருப்தி உண்டு. இப்பொழுது அவள் நடந்துகொண்ட

மாதிரியைக்கொண்டு, அவள்தான் இந்த விஷப் பச்சிலையைக் கொடுத்திருப்பாளோ என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டது. இதைப்பற்றி அங்கிருந்தவர் கும்பல் கும்பலாகக் கூடி தருக்கிக்க ஆரம்பித்தனர். இது விஷப்பச்சிலைதானு என்று வைத்தியரிடத்தில் சிலர் வாதம்செய்ய முயன்றனர். இங்ஙனம் திவான்மாளிகை முழுவதும் அமளி குமளியா யிருந்தது. இராஜநாராயணர் சிறிதுநேரம் பொறுத்து கண்ணைத் திறந்து பார்த்தார். தமது படுக்கையைச் சுற்றி ஜமீன்தார் உள்ளிட்ட பல உத்தியோகஸ்தர்கள் ஆவல்நிரம்பியமுகத்துடன் நின்றுகொண்டிருந்தனர். இராஜநாராயணர் கண்திறந்து பார்த்து அனைவருக்கும் கைகூப்பி நமஸ்காரம் செய்துவிட்டு, ஜமீன்தார் அவர்களை—தமது வருங்கால மாப்பிள்ளையை—இருங்கள் என்று சொல்லித் தம் கட்டிலின் பக்கத்தில் ஓர் இடத்தைக் காட்டினர். வைத்தியர், "தாங்கள் இப்பொழுது அதிகமாக சிரமப் படுத்திக்கொள்ளக் கூடாது; சிறிதுநேரம் ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டும்" என்று இராஜநாராயணரைப் பார்த்துக் கூறினர். உடனே அனைவரும் எழுந்து இராஜநாராயணரிடத்தில் மௌனமாக விடைபெற்றுக்கொண்டு சென்றனர். ஜமீன்தார் சசீந்திரபாபுவும் பிற்பகலில் மறுபடியும் வருகிறேன் என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு வைத்தியரை நோக்கி, "அடிக்கடிவந்து பார்த்துக்கொள்ளும்" என்று கட்டளையிட்டுவிட்டு, தமது அந்தரங்க குமஸ்தாவாக வுள்ளவனும் அப்பொழுது அங்கு வந்திருந்தவனுமான கிரீசனைத் தனியே அழைத்துக் கொண்டுபோய்ச் சில வார்த்தைகள் கூறிவிட்டுச் சென்றான். கிரீசனும் இராஜநாராயணருடைய கட்டிலின் பக்கத்தில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான். கிரீசன், ஜமீன்தாருடைய அந்தரங்க குமஸ்தாவென்று, திவான் வீட்டிலுள்ள அனைவருக்கும் தெரியும். ஆதலின் அவனிடத்தில் எவருக்கும் ஒரு பயபக்தி இருந்தது. கிரீசன் தன் ஆசனத்தமர்ந்து, இராஜநாராயணருடைய முகத்தை உற்றுநோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தான். இராதாபாயின் உத்தரவின் பேரில் தலைமைப் பரிசாரகன்வந்து, கிரீசனை போஜனத்திற்கு அழைத்தான், தனக்கு ஒன்றும் வேண்டியதில்லையென்றும் காலையிலேயே தான் வயிறு நிறைய ஆகாரம் உட்கொண்டுவிட்டதாகவும் கிரீசன் சொல்லிவிட்டான். இராதாபாய் தன் அறையில் உட்கார்ந்து யோசனைகள் என்ற இழைகளாலாய வலையைப் பின்னிக்கொண்டிருக்கிறாள். தன் தவறு தெரிந்து விட்டால் என்ன செய்வது என்று கலுழ்கிறாள். இராஜநாராயணர் எழுந்து, இராதாபாயே தன் காலைப் பானத்தைக் கொடுத்ததாகச் சொல்ல, ஜமீன்தார் தம்மீது சந்தேகங்கொள்வாரோ என்று ஏங்குகிறாள். அடியோடு உயிர் துறந்திருந்தாலும் இவளுக்குச் சம்மதமாயிருக்கும்போலிருக்கிறது, இவள் படுங்கவலை.

இராஜநாராயணர் நன்றாகத் தூங்கியெழுந்தார். படுக்கையிலேயே எழுந்து உட்கார்ந்தார். பக்கத்தில் கிரீசனைப் பார்த்தார்.

கிரீ:—உடம்பு எப்படி யிருக்கிறது?

இராஜ:—இப்பொழுது சிறிது நிம்மதியா யிருக்கிறது.

கிரீ:—வயிற்றுக்கு ஏதேனும் ஆகாரம் கொண்டுவரச் சொல்லட்டுமா?

இராஜ:—(தலை யசைத்தார்.)

உடனே ஒரு பரிசாரகன் ஒரு தங்கக் கிண்ணத்தில்சிறிதுஆகாரம் கொண்டுவந்து கொடுத்தான். இராஜநாராயணர் மெதுவாக அதை உட்கொண்டார். பிறகு மெல்லிய குரலுடன் இராஜநாராயணரும் கிரீசனும் சம்பாஷிக்கத் தொடங்கினர்கள். இராஜநாராயணரிடமிருந்து நடந்த விவரங்களை யறிய கிரீசனுக்கு ஆவல் இருந்ததென்பதை இங்குக் கூற வேண்டுவதில்லை.

கிரீ:—தங்களுக்கு ஏன் திடீரென்று உடம்புக்கு வந்தது?

இராஜ:—காலையில் தினந்தோறும் நான் நீராகாரம் ஏதேனும் எடுத்துக்கொள்வதுண்டு. இன்று காலை, "கௌஸ்பான் பானம்" சாப்பிட்டேன். அதை நான் உட்கொண்டபோதே ஒரு விதத் 'திகட்டல்' எடுத்தது. ஆயினும் ஏதோ வென்று நான் அதைக் கவனியாமல் குடித்து விட்டேன். உடனே வயிறு கிளற ஆரம்பித்தது. ஒருமுறை வாந்தியெடுத்ததுதான் எனக்குத் தெரியும். பிறகு நடந்தது தெரியாது.

கிரீ:—காலையில் தங்களுக்கு அந்தப் பானத்தைக் கொடுத்தவர் யார்?

இராஜ:—இராதாபாய்தான்.

கிரீ—தினந்தோறும்இதுவே வழக்கமென்று நினைக்கிறேன்.

இராஜ—ஆமாம். ஆனால் இன்று காலே, நான் இதனைக் குடித்ததும், பாத்திரத்தின் உள் பாகம் பச்சையாக இருந்தது. மேலும் அதனுடைய விளிம்பில் பச்சிலேரசம் சொட்டவிட்டதுபோல், உலர்ந்த குறிகள் தென்பட்டன. இவ்வளவு விவரமாக நீ கேட்கவேண்டியதேன்?

கிரீ:—அவையெல்லாம் ஒன்றுமில்லே. வயதானும் தங்களுடைய சரீரம் கட்டுத்தளராத சரீரமாயிற்றே. திடீரென்று ஏன் இந்த உடம்பு வந்தது என்றே கேட்டேன்.

இங்ஙனம் இருவரும் பேசிக்கொண்டிருந்த போது சசீந்திரன் வந்தான். பிறகு மூவரும் சம்பாஷிக்கத் தொடங்கினர்.

சசீ:—இப்பொழுது உடம்பு எப்படியிருக்கிறது?

இராஜ:—சிறிது குணந்தான்.

சசீ:—ஏன் திடீரென்று இந்த உடம்பு?

கிரீ:—எல்லாவற்றையும் விவரமாக இப்பொழுதுதான் தெரிவித்தார். இங்ஙனம் சொல்லிக்கொண்டே கிரீசன் சசீந்திரனுக்குக் கண் ஜாடை காட்டினன். இராஜநாராயணரும், கிரீசனிடத்தில் சொன்ன சமாசாரங்களையெல்லாம் சசீந்திரனிடத்திலும் தெரிவித்தார். சசீந்திரனுடைய சந்தேகம் உறுதிப்பட்டுவிட்டது.

சசீ:—தாங்கள் பருகிய பானத்தில் ஏன் பச்சை நிறம் கலந்திருந்ததென்பதை நீங்கள் கவனித்தீர்களா? அதன் ருசியே மாறுபட்டிருந்த போது அதை நீங்கள் ஏன் பருகவேண்டும்?

இராஜ:—இராதாபாய்தானே கொடுத்தாள் என்று குடித்துவிட்டேன்.

சசீ.—அப்படி நீங்கள் நம்பிக்கை கொள்ளலாமா?

இராஜ:—தாலிகட்டிய சம்சாரத்தைக்கூட நம்பாமல் என்ன செய்வது?

சசீ:—சம்சாரம் என்ற மொழிக்கு முன்னர் 'இளைய' என்ற சொற்றொடர் சம்பந்தப் பட்டிருக்கிற தென்பதை நீங்கள் அறியவேண்டும்.

இராஜநாராயணருடைய முகம் ஒருவாறு மாறியது. சசீந்திரனும் ஜமீன்தார் என்ற தோரணையிலோ என்னவோ, அல்லது தன்னுடைய எதிர்கால மாமனர் என்ற சுவாதீனத்தினலோ என்னவோ, எவ்வித கூச்சமு மின்றித் தன்மனதில் உள்ளதை உள்ளவாறு சொல்லத் தொடங்கினன்.

சசீ:—இராஜநாராயணரே! தாங்கள் என் மீது வருத்தப்படுவதில் பயனில்லே. தங்களுடைய இளைய சம்சாரமே இதனைச் செய்திருக்கிருள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். தங்களைத் தன்னுடைய வசப்படுத்திக்கொள்ளவே ஒருவித பச்சிலேயை இப்பானத்தில் கலந்து கொடுத்திருக்கிருள் என்று நான் ஊகிக்கிறேன். ஆனல் அது விபரீதமாக முடிந்துவிட்டது. சென்றது செல்க. தாங்கள் பிழைத்தெழுந்தது மயூரபுரியின் பாக்கியம் என்றே சொல்லவேண்டும். பதினெட்டாந்தேதி முகூர்த்தம் நடைபெற வேண்டுமென்று தங்களுக்கு விருப்ப மிருக்குமாயின், இராதாபாய் இந்த வீட்டில் இருக்கக்கூடாது. அவளை வைத்துக்கொண்டு விவாகம் நடத்துவதென்பது முடியாத காரியம். என் மனம் அதற்கு ஒப்பாது. இதற்காகத் தாங்கள் மன வருத்தப்படவேண்டாம். இப்பொழுது நடைபெற்ற சம்பவத்தைப்பற்றி இராதாபாயை விசாரிக்க வேண்டுமென்று என் மனம் நாடுகிறது.

இராஜநாராயணர் என்ன செய்வார்? அச்சமயத்தில் அவருடைய மனம் பட்ட பாட்டை யாரே வருணிக்கவல்லார்? இங்ஙனம் சசீந்திரன் பேசிக் கொண்டிருக்கும்போதே மிதுனபுரியிலிருந்து நிகிலசந்திரன் வந்துசேர்ந்தான். தகப்பனர் தன்னை உதாசீனப்படுத்தி அனுப்பியிருந்த போதிலும், அஃது அவர் குற்றமல்லவென்பது அவனுக்குத் தெரியும். மற்றும் தகப்பனருக்கு உடம்பு சௌக்கியமில்லே யென்று தந்தி வந்ததும், கலாசாலேத் தலேவரிடமிருந்து ஒய்வு பெற்றுக்கொண்டு ஒடோடியும் வந்தான். வந்ததும், ஆவலுடன் "அப்பா! உடம்பு எப்படியிருக்கிறது?" என்று தழதழத்த குரலில் கேட்டான். நிகிலசந்திரனைக் கண்டதும், இராஜநாராயணர் விம்மி விம்மி அழத் தொடங்கிவிட்டார். அவர் அழ, நிகிலசந்திரனும் குழந்தைபோல் கூட அழ ஆரம்பித்து விட்டான். இராஜநாராயணரும் சசீந்திரனும் சம்பாஷித்துக்கொண்டிருப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த சுஜாதை, அண்ணவின் வரவில் அதிக சந்தோஷங் கொண்டாள். ஆனல் தமையனும் தகப்பனரும் அழவே, தானும் அழத் தொடங்கினள். சசீந்திரன் யாரைச் சமாதானப் படுத்துவான்? மாமனரையா? மைத்துனனையா? தன் இனிய மனைவியையா? இராஜநாரா

யணருக்கும் நிகிலசந்திரனுக்கும் சசீந்திரன் ஆறுதல் சொன்னான். இருவரையும் தேற்றுவது பிரம பிரயத்தனமாக முடிந்தது. இங்கு இவ்வளவு "அமர்க்களம்" நடந்துகொண்டிருந்தும், இராதாபாய் ஏன் தன் அறையை விட்டு வெளியே வருகிறாள்?

நிகிலசந்திரனும் இராஜநாராயணரும் பரஸ்பரம் குசலப்ரச்னஞ் செய்து கொண்டனர். சசீந்திரன் மூலமாக நிகிலன் நடந்தனவற்றையெல்லாம் அறிந்துகொண்டான். இராதாபாயை நேரே விசாரிக்கலாமென்று அவனுக்குத் தோன்றியது. ஆனால் ஏற்கெனவே அவளுக்குத் தன்மீது பகை இருக்கிறதென்பதை நினைத்துக் கொண்டான். மேலும் தகப்பனாரின் அபிப்பிராயம் எப்படி யிருக்கும் என்பதும் அவனுக்குத் தெரியாது. ஆதலின் பிறகு பார்த்துக் கொள்வோம் என்றிருந்து விட்டான்.

இச்சமயத்தில் திடீரென்று இராதாபாய் இவர்கள் முன்னிலையில் தோன்றி, "உடம்பு இப்பொழுது ஒன்றுமில்லையே" என்று கேட்க, இராஜநாராயணர் தலையசைத்தார். நாராயணதாஸனுக்கு உடம்பு சௌகரியமில்லையென்று செய்தி கிடைத்திருப்பதாகவும் தான் உடனே சென்று வரவேண்டுமென்றும் இராதாபாய் கூறினாள். உடனே இராஜநாராயணர் முன்பின் ஆலோசியாமல், "சரி; போய்விட்டு வா" என்று உத்தரவு கொடுத்துவிட்டு, தன் குமாஸ்தா ஒருவனை அழைத்து அவளிடத்தில் இருநூறு ரூபாய் கொடுக்கும்படி கூறினார். இராதாபாய் அதனைப் பெற்றுக்கொண்டு சிவ்வென்று கிளம்பிவிட்டாள். தன்வயிற்றில் பிறந்த பெண்ணுக்கு விவாகம் என்பதைக் கூட அவள் கவனிக்கவில்லை. சுஜாதையிடத்திலும் அவள் போகும்போது சொல்லிவிட்டுப் போகவில்லை. நிகிலசந்திரனை அவள் விசாரிக்கவில்லை என்பதில் ஆச்சரியமென்ன இருக்கிறது? இராஜநாராயணரும், சுஜாதை விவாகத்திற்கு இருக்கவேண்டும் என்று இராதாபாயை வற்புறுத்தவில்லை. இராதாபாய், இந்தச் சங்கடத்தினின்று எப்படி தப்பித்துக்கொள்வது என்று யோசித்துக் கடைசியில் இந்த ஏற்பாட்டுக்கு வந்தாள். நாராயணதாஸனைப்பற்றி எவ்வித செய்தியும் வரவில்லையென்பதையும் நாம் இங்குக் கூறவேண்டுவதில்லை. எனவே, சசீந்திரனின் சந்தேகம் உறுதிப்பட்டுவிட்டது. இராஜநாராயணருக்குப் பலமுறை இதை "குத்திக் குத்திக்" காட்டினான். மூவரும் இதைப்பற்றி நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

ஐயோ! என்ன பெண்மைப் புத்தி! ஏதோ ஒரு மூட எண்ணங்கொண்டு, தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதிக்கும் பொருட்டுச் சில பெண்கள் இத்தகைய அசம்பாவிதமான காரியங்களை—தாங்கள் செய்யும் காரியங்களினால் என்ன பலன் உண்டாகுமென்பதைச் சிறிதும் யோசியாமல்—செய்கிறார்கள். இதற்காக இவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டத்திற்கு அளவுண்டோ? அம்மம்ம! எத்தனை குடும்பங்கள் இவர்களுடைய இத்தகைய விநோத செயல்களால் நாசமடைகின்றன. பணமிருந்தால் என்ன? வேறென்ன பாக்கியமிருந்தாலென்ன? இத்தகைய தீச்செயல்கள் ஒரு குடும்பத்தில் புகுந்துவிட்டால்—?

கடைசியில் இராதாபாய் இல்லாமலே, சுஜாதைக்கும் சசீந்திரனுக்கும் குறித்த முகூர்த்தத்தில் விவாகம் அதிக விமரிசையாக நடைபெற்றது. இராஜநாராயணருடைய சகோதரரும் அவருடைய மனைவியும் சுஜாதையைப் பாணிக்கிரகணம் செய்துகொடுத்தனர். கலியாண 'தடபுடலை'ச் சொல்லி முடியாது. ஜமீன்தாருக்கே மணமென்றால் சொல்லவேண்டுமோ? இராதாபாய் இல்லையேயென்ற கவலை ஒருவருக்கும் அப்பொழுது இல்லை. சத்தியாபாய் மாத்திரம் அடிக்கடி விசாரித்துக்கொண்டிருந்தாள். இவை உபசாரமொழிகளோ என்னவோ யாரறிவார்?

கடைசியில் இராதாபாய் என்னவானாள் என்று அறியச் சிலர் ஆவல் கொள்ளலாம். சுஜாதையும் சசீந்திரனும் இல்லற வாழ்க்கையை இனிதாகத் துய்த்துக்கொண்டிருக்கும் போது, இராதாபாய் தன்பிறந்த வீட்டிலேயே இறந்து போனதாகச் செய்தி வந்தது. இராஜநாராயணர் அப்பொழுது ஜமீன் உத்தியோகத்தினின்று நீங்கி ஓய்வு பெற்றுக்கொண்டிருந்தார். இச்செய்யைக் கேட்டு அதிக துக்கப்பட்டார். தாலி கட்டிய தோஷமல்லவா? சுஜாதையின் விவாகத்திற்குமுன் சென்றவள்தான் இராதாபாய். அதற்குப்பிறகு தன் புக்ககத்துக்கு வரவேயில்லை. தன் பெண்ணைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலும் அவளுக்கு உண்டாகவில்லை. இஃதென்ன மனது?

(முற்றும்.)

 உதவி வரைத்தன் றுதவி புதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து.

கல்விச்சாலைகளும் நல்லொழுக்க ஞானமும்

MORAL AND RELIGIOUS EDUCATION IN SCHOOLS

கல்வியின் உண்மையான நோக்கம் யாது என்பதும், இதுகாறும் நமது மாகாணதிகளிலுள்ள கல்விச்சாலைகளில் நடைபெற்றுவரும் கல்விப் பிரசார ஏற்பாடுகள் அவ்வித இலக்குக்கு ஏற்றவைகளாய்க் காணப்படவில்லையென்பதும் முன்னரே கூறப்பட்டுள்ளது. சென்ற நவம்பர் மாதத்தில் பி. ஏ., முதலிய உயர்தரப் பரீக்ஷைகளில் தேர்ந்துள்ள மாணவர்களுக்கு வித்தியா பட்டங்கள் (Degrees) அளிப்பதற்காக நமது சென்னை மாகாணச் சர்வகலாசபையாரின் வருஷாந்திர ஸமாஜம் (Madras University Convocation) நடந்தேறியது. அப்போது பட்டம் பெறுவதற்கு வந்த வித்தியார்த்திகளுக்கு உபதேசங் கூறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ம-ா-ா-ஸ்ரீ திவான்பகதூர் R. வெங்கடரத்தினம் நாயுடு அவர்கள் செய்த பிரசங்கத்தில் கடைசியாக வற்புறுத்திக் கூறப்பட்ட நல்லொழுக்க ஞானப்பிரசார (Moral Education) சம்பந்தமான அம்சமானது நம் நாட்டு அபிவிர்த்தியில் ஊக்கமுள்ளோர் அனைவரும் நன்கு கவனிக்கத் தக்கதே. கல்விப் பிரசாரத்தில் வெகுகாலம் உழைத்து, ஞானமும், அனுபவமும் அடைந்துள்ள, அக்கனவானின் கல்வி விஷயமான உபதேசம் மிகப் பெருமை வாய்ந்ததே. அவர் கூறியதின் தாத்பரியமாவது:—"இங்குக் கடைசியில் கவனிக்கவேண்டிய விஷயம் நல்லொழுக்கக் கல்வி. இங்குள்ள கல்விச் சாலைகளில் ஒரு வகுப்பானது கலாசாலைகளில் மதம், ஸதாசாரம் இவை சம்பந்தமான ஞானப்பிரகாசம் ஏற்படுவது அவசியமென அறிந்து வந்திருக்கிறது. சொற்பகாலமாய், இவ்வித ஞானசம்பாதனமானது பாடசாலைகளில் கற்பிக்கப்படும் விஷயங்களுள் ஒன்ருக நினைக்கப்பட்டு வருகிறது. எனினும், சமுதாயமாய்ப் பார்த்தால், நம்மவர் இவ்விதக் கடமை விஷயத்தில் மந்தமாயிருந்திருக்கிருர்களென்றே சொல்லலாம். ஆகையினுல் இங்கு நடந்தேறிவரும் கல்விப் பிரசார ஏற்பாடுகளெல்லாம், அவற்றின் நோக்கிலும், அனுஷ்டானத்திலும், கேவலம் லௌகிகவிஞ்ஞான சம்பந்தமுள்ளவைகளாயிருந்துவந்திருக்கின்றன. ஆனுல், மாணுக்கர்களிடம் சீலம், வணக்கம் முதலிய நற்குண சமுதாயம் படிந்து விருத்தி யடையும்படி செய்வதே நிராக்ஷேபமான கல்விப் பயிற்சியின் முக்கியப் பிரவிருத்தியெனக் கொள்ளில், இவ்வுலக வாழ்க்கையில், நற்போதம், நீதிநடை முதலியன விஷயமாய் நமக்குள்ள காரியப்பொறுப்பைப் பற்றி எவ்வளவு வற்புறுத்திக்கூறினுலும் தகும். கல்விப் பிரசாரத்தின் இத்தகைய அம்சமே வெகு முக்கியமானது என்பதற்கு, வித்தியாபட்டமளிக்குமுன் நன்னெறி விஷயமாய் உங்களுக்கு விதிக்கப்படும் பிரமாண பூர்வமான வாக்குறுதிகளே தக்கதோர் அத்தாக்ஷியாகும்! சரிவர நடத்தப்பெற்ற எவ்வித ஞானப்பிரசாரத்திலும் நீதிநெறிக்குரிய சிற்சில பிரவிருத்திகள் உண்டாகக்கூடுமென்று ஒப்புக்கொள்வோம். இருந்தாலும், விவேகம் வாய்ந்திருப்பதே மனிதருக்கு ஒரு விசேஷ லக்ஷணமாகும். ஆகையால், சரியானவும், (வாங்மாத்திர மில்லாமல்) செய்கையோடு கூடினதுமான ஸன்மார்க்க ஞானப்புகட்டலே நம்நாட்டுக் கல்விப்பிரசார திட்டங்களின் ஓர் உயர்தரமான முக்கிய அம்சமாக இருக்கவேண்டும். நமது ஜனசமுதாயத்தின் உத்தமப் பகுதியோர், உதாரமான நல்லொழுக்க ஞானப் பயிற்சியை ஆமோதித்து, ஆதரிப்பாரெனவே நம்புகிறேன். இவ்வாறு செய்வதே இந்நாட்டின் பாரம்பரிய சம்பிரதாயங்களுக்கு மிகவும் இசைந்ததாகும். இங்கு இன்னமும் கொஞ்சம் சொல்லத் துணிகிறேன். நல்லொழுக்க ஞானமானது மனிதர் தம்மைச் சுற்றியுள்ள வஸ்துக் கூட்டங்களுக்குத் தக்கவாறு நடந்துகொள்ள உதவும். இவ்வித ஞானம் தானே உயர்தர ஆத்மஞானமாகப் பரிணமிக்கும். சாசுவதப் பிரபஞ்சச் சுற்றுப்பொருளுக்கேற்றவாறு ஒழுகுவதே பரமார்த்தஞான மெனப்படும். இவ்வாறு, உலக நீதியானது உயர்வடைந்து தத்வஞ்ஞானமாக ஆகக்கூடுமென்பது பற்றி நாம் பயப்படவேண்டியதே யில்லை. நம் இந்திய நாட்டின் வெகுகாலமாயுள்ள இயல்புக்கும் விவேகத்துக்கும் ஒப்ப, நமக்குள் இறுதியான ஐக்கியமுண்டாவதற்கு ஆத்மஞான சம்பந்தங்களே முக்கிய ஆதாரங்களாகும். சரியான கல்வி என்பது நமது உலக

வாழ்வு பரிபூர்ணமாவதற்குத் தக்கதொரு பிரயத்தினம் என்று நாம் திடமாய் அறியவேண்டும். பேகன் (Bacon) என்னும் வித்வான் சொல்லியதுபோல், இப்போதிருக்கிற வஸ்துஸ்திதி முழுமையும் வெளியேற்றப்படவேண்டும்; இதற்கு நிதர்சனமாய் புஷ்பமுண்டாகும் பிரகிருதி குணத்தைக் காணலாம். இவ்வாறு ஏற்பட்டால்தான், உபாத்தியாயர் குரு எனத் தகுவர்". பெரிய பரீக்ஷைகளில் தேர்ந்தவர்களுக்கும், அவர்கள் வியாஜமாய் மற்றவர்களுக்கும் படிப்பிற் சிறந்த ஸ்ரீமான் வெங்கடரத்தினம் நாயுடு அவர்கள் செய்துள்ள உபந்நியாசம் வெகு அருமையானதென்றும், இதுகாறும் இவ்வித சந்தர்ப்பங்களில் செய்யப்பட்டுள்ள உபதேசப் பிரசங்கங்களைக் காட்டிலும் உயர்ந்ததென்றும் சொல்வது அதிசயோக்தியாகாதென்பது திண்ணம். சர்வகலா சபையாரின் அத்தகைய சங்கத்தில் மாசற்ற கல்விப் பயிற்சியைப்பற்றி இவ்வளவு தெளிவாயும், உலக வாழ்க்கை விஷயத்தில் இந்தியர்களுக்கு இயல்பாயுள்ள நோக்கத்தை யனுசரித்தும்,ஏனையோர் இதுகாறும் கூறியிருப்பதாய்த் தெரியவில்லை. இக்காலத்திய கல்வி நிலைமையை உத்தேசித்தால், இவர் செய்துள்ள உபதேசரூபமான வாக்குபகாரம் மிகவும் மெச்சத்தக்கதே! இவரது பிரசங்கத்தை எல்லோரும் நன்கு படித்தறிந்து அதன் சாரத்தைத் திடமாய்க் கிரகித்து நம் நாட்டில் இகபரசுக சாதனமான நற்போதப் பிரசாரமேற்படுமாறு செய்வார்களென நம்புகிறோம். ஒரு பாஷையில் கூறப்பட்டுள்ள விஷயத்தை பாஷாந்தரத்தில் மொழிபெயர்த்துச்சொல்லில், சாதாரணமாய் அதன் காம்பீர்யமும் ஸ்வாரஸ்யமும் குறைவுபடும். அதிலும், இவரது வாக்கிய தோரணையையும் பதப்பிரயோகங்களையும் பார்த்தால், இப்போதைய கலாசாலைகளில் கற்பிக்கப்படும் கல்வி இலக்கு, பிரசாரநீதிகள் இவைகளின் கீழ்மையை மனதுருகக்கண்டறிந்து, இக்குறையை நீக்கக்கருதித் தமது மனப்பூர்வமான எண்ணத்தை வெளியிட்டுக் கூறியிருப்பதாகவே தோன்றுகிறது. இவ்விதப் பிரசங்கத்தை மொழிபெயர்த்துக் கூறுவதில் அதன் அருமை குன்றுமென்பதுடன், அதை முழுவதும் எடுத்துரைப்பது வெகு விரிவாகும். ஆதலால், முக்கியமாயுள்ள இரண்டொரு அம்சங்களை மட்டில் எடுத்துக் கூறுவோம்.

"நம்மில் ஒவ்வொருவருக்கும் மூன்றுவித கடமை உண்டு. நமது புரோவிர்த்தியை இடைவிடாது தேடுதல், சுயநலம் பாராட்டாது பொதுஜன நன்மைக்கு உழைத்தல், பிரமாண்டத்திலுள்ள சராசரவஸ்துக்கள் அனைவற்றையும் ஒழுங்குபடுத்தி நடத்திவரும் சர்வ சக்தனை ஜகதீசுவரனுக்குக் கீழ்ப்படிந்து, அவரது இச்சைக்கு அனுகூலமாக ஒழுகுதல் என்ற மூவகைக் கடைமையைச் செலுத்தல் அவசியம். புத்திவிசாலம், நல்லொழுக்கம், மதானுஷ்டானம் ஆகிய இம்மூன்றும் கல்விப்பயிற்சியின் மூவகைப் பிரயோஜனமாகும். வாஸ்தவமான அபிவிருத்திக்கு இவ்விதம் மூன்று அம்சங்களுண்டு. இது மூன்று கிரணங்கள் கூடின சோதிரூபமானது."

"மனிதரின் மனமானது ஒரு சுரங்கம்போல் அநேக ஆச்சரியமான சக்திவிசேஷங்கள் அடங்கியுள்ளது என்பதுதான் கல்விப்பயிற்சிக்கு முக்கிய ஆதாரமான தத்வம். ஒவ்வொருவனிடமும் காணப்படும் இயல்பான சக்திசூக்ஷமங்களை வளரச்செய்து, அவை அவனுக்கு நன்கு பயன்படுமாறு செய்வதே கல்விப்பிரசாரத்தின் பெரும் நோக்காகும். முதன்முதலில் ஒவ்வொருவனும் தன்னைச் சுற்றிலுமுள்ள வஸ்துக்களைப் பார்த்து, தீர ஆலோசிக்குந் திறமை உண்டாக வேண்டும். இதிலிருந்து உலகவாழ்க்கை விஷயத்தில் தீர்க்காலோசனையும் பகுத்தறியும் சக்தியும் ஏற்படும். இவ்வாறு சாதாரண ஞான மூலமாய் விவேகமுண்டாகிறது......சீலம், நல்லொழுக்கம் இவை விஷயமாய் கல்வியின் பயன் யாதெனில், கோபம், அகங்காரம் முதலிய தீக்குணங்களை ஒழித்து, வைராக்கியமடைந்து, சாத்விக புத்தியுடன் பிறர் நன்மைக்குஉழைக்க வேண்டுமென்கிற எண்ணம் உதிப்பதுதான். சுத்தமான மனோபாவம், உயர்தரமான நல்லொழுக்க நோக்கம், ஒருவனுக்குரிய கடமைகளைச் செலுத்துவதில் தீவிரமான எண்ணம் இவைகள் கூடின புருஷன் நற்குண அனுஷ்டான விஷயத்தில் பிறருக்கு வழிகாட்டுவோனாவான். ....இப் பிரபஞ்சத்தில் மிக்க உயர்ந்ததே சாச்வதமானது என்கிற எண்ணம் உதித்து, அதனால் விநயமுண்டாகிறது"......

"பரீக்ஷைகளில் தேறி, வித்தியா பட்டங்கள் பெற்றுள்ள சிறுவர்களே! நான் உங்களுக்கு வற்புறுத்திக் கூறவேண்டுவது ஒன்றுண்டு. அதா

வது ஒவ்வொருவரும் தமக்கேற்பட்ட கடமையைச் செய்யவேண்டும். இது விஷயத்தில் பெரியோர், சிறியோர் என்னும் பேதம் பாராட்டல் கூடாது. தத்தம் கடமையைச் செலுத்துவதே மனிதனுக்குரிய முதன்மையான பாத்தியதை. எக்காலத்திலும், எவ்வித சந்தர்ப்பத்திலும் அதைச் செய்யாது விடுத்தல் தகாது. இதைச் செய்வது, பாறையிலிருந்து ஜலம் ஆகர்ஷிப்பதுபோல், முதலில் கஷ்டமாய்த் தோன்றலாம். ஆனால் இது இறுதியில், தேனடையிலிருந்து வடியும் தேன்போல் மதுரமாய் முடியும். ஆகையால், மனிதப்பிறப்பின் மிக்க உயர் தரமான பயன் யாதெனில்,ஆத்மஞானம் பெறுதல், 'உலகவாழ்க்கை ஒருவிதக்கடமை,கடமையைக் கடத்துவதே நல்வாழ்க்கை' என்ற இவ்வகைப்பட்ட ஞானமுண்டாவதுதான். கல்விப் பயிற்சியால் விதிக்கப்படும் உத்கிருஷ்ட தர்மமானது, ஆத்ம ஸ்வரூபத்தை உணர்ந்து, அதைப் பிறருக்கு ஊழியஞ் செய்வதி லுபயோகப்படுத்துவதே.........".

இவ்வித உபந்நியாசத்தின் ஸாராம்சத்தை நன்கு ஆராய்ந்து உணர்வோருக்கு, இப்போது நமது கல்விச்சாலைகளில் ஏற்படும் ஞானப்பிரசாரமானது நம் நாட்டாரின் நோக்கத்துக்கும், கொள்கைகளுக்கும் சற்றேனும் ஒவ்வாது என்பது நன்கு புலப்படும். அரசியல் விஷயமாய் உண்டாயுள்ள கிளர்ச்சியாலே எல்லாம் சித்தித்து விடும் என்று நினைத்தல் பேதமைத்தனம். இதுகாறுமே படிப்பு விஷயத்தில் எவ்வளவோ சீர்திருத்தங்கள் செய்யக்கூடியவைகளாயிருந்தும், நமது தலைவர்களென விளங்குவோர் இதுவிஷயத்தில் உதாஸீனர்களாயிருந்து வந்திருக்கிறார்களென்பது துக்கிக்கத் தக்க விஷயம். இனியாவது சரியான கல்விப்பயிற்சி ஏற்படுவதற்குரிய திட்டங்கள் செய்யப்படுமென நம்புகிறோம். இதுவே இப் பரதநாட்டின் வாஸ்தவமான அபிவிருத்தியைக் கருதும் தேசபக்தர்களின் முதற்கடமையாகும். ஜாதிப் பிரயுக்தமான மாச்சரியத்தையும், அகங்காரம், பரஸ்பர அஸூயை முதலான இழிகுணங்களையும் ஒழித்து, யாவரும் பெருந்தன்மையுடன் ஒன்று சேர்ந்துழைப்பது மிகவும் அவசியம்.

மனுநீதிச் சோழன்:—சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் இயற்றிய அருமையான நூல். விலை அணா 8.

எடிஸனது சூழ்ச்சிக் கருவிகள்

EDISON'S INVENTIONS

முன்னர், எடிஸனது டிரான்ஸ்மிட்டர் என்னும் கருவியால், டெலிபோன் விஷயமாய் அநேக திருத்தங்களும், சௌகரியங்களும் ஏற்பட்டன என்று கூறப்பட்டது. அவரது மற்றைய கருவிகளைப்பற்றி ஸ்தூலமாயாவது எடுத்துரைப்போம்.

(1) **சப்த ஸம்வர்த்தனீ** (Megaphone):--இக்கருவியின் மூலமாய், வெகுதூரத்தில் பேசப்படும் மந்த சப்தங்களையும், இரகசியப் பேச்சுகளையும், வியக்தமாய்க் கேட்டறிவதற்குச்சாதனமுண்டாகிறது. இதன் முக்கியாம்சமாவது:— சப்தத்தைக் கேட்பதற்குப் புனல் போன்ற இரண்டு உரைகாளங்களும் (Ear trumpets), பேசுவதற்கு ஒரு உரைகாளமும் ஆக 3 உரைகாளங்கள் ஒரு முக்காலியின்மீது பொருத்தப்பட்டுள்ளன. இத்தகைய கருவியைக் கொண்டு அநேகமைல் தூரத்திலுள்ள இருவர் ஒருவரோ டொருவர் சாதாரணத் துவனியுடன் பேசிக்கொள்ளக் கூடும். செவிடர்கள் எளிதில் தம்முடன் கூட எடுத்துச் செல்லுமாறு இக்கருவி சிறிதாயும், அவர்களுக்குநன்கு பயன்படும் விதமும் செய்யப்பட்டுள்ளது.

(2) **சப்த ஸ்வர வர்த்தனீ** (Aerophone):- பேசப்படும் வார்த்தைகளைச் சற்றேனும் வ்யக்தக்குறைவு படுத்தாமல், ஆனால் பன்மடங்கு உரத்துக் கேட்கும்படி செய்வதே இக்கருவியின் உபயோகம். இதன் அமைப்பு வெகு ஸூக்ஷ்மம் பொருந்தியது. இதன் ஸஹாயத்தால் ரெயில் வண்டித்தொடர் தானே இருப்புப்பாதை வழியிலுள்ள ஸ்டேஷன்களுடைய பெயர்களை உரக்கக் கூப்பிடக்கூடும். சமுத்திரத்தில் வெகு தூரத்திலுள்ள கப்பல்கள் ஒன்றோடொன்று சம்பாஷித்துக்கொள்ள இடமுண்டு. "இத்தகைய ஒருகருவியின் மூலமாய் அமெரிக்கா கண்டத்து ஐக்கியநாடுகள் சுதந்திரமடைந்த விளம்பர பத்திரிகையை(Declaration of Independence) நமது பெரிய பட்டணங்களில் ஏதாவது ஒன்றிலுள்ள ஒவ்வொரு ஜனமும் நன்றாய்க் கேட்டறியுமாறு வாசிக்கக் கூடும்" என்று எடிஸனே கூறியிருக்கிறார்.

(3) ஸினிமாடோகிருப் (Cinematograph) அல்லது அசையும் படக்கருவி:—எடிஸனது பேசுங்கருவிபோல் இதுவும்பொது ஜனங்களுக்கு வெகுவாறு பயன்பட்டுவருகிறது. சென்னை மாநகரம்போன்ற அநேக பட்டணங்களில் ஒவ்வொரு நாளும் பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் பொழுது போக்குக்காக, சலிக்கும் படங்களின் காட்சிகளைக்கண்டு களித்து வருவது அநேகருக்குத் தெரிந்த விஷயமே. தனிகர்கள் இதைஒருபெரியவியாபாரத்தொழிலாகநடத்தி, நல்ல லாபமடைந்து வருகின்றனர். இவ்வித காட்சிக்கு முக்கிய ஆதாரமாயுள்ள யந்திர ரகசியத்தை எடிஸன் 1894-ம்வருஷத்தில் கண்டுபிடித்து வெளியிட்டார். இக்கருவி வரவர விருத்தியடைந்து, இக்காலத்தில் வெகு அற்புதமான காட்சிகளைச் சலிக்கும் படங்கள் ரூபமாய் வெளியிட்டுக் காண்பிக்கச் சாதகமாயிருக்கிறது. எடிஸன் காலத்துக்கு முந்தியே, இவ்விதத் தோற்றம் உண்டாவதற்குரிய யந்திரங்கள் வெகு ஸ்தூலமாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

(a) மாஜிக் லாண்டர்ன் (Magic lantern):—இக்கருவியால், கோபுரங்கள், பெரிய கட்டடங்கள், நீர்வீழ்ச்சிகள் முதலான காட்சிகளுக்குரிய சிறுபடங்கள் (Slides), ஒரு திரைமீது பெரிய பிரதி ரூபங்களாக(Images) காண்பிக்கப்பட்டு, அநேகர் ஏககாலத்தில் அவற்றைப் பார்த்து ஆநந்திக்கக்கூடியதா யிருக்கிறது. முதலில், திரைமீதுதோன்றும் பிரதிமை ரூபமானபடங்கள் சலனமற்றவைகளா யிருந்தன. படங்கள் சலிக்குமாறு, தோற்றம் உண்டாக்கிக் காண்பிக்க வேண்டுமென்று அநேக பௌதிக வித்வான்கள் மிக்க அவாக்கொண்டிருந்தனர்.

(b) இதன் பயனாக, ஜீவசக்கரம் (zoetrope or the wheel of life) என்னும் கருவி கண்டுபிடிக்கப்பட்டது. வாயகன்ற ஓர் உலோக வடிவத்தின் (Hollow metallic cylinder)சுற்றளவில், ஒன்றுக்கொன்று சமதூரத்திலுள்ளவும், நீண்டு குறுகியுமுள்ள 12 கீறுகள் (Slits) செய்யப்பட்டுள்ளன. இவ்வித கீற்றின் உயரமானது வடிவத்தின் (Cylinder) உயரத்தில் பாதியிருக்கும். இவ்வடிவின் சுற்றளவுக்குச் சரியான ஒருகாகிதத்துண்டில் அநேகபடங்கள் வரையப்பட்டுள்ளன. இக்கடிதமானது வடிவின் உட்புறத்தின் அடிப்பாகத்தில், சுற்றளவை ஒட்டினாற்போல் வைக்கக் கூடியதாயிருக்கிறது. மேற்கூறிய படங்கள், ஏதாவது தொழிற்செய்யும் மனிதன் அல்லது பிராணியின் முக்கிய தசைகளை முறையே காட்டும் உருவங்களாகும். ஒருவன் ஓடும்போது, ஆரம்பம் முதல் ஓட்டம் ஏற்படும்வரையில் கை, கால் முதலிய அவயவங்களின் நிலைமைகள் கிரமேண எப்படியிருக்குமோ, பலவாறான அவ்வித ஸ்திதிகளைக் காட்டும் படங்களடங்கிய காகிதத்தை மேற்சொன்ன வடிவத்தினுள் வைத்து, அவ்வடிவத்தைக் அடிமத்தியில் ஓர் செங்குத்தான உருவாணியின்மேல் நிறுத்திச் சுழலும்படி செய்தால், மேற்கண்ட படங்கள் கீறுகள் வழியாய் ஒன்றன்பின் ஒன்றாய் பார்ப்பவர் கண்ணில் விழும். இதனால் சலனமிருப்பதுபோல் கண்மாயம் ஏற்படும். இதற்குக் காரணமான தத்வம் ஒன்றுண்டு.

நாம் ஒரு வஸ்துவைப் பார்க்கும்போது அதன் ரூபம், வர்ணம் முதலிய வெளித்தோற்ற குணங்கள், கண்ணில் பிரதிபிம்ப ரூபமாய் ஏற்படும். இவ்விதத் தோற்றம் சுமார் 1/10 செகண்டு நேரம் நீடித்து நிற்கும். இது அழிந்துபோவதற்குள், வேறு தோற்றம் கண்ணின் அதே பாகத்தில் ஏற்படுமேயானால், இவ்விரண்டு தோற்றங்களும் கலந்துண்டாய உணர்ச்சி கண்ணுக்கு உண்டாகும்.

மேற்கூறிய கால அளவிற்குள் கண்ணில் விழும் தோற்றங்கள் வெவ்வேறாகக் காணப்படா. ஒரு ஊதுவத்தியின் நுனியைக் கொளுத்தி, அவ்வத்தியை வேகமாய்ச் சுழலும்படி செய்தால், நெருப்பு வட்டம் போன்ற தோற்றமுண்டாகுமே யொழிய, எரியும் நுனிப்பாகமானது விட்டுவிட்டுத் தனித்தனிப் பிரதேசங்களிலிருப்பதாக ஏற்படாது. இவ்வத்தியை மெல்லச் சுற்றினால், இடைவிடாத வளையம்போன்ற காட்சி ஏற்படாது. அநேக வர்ணங்கள் வரைந்துள்ள ஒரு வட்டத்தை வேகமாய்ச் சுற்றும் போது, அதை நோக்குங் கண்ணுக்கு வர்ணங்கள் பிரத்தியேகமாகக் காணப்படா; அவைகள் எல்லாம் கலந்துள்ள வர்ணத்தின் உணர்ச்சியே உண்டாகும். இவ்வித உணர்ச்சிக்குக் காரணம், கண்ணில் விழும் ஒவ்வொரு தோற்றமும் சுமார் 1/10-செகண்டு காலம் அங்கு நீடித்து நிற்குமென்ற இயல்பு குணந்தான்(Persistence of visual impression).

இவ்வித குணத்தின் மூலமாய், வடிவத்தினுள் வைக்கப்பட்டுச் சுழற்றப்பட்ட படங்கள் அதிக காலதாமதமன்னியில் ஒன்றன்பின் ஒன்ருய் கண்ணிற் படும்பொழுது, இப் படங்களால் குறிப்பிடப்படும் நிலைமைகள் ஒன்ருே டொன்று கலந்து, சலனமிருப்பதாகக் கண்மாய முண்டாகிறது. இவ்விதக் காட்சி ஆதியில் மிக்க வியப்பை உண்டாக்கக் கூடியதாயிருந்தது. அக்காலத்தவர் இதை வெகுவாறு மெச்சிப் பேசினர். ஏககாலத்தில் இவ்வித காட்சியை ஒருவர் தான் பார்க்கக்கூடும். மேலும், இதன் மூலமாய் ஏதாவது சிறுதொழில் ஒன்றுதான் ஒரேசமயத்தில் காண்பிக்கக்கூடும். பெரிய சம்பவங்களையோ, நீண்ட சரித்திரங்களையோ ஒரேகாலத்தில் பலர் பார்க்கும்படி ஒருதிரைமீது சலிக்கும் பிரதிபிம்பங்கள் தோற்றுமாறு செய்யவேண்டுமென்கிற ஆவல் பல வித்துவான்கள் மனத்திலுதித்தது. இதுவிஷயமாய்ப் பலவாறு சிரமப்பட்டு வந்தவர்களுள் பிரான்ஸ்தேசவித்வானுன டாக்டர் மாரே (Dr. E. J. Marey)என்பவரும், அமேரிக்கா ஐக்கியமாகாணத்தைச்சேர்ந்த மிஸ்டர் ம்யுப்ரிட்ஜ் (Mr. E. Muybridge) என்பவரும் முக்கியமானவர்கள். இவர்கள், பிராணிகளின் சலன தத்வங்களை ஆராய்ந்து பார்த்து, நாம் நமது பிரதிபிம்ப படத்தைப் பிடிப்பதற்காக உபயோகப்படுத்தும் போடோக்ராபிக் காமிரா (Photographic camera) என்னும் யந்திரத்தைக்கொண்டு, பிராணிகள் முதலியன அசைவுற்றுத் தொழில் செய்யும்போது, அவற்றிற்குரிய படங்கள் பிடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை, 1870-ஒு த்திலேயே கண்டறிந்தனர் என்று சொல்லப்படுகிறது. பிறகு, மேற்கூறிய ம்யூப்ரிட்ஜ் என்பவர், பளிங்குவட்டங்களில் பிடிக்கப்பட்டுள்ள படங்களின் தொடர்ச்சியை, மேற்கண்ட மாஜிக் லாண்டர்ன் எனும் கருவியிலுள்ள புறங்குவிப்புக் கண்ணுடிக்கு (Converging lens) நேராக ஒன்றன்பிறகு ஒன்ருய்க் கடுக வரும்படி விரைவாய்ச் சுற்றினுல், இப் படங்களின் பெரும் பிரதிபிம்பங்கள் ஒரு திரைமீது காணப்பட்டு, பார்ப்பவர் கண்களுக்கு அவை அசைவதாய்த் தோன்றும் கண்மாய முண்டாகக்கூடுமென்று அறிந்தார். ஆனுல், இவ்விதத் தோற்றம் சரிவர ஏற்படுவதற்கு வேண்டிய சாதனங்கள் நன்கு ஏற்படவில்லை. இக்குறையைத்தீர்த்து, வெகுஜன விநோதத்துக்குரிய கருவியைக் கண்டுபிடித்து உதவினது எடிஸனது புத்தி விசாலமே. இவரது சூழ்ச்சிக் கருவியின் முக்கியாம்சம் வெகு ஸூக்ஷமமுள்ளது. இதற்கு முந்தி, போடோபடம் பிடிப்பதற்கு,வசைவற்ற கண்ணுடித் தகட்டை உபயோகப்படுத்தி வந்திருந்தனர். இதற்குப் பதிலாக, செல்லுலாய்ட் போன்ற துவளத்தக்க ஸ்வச்சமான வஸ்துவில் (Flexible transparent substance), சலிக்கும் மனிதன் அல்லது இதர பிராணி முதலானவற்றின் பிரதிபிம்பங்கள் அடுத்தடுத்து ஏற்படுவதற்கான ஸூக்ஷமத்தை எடிஸன் கண்டறிந்து உபயோகப் படுத்தினர்.இவ்வாறு ஒருக்ஷணத்தில், மேற்கூறிய வசையத்தக்க படலத்தில் அசையும் மனிதன் அல்லது இதரவஸ்துவின் அவஸ்தைகளைக் காட்டும், 46 பிரதிபிம்பப் படங்கள் தனித்தனியாய் பதியும்படி செய்தார். இவ்வித படலத்தை மேற்சொன்ன மாஜிக் லாண்டர்ன் யந்திரத்திலுள்ள புறங்குவிப்புக் கண்ணுடி முன், தக்க உபகருவிகளைக் கொண்டு ஒரே அளவாய் அதிவிரைவிற் செல்லும்படி செய்தால், படங்களின் பிரதிபிம்பங்கள் ஒரு திரைமீது சலன வரிசைக்கிரமமாய் உண்டாகும்போது அவை சலிக்கின்றன என்கிற தோற்றம் கண்ணுக்கு ஏற்படுகிறது. இக்காலத்திய கருவிகளில் ஒருமணிநேரம் காட்சி காண்பிப்பதற்கு, சுமார் 50,000 முதல் 165,000 வரையிலுள்ள படங்கள் அடங்கியுள்ள படலம் (Film) வேண்டி யிருக்குமென்றும், இவ்வித படலம் 1-மணிக்கு 26-மைல் வீதம் சலிக்குமாறு சுழற்றப்படவேண்டு மென்றும் கணக்கிட்டுப் பார்த்திருக்கிருர்கள்.

மேற்கூறியவை தவிர, தாமஸ் ஆல்வா எடிஸன் கண்டுபிடித்துள்ள சிறு சூட்சிக் கருவிகள் பற்பல உள. இவையெல்லாம் எடுத்துக் கூறில், வெகு விரிவாகும். தமது புத்தியூகத்தாலும், விடாமுயற்சியாலும், தாம் கருதியுள்ள காரியத்தை எவ்விதமாயாவது சாதித்தே தீர வேண்டுமென்கிற தீவிர எண்ண விஷயத்தில், எடிஸன் இவ்வுலகில் கற்பனுசக்தியுள்ளோருள் முதலில் கொண்டாடத் தக்கவரா யிருக்கிருர். அவர் பௌதிக தத்வங்களைக் கண்டறிவதற்குரிய பெருஞ் சிரமத்தைப் பாராட்டாது, உழைத்துக் காரியசித்தி பெறும் தன்மையுள்ளவர். மின்சாரவிளக்கில் எவ்வித மெல்லிய சிம்பு

(Filament) மிக்க உபயோகப்படு மென்று கண்டறிவதற்காக, அவர் தமது காரியகாரர்களை அனுப்பி, சீனதேசம், ஜப்பான், இந்தியா, இலங்கைத்தீவு முதலிய இடங்களிலும், அமெரிக்கா முழுவதும் தேடிப்பார்த்து வரச்சொல்லி, கடைசியில் அதற்குத் தக்க மூங்கிற் சிம்பை இருந்தை (Carbon) ஆக்கி உபயோகப்படுத்தினர்.

பௌதிக வித்வான்களிற் சிலர் செய்துவந்துள்ள பரீக்ஷணங்களின் தோரணையும், எடிஸன் அனுசரித்த வழியும் ஒரு விஷயத்தில் வேறுபட்டன எனச் சொல்லலாம். இன்னதுதான் கண்டறியவேண்டு மென்கிற உத்தேசமில்லாமல், ஞானசம்பாதனத்தின் பொருட்டுப் பரீக்ஷணங்கள் செய்து, அப்போது தோன்றியுள்ள இரகசியங்களையறிந்து வெளியிட்டவர் பலர். எடிஸனோ இன்னென்ன பிரயோஜனத்திற்காக இன்னென்ன கருவிவிசேஷம் வேண்டுமென்று நன்கு ஆலோசித்துத் தீர்மானித்து, அத்தகைய சூழ்ச்சியந்திரத்தைக்கண்டு பிடிப்பதற்காகத் தமது கற்பனுசக்தியைப் பலவாறு உபயோகப்படுத்தி, அதைக் கண்டறியும் வரையில், அதிலேயே மனத்தைச் செலுத்தி விடாமுயற்சிசெய்து, காரியசித்தி பெற்றவருள் நிகரற்று விளங்குவோர் எனச் சொல்லவேண்டும். தாம் எடுத்த காரியங்களெல்லாம் நிறைவேற்றிக் கீர்த்திபெற்ற இவர், சற்றேனும் செருக்கடையாமல், மேன்மேலும் உலக இதத்திற்காக உழைத்துவந்தார். இவரது உழைப்பும் புத்திகௌசலமும் இவருக்கு மிக்க செல்வப்பெருக் குண்டாக்கியதுடன், அதைக் காட்டிலும் பன்மடங்கு உலகிலுள்ளோர் அனைவருக்கும் விசேஷ சுகானுபவத்தையும் சந்தோஷத்தை விளைவித்துள்ளன என்பதற்கோர் ஐயமுமில்லை. அவரது சூழ்ச்சிக் கருவிகளால் உலகத்தார் இனியும் எவ்வளவோ பேருதவி பெறக் கூடும்!

= ஆரியமத உபாக்கியானம் =

ஆப்டோன் படங்களுடன், முதற்பாகம் அணு 8. இரண்டாம் பாகம் அணு 10. இப்புத்தகங்களின் பிரதிகள் சுமார் 100,000 வரையில் செலவாகி யிருப்பதே இவைகளின் நன்மதிப்புக்குத் தக்க அத்தாட்சியாகும்.

சிவாஜி சத்ரபதி

SHIVAJI THE GREAT

முதல் அங்கம் — காட்சி. ௩

இடம்:— கல்யாணபுரம். அரண்மனை.
காலம்:—மாலை.
பாத்திரங்கள்:—அப்பாஜீ சோணதேவ், மூலானு ஆமத், ஸடீயன்ஸா, சிவாஜி, இதர சேவகர்கள்.

(சேவகன் ஒருவன் பெருமூச்சுடன் அதிவேகமாய் ஓடிவருதல்.)

நவாப்ஜீ ! நவாப்ஜீ !! நவாப்ஜீ !!!

மூலானு:— (உள்ளிருந்தபடியே) கோன் ? யார் அங்கே ?

சேவ:—குடி முழுகிப்போய்விட்டது. நவாப்ஜீ ! ஐயோ அவ்வளவு பணமும்—கொள்ளை கொள்ளை.

மூலானு :—(அதிபரபரப்புடன்) என்ன—பணம் —கொள்ளை—தெளிவுறச் சொல்.

சேவ:—(தத்தித் தடுமாறிக்கொண்டு) நவாப்ஜீ ! நம்ப கஜானு கொள்ளை. கொடும்பாவிகள் மாண்டனர். பிழைத்தேன்.

மூலானு:—(கிட்ட நெருங்கித் தட்டிக்கொடுத்து) அடே! பயப்படாதே ! சொல். என்ன சம்பவித்தது? சரியாகச் சொல்.

சேவ:—நவாப்ஜீ ! நம் கஜானு போரிக்கணவாய்க் கருகாமையில் செல்கையில்—

மூலானு:—என்ன ! நம்ம கஜானு!

சேவ:— ஆம். நவாப்ஜீ !

மூலானு:—அப்புறம் என்ன நேர்ந்தது? சொல் சீக்கிரம்.

சேவ:—கொள்ளையடித்தார். வீரர்களைக்கொன்றுர்.

மூலானு:—யார் யார்? கொள்ளை யடித்தனரா ? கொன்றனரா?

சேவ:—கொள்ளையாவது கொள்ளை. கொலையாவது கொலை. என் தலைதப்பினது தம்பிரான் புண்ணியம். தாய்க்கு ஒருபிள்ளை. நினைத்தாலும் பயமாயிருக்கிறது.

மூலானு:—அடே ! சேவகா ! கொள்ளையடித்தது யார் ?

சேவ:—நவாப்ஜீ ! ஐயோ ! அப்பாவிகள். என்னென்றுரைப்பேன். மராட்டியர்கள்.

மூலானு:—(வெகு ஆத்திரத்துடன்) மராட்டியர்களா ! அச் சிவாஜியா ?

சேவ:—ஆம்.

மூலானு:—(வெகு கோபத்துடன்) பளா பளா நல்ல காரியம். ஏ ! சிவாஜிப்பதரே. உன் அந்தஸ்தை நினைக்காதபடி அடாத காரியஞ்செய்யத் துணிந்தாயல்லவா ? பீஜாபூர் பாதுஷாவிற்குப் பணம் போவதை யறிந்தும் கொள்ளையடித்தனை யல்லவா. சன்

டாளா துரோகி. உனக்கு இனி காலங்குறுகியது. மராட்டியப்பூண்டு இன்றுடன் தொலைந்தது. (வாளை யுருவிக்கொண்டு) இனி சும்மாயிருத்தல் தகாது. கொள்ளையடித்தவர்களை இவ்வாளுக் கிரையாக்கு வேன். உன் தகப்பனைக் காப்பாற்றிவரும் பாதுஷா விற்கா துரோகஞ்செய்யத் துணிந்தாய். நரகாபே! நல்லது நல்லது. இனி மராட்டியர்களை அழிப்பதே கடமை. சத்தியம். (உள்ளிருந்து 'அடே உன்னால் ஆகாது')

மூலாஜு:—(அங்குமிங்குஞ் சுற்றிப்பார்த்து) யார் அது? என்னாலாகாதா? ஒரு கைப் பார்ப்போம்.

[அப்பாஜீ சோணதேவரும் இருவீரர்களும் உருவின கத்திகளுடன் பிரவேசித்தல்.]

சேவ:—ஐயோ! நவாப்ஜீ! இவரே-இவரே.

(மூலாஜுவுக்குப் பின்புறம் செல்லுதல்)

(பாடுதல்)

அப்பா:—அடே! பயலே! என்ன பிதற்றுகிறாய்? சூரனோ நீ! வாய்க்குவந்ததெல்லாம் உளறுகிறாய். உன் இருப்பை அறியாமற்படிக்கு அளக்கிறாய். இதோ ஒரு கொடிப்பொழுதில் உன்னை வானுலகு சேர்ப்பிக் கின்றேன் பார். (வீரர்களைப் பார்த்து) வீரர்களே! அவனைச் சிறைப்படுத்துங்கள்.

(வீரர்கள் கிட்டநெருங்கவும் மூலாஜு வாள் எடுத்தல்)

வீரர்கள்:—உனக்கு வாள் ஒரு கேடா! நவாப் அல்லவா! வாள் வேண்டியதுதான்.

சேவ:—நவாப்ஜிக்கு வாள்வேண்டியது. உனக் குக் கோள்வேண்டியது.

முதல்வீ:—அடே! முட்டாள் பயலே! இன்னும் இருக்கிறாயா நீ? உன்னை அப்பொழுதே கொன்றிருப் பேன். நீ தளுந்துவிட்டாய்.

(என்று கூறிக்கொண்டே சேவகன் பிடரியைப் பிடித்து அழுத்துதல்)

சேவ:—ஐயா! (பல்லைக் காண்பித்துக்கொண்டு) ஐயா!

2-வது வீரன்:— அடே! இங்குநில்- இவ்விடம் விட்டகன்றால் உன் உயிர் நீங்கும். உஷார்.

அப்பா:—என்ன சேவகர்களே! இன்னும் தாம தமா? மூலாஜுவைச் சிறைப்படுத்துங்கள்.

(மூலாஜுவுக்கும் அப்பாஜிக்கும் தர்க்கம்) (பாடுதல்)

மூலாஜு:—அப்பாஜீ! என்னையா சிறைப்படுத்து வது! இதோபார் என் சாமர்த்தியத்தை.

(என்று கூறிக்கொண்டே அப்பாஜீமேல் பாய்தல்)

அப்பா:—அடே! முட்டாள்! பனங்காட்டு நரி சரசரப்புக் கஞ்சுமோ? என்னை வெட்ட உன்னலா காது போடா. ஹரிஹரப் பிரம்மாதி வந்தாலும் ஒரு கைப் பார்ப்பேனடா. வாள்பிடிக்கத் தெரியாத வம் பன் நீ. உன்னிடம் என்ன திறமை இருக்கப்போகி றது? உங்கள் குலத்தைக் கருவறுக்கப் பிறந்தேன் யான். நில். உன்னுடன் அதிகப் பேச்சென்ன?

(இருவரும் வாட்போர் செய்தல்)

மூலாஜு:—அடே! இதோபார் உன்னை வெட்டுகி றேன். இதற்கு நீ தப்புவதில்லை. உன் தலை இரு பிள வாக விழுகிறது பார் (என்று கூறிக்கொண்டே கத்தி யை அப்பாஜி சிரசுக்குமேல் லோக்க எழுப்புவதற்குள் அப்பாஜீ தன் வாளால் மூலாஜுவின் கத்தியை இரு பிள வாக்குதல்)

அப்பா:—பயலே! எங்கே உன் வாள்? என்ன சொல்லுகிறாய் இப்பொழுது? காசம் பல கூடி நின்று லும் ஒரு கல்லின்முன் எதிர் நிற்குமோ? என் வாள் உன்னை இருபிளவாக்கும். சீ! உன்னை வெட்டுவதால் எனக்குப் பாபமேயன்றி புண்ணியமில்லை. பொரும் வலி இழந்திட்ட உன்னை வெட்டேன். போ! உன்னை மன்னிக்கிறேன். கர்வங்கொள்ளாதே. (சேவகர்களைப் பார்த்து) அடே இவனைச் சிறைப்படுத்து.

சேவ:—அப்படியே ஸ்வாமி.

(என்று மூலாஜுவைச் சிறைப்படுத்துதல்)

மூலாஜு:—(ஆத்மகதமாய்) விதி யாரைவிட்டது? கல்யாணபுரத்தை யாளும் சுல்தான் சிறைவாசியா னேன். இக்கிமிஷத்தில் நடப்பது மற்றொரு நிமிஷத் தில் தெரியாது. காலசக்கரம் சதா சுற்றிக்கொண்டே யிருக்கிறது. நாம் செய்த வினைப்பயன், அனுபவித்தே தீரவேண்டும். இன்னும் எப்படி எப்படி நடக்கின்ற தோ அதையெல்லாம் பார்ப்போம். எல்லாவற்றிற்கும் ஈசன் ஒருவன் இருக்கிறான். ஹும்.

அப்பா:—அடே! சேவகா! உங்களில் ஒருவர் விரைவில்சென்று சிவாஜி ராஜாவை இங்கு அழைத்து வா. செல் சீக்கிரம்.

முதற்சேவகன்:—உத்திரவுபடியே (விரைந்தோடுதல்)

அப்பா:—ஆ! என்ன சேர்த்தியான அரண்மனை. கண்ணைப்பறிக்கின்றது. என்ன வேலைப்பாடு. அற்புதம் அற்புதம். இவ்வரண்மனையில் இன்னும் என்ன என்ன அதிசயங்கள் உண்டோ? இதை யாம் அறிவோம்.

(சுற்றிச்சுற்றிப் பார்த்தவண்ணமாகவே நிஷ்கிர மித்தல்)

மூலாஜு:—ஐயோ. அப்பாஜி இன்னுமென்ன செய் வனோ? மருமகள் இருக்கும் அந்தப்புரத்திற்குச் செல் வானோ? ஆகா! பரபுருஷர்களுடைய காற்றுவீசக் கூடாத இடங்களிற் சென்று மானபழியச் செய்வா னோ? ஆ! தெய்வமே. அநாதைக்கு நீயே துணை.

(ஸ்தோத்திரஞ் செய்தல்).

சேவ:—சுவாமி உன்னைக் காப்பாற்றுவார். சிவாஜி உன்னை ஒன்றுஞ்செய்யார். பயப்படாதே.

(அப்பாஜீ மீண்டும் திரும்பிவருதல்)

அப்பாஜீ:—(ஆத்மகதமாய்) ஆஹா! மூலாஜு வின் மருமகள்! என்ன ரூபம்! என்ன சௌந்தரியம்! சிறைபட்டாள் நம்மிடம். நம் சிவாஜிக்கு அவள் ஏற்றவளே. அவளுக்கு ஏற்றவர் நம் சிவாஜியே. நல் லது அவர்வரட்டும். அவளை அவருக்கே ஒப்புவிப்போம்.

161

என்ன (திடுக்கெனத் திரும்பல்) காலடி சத்தம் வெகு கனமாய்க் கேட்கிறது. ஒருக்கால் சிவாஜியே வரக் கூடும். அதிவேகமாய் வருவதினால் சத்தம் அதிகமாகிறது. ஆ! அதோ வருகிறார்.

(சிவாஜிமகாராஜா சேவகர்களுடன் பிரவேசித்தல்)

சிவாஜி:—அப்பாஜீ! பேஷ். நல்ல காரியஞ்செய்தாய். இருந்தால் உன்னைப்போலல்லவோ யிருக்க வேண்டும். வீரனென்றால் உனக்கே தகும். உன் வீரம் வியக்கத்தக்கதே. சபாஷ் (தட்டிக்கொடுத்தல்).

அப்பா:—சுவாமி! தேவரீர் ஆசீர்வாதம் இருக்கும் வரை இவ்வடிமைக்கு என்னகுறை? என் வீரமெல்லாம் உங்களைச் சேர்ந்ததே.

சிவாஜி:—என்றாலும் நீ புகழத்தக்கவனே. கல்யாணபுரம் நம்முடையதா?

அப்பா:—சுவாமி! கல்யாணபுரமும் நம்முடையது. அதோநிற்கும் சுல்தானும் நம்முடையவனே.

சிவாஜி:—(திரும்பிப்பார்த்தல்) சுல்தானா? சிறைப்படுத்தினையோ? நல்லது. (சுல்தானிடம் நெருங்குதல்)

அப்பா:—சுவாமி! சுல்தான் நம் வசம் உள்ளான். அவன் சிறை பட்டான்.

சிவா:—(மூலானாவை ஏறயிறங்கிப்பார்த்து,) அப்பாஜீ! அவர் தளையை நீக்கு - கல்யாணபுரத்தையாளும் சுல்தானுக்கு இத்தகைய தளையிடுதல் ஏற்குமா? நம்மையொத்த அந்தஸ்து வாய்ந்தவரல்லவா? பீஜபூர் சுல்தானின் பிரதிநிதியாயிற்றே. பிள்ளாய்! நம்மிடம் சிறைபட்டபோதிலும் அவர் மரியாதையுள்ளவரே. அவரை நாம் கௌரவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மூலானா:—(ஆத்மகதமாய்) ஹா! என்ன கம்பீரம்! என்னகுணம்! பகைவர்களைப் போற்றுங்குணம் இவரிடத்திலன்றோ குடிகொண்டிருக்கிறது. நாம் சிறைப்பட்டும் சிறைப்பட்டதாகத் தோன்றவில்லை. இவர் மரியாதை இனி யாருக்குத்தான் வரும்? பீஜபூர் பாதுஷா நம்மை யொருநாளும் இவ்வண்ணம் போற்றான். நமக்குப் பயமென்பதுவேண்டாம். சிவாஜி நம்மைத் துன்பப்படுத்தார்.

சிவாஜீ:—அப்பாஜீ! மூலானாவை நம்முன் அழைத்துவா. (ஆசனத்தில் அமருதல்)

அப்பா:—உத்திரவு-சுவாமி (மூலானா சிவாஜிக்கு முன் நிற்கல்)

சிவாஜி:—மூலானா! பயப்படாதீர். உம்மை யான் ஒன்றுஞ்செய்யேன். நீர் தைரியமாயிருக்கலாம். அடுத்தவரை ஆதரிப்பதே என் கடமை. உம்மை உமதிஷ்டப்படி நடத்துவேன்.

மூலானா:— (ஆத்மகதமாய்) இப்பெருந்தன்மை இவரிடம் இருக்கும்வரை இவரை வெல்ல ஒருவராலுமாகாது. பெருந்தன்மை வெற்றிமாலை சூடுமல்லவா? (பகிரங்கமாக) ஐயா! எனக்கு என்ன பயம்? யான் என்ன குற்றஞ் செய்தேன் பயப்படுவதற்கு? நிராயுதபாணியாய் அரண்மனையில் இருந்த என்னைச் சிறைப்படுத்தினீர். உங்களுக்குக் கனவிலும் தீங்கிழைக்கக் கருதாதிருந்த என் வீரர்களைக் கொன்று கஜானாவையுங் கொள்ளையடித்தீர். இன்னும் எனக்கு என்னபயம்? நான் தைரியமாகத்தான் இருக்கிறேன். சாகத்துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் என்பதுபோல், யான் உங்களிடம் சிக்கிக்கொண்டேன். நீங்கள் விட்டவழியான். நீங்கள் எப்படி என்னை நடத்தினாலும் எனக்குச் சம்மதமேயாகும். சிறைபட்டவன் அடிமைக்குச் சமம். அடிமை சுதந்தரமற்ற மிருகம். மிருகம், சுவரணை பௌரஷம் அறிவு முதலிய குணங்களற்ற ஜெந்து. ஐயா! யான் என்ன சொல்லப்போகிறேன். உமதிஷ்டப்படி யாகட்டும்.

சிவாஜி:—மூலானா! நீர் வருத்தத்துடன் கூறிய வார்த்தை என் மனதைப் பிளக்கின்றது. க்ஷத்திரிய தர்மத்தை மேற்கொண்ட எவரும், சுகம் துக்கம் ஜெயம்அபஜெயம் இலாபம் நஷ்டம் இவைகளை எதிர்பார்த்த வண்ணமாகவே யிருக்கவேண்டும். யுத்தசாகஸங்களிலே சதுர்விதஉபாயங்கள் சிறந்தசாதனங்களாகும். உபாயங்களின்றி யுத்தம் புரிபவன் ஜெயமடையான். க்ஷத்திரியன், கொலைகளவு இத்தொழில்களைத் தேச ரக்ஷணைக்காச் செய்வதனால் வீரசொர்க்கமடைகிறான். சாமானியன் தன் இச்சைக்காகச் சுயநலங் கருதி செய்யுங் கொலை, களவு முதலிய தொழில்கள் மகா பாபத்தைக் கொடுக்கும். காப்புத் தொழிலைக் கொண்ட க்ஷத்திரியனுக்கு அத்தொழில்கள் புண்ணியத்தைக் கொடுக்கும். ஐயா! மூலானா!! உம் வீரர்களைக் கொன்றதும் கஜானாவைக் கொள்ளையடித்ததும் அதர்மமாகாது; க்ஷத்திரியனுக்குரியதே. நீர் விவேகியும் நல்லவருமானதால் உம்மை விடுவிக்கிறேன். உமதிஷ்டப்படி எங்குசென்றாலும் சரி. (அப்பாஜியைப் பார்த்து) அப்பாஜி! மூலானா செல்வதற்கு ஓர் அசுவம் தயாரித்துக் கொடு.

அப்:—அப்படியே! ஐயா (மூலானாவைநோக்கி) வருக.

மூலானா:—(ஆத்மகதமாய்) சிவாஜி வருகைக்கு முன், 'அடே' என்று ஏகவசமாய்க்கூறின இவன் இப்பொழுது வெகு மரியாதையுடன் மொழிகிறான் 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்பது பொய்யாகுமா (பகிரங்கமாக) ஐயா உங்கள் மரியாதைக்கு மெச்சினேன். யான் செல்கிறேன். உமக்குக் கஷ்டம் ஏன்? (நிஷ்கிரமித்தல்.)

சிவா:—அப்பாஜீ! கொள்ளையில் ஏதாகிலும் அபூர்வ வஸ்து கிடைத்ததா? ஆபரணங்கள் கிடைத்தனவா? கஜானா தொகை எவ்வளவிருக்கும்? கல்யாணபுரத்தில் உனக்குக் கிடைத்த நிதி எவ்வளவு? சரிவரக் கூறுவாய்.

அப்பா:—பிரபோ! கொள்ளையில் கிடைத்த வஸ்துக்களில் அதிக மேன்மைபெற்றதும் யாவராலும்

162

விரும்பத்தக்கதுமான அதிவிலையுயர்ந்த பொருள் ஒன்று கிடைத்தது. அதை உங்களுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்க எண்ணியிருக்கிறேன்.

சிவா:—அப்பாஜி ! அதென்ன அபூர்வ வஸ்து? எனக்காக வைத்திருக்கும் விலையுயர்ந்த வஸ்து என்னப்பா அது?

அப்பா:—சுவாமி ! கொண்டுவரட்டுமா. உங்கள் உத்திரவு.

சிவாஜி:—அப்பாஜி! என் உத்தரவும் வேண்டுமா? அப்படியே உன்னிஷ்டப்படி செய்.

அப்பா:—இதோ கொண்டுவருகிறேன் (நிஷ்கிரமித்தல்)

சிவாஜி:—என்னவாயிருக்கலாம்? வெகு விநோதம். விலையுயர்ந்தவஸ்துவை எனக்குக்கொடுக்கயிருக்கிறான். ஆஹா என்ன பிரீதி ! (முன் விடல்)

(அப்பாஜீ ஸடையன் நராவை அழைத்து சிவாஜீ—

அப்பா:—சுவாமி! இப்பொருள் தெவிட்டாத இன்பப்பொருள். உம்பர்களும் ஆசைகொள்ளக்கூடிய ஆளுகைப்பொருள். உங்களுக்கேற்ற உயர்ந்தபொருள்.

சிவா:—(பாடுதல்) இதென்ன விபரீதம் ! இந்நங்கை யார்? எவ்வூரினள்?

அப்:—சுவாமி ! இம்மங்கையர்க்கரசி மூலானுவின் மருமகள். சிறந்த வனிதாரத்தினம் உமக்குரியவளே.

சிவா:—அப்பாஜீ! இம்மாதை எங்ஙனம் கொணர்ந்தனை? இவளுக்குப் பிறந்தகம் எங்கே ! உற்றார் பெற்றார் எவரேனும் இலரா?

அப்பா:—சுவாமி ! இக்கேள்விகளுக்குப் பதில்கூற எப்படியாகும் ? அப்பெண்மணியே கூற வல்லாள். (அவளைப்பார்த்து) பெண்மணி ! அவர் கேட்குங் கேள்விகளுக்கு விடை பகர்வாய்.

ஸடை:—(ஆத்மகதமாய்) (பாடுதல்) ஐயோ! அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு என்னும் நாற்குணங்கள் ஸ்திரீகளுக்குரிய தன்றோ ? ஸ்திரீகள் வாழ்க்கையின் துணை நலம் கற்பல்லவோ? புருஷர் முகம் பார்க்கக்கூடாதபடி கட்டுக்காவல்களுடன் அந்தப்புரத்திலிருந்த நான், பரபுருஷர்களுக்குமுன் நிற்கலாயிற்றே. ஆ ! ஈசா ! இதுவும் உன் திருவருளோ ! 'தலையினிழிந்த மயிரனையர் மாந்தர் நிலையினிழிந்தக்கடை' நற்குடியிற்பிறந்தவர் நிலைகெட்டவிடத்துத் தலையிலிருந்து நீங்கிய மயிர்க்கொப்பாவர்போல், மானம் அழிந்தும் உயிர்நீங்காது வாழ்கின்றேனே. என் செய்வேன். யார் என்னைக் காப்பாற்றுவார் ? (கண்ணீர் சொரிதல்.)

சிவா:—சகோதரீ ! ஏன் கண்ணீர் விடுகின்றனை ? உனக்கு யான் இடர்விளையேன். அஞ்சற்க. தாங்கள் யார் ? உற்றார் பெற்றார் யாவர்.

ஸடை:—ஐயா ! ஸ்திரீகள் புருஷர்களுக்குமுன் நிற்பதே மிகக் குறைவு. அதிலும் அரசர்முன் நின்று உரையாடுவது சொல்லொணாப் பழிப்பு. என்றாலும், யான் சிறைபட்டவளானதினால் மானமழிந்தேன். மானமழிந்தபிறகு வார்த்தையாடுவதினால் என்? ஐயா! யான் மூலனுவின் மருமகள். எனக்கு உற்றார் பெற்றார் உள்ளார். என் பிறந்தகம் பீஜாபூருக்குப் பதினைந்து காத தூரத்திலுள்ளது.

சிவா:—பெண்ணே ! நீ மிகவும் சிறந்த பெண். உருவத்திற்குரிய குணமும் குணத்திற்குரிய நடையுமுடையவள். உத்தமி. உன் மனம் நோக உன்னையொன்றுஞ் செய்யேன். (சிரித்து) மங்கையர்க்கரசியே ! என் தாயார் உன் அழகில் ஒரு பாதியாவது இருப்பாளாயின், நான் இதைவிட இன்னும் அழகுள்ளவனாயிருப்பேன். நீ என் தாய்க்குச் சமமானவள். பிரபஞ்சத்தில் கீர்த்தியை விரும்புகின்றவன் பர தார விருப்பங் கனவிலுங் கொள்ளான். சர்வாதிகாரம் பெற்று, சார்வ பௌமனாயிருக்கக் கருதும் இராஜன் ஒருவனுக்கு இருக்கவேண்டிய குணங்களெல்லாவற்றிலும் நன் மங்கையரைத் தாய்போற் கருதும் இக்குணமொன்றே இகபர மிரண்டிலும் புருஷார்த்தத்தைக் கொடுக்கக்கூடியதன்றோ ? ஆகவே நீ பிறந்தகஞ் செல்ல இப்பொழுதே அனுமதி தந்தேன். அப்பாஜீ ! தனத்துடனும் தளத்துடனும் இப்பெண்மணியைப் பிறந்தகம் அனுப்புவாய். நல்லவீரர்களைக் கூட்டி வழிக்காப்புடன் விட்டுவரும்படி செய். இடர் இயற்றின் மிடர்தறுதலே செயற்பாலதாம். அம்மா! உங்களுக்கு நமஸ்காரம். உங்களுக்கு ஒருதீங்கும் வாராமலிருக்கக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். சுகமே பிறந்தகம் போய்ச் சேருங்கள். (நிஷ்கிரமித்தல்)

ஸடை:—அப்படியே ஸ்வாமி ! உங்களைப் பகவான் இரட்சிப்பாராக ! (ஆத்மகதமாய்) என்ன அருமையான குணம் ! சித்திரப்பாவைபோல் பளபளப்புடனிருக்கும் ஸ்திரீயிடம் தவமுனிவர்களும் தயங்குகையில், இளமையும் பராக்கிரமமும் ஐயமும்பெற்ற க்ஷத்திரியன் ஒருவன் ஸ்திரீயிடம் மனஞ்சலியாமல் தாயைப்போல் நடத்துவது உயர்ந்த குணம் அல்லவா? இக்குணமொன்றே சிவாஜியைப் பெருமைப்படுத்தும். உண்மையில் இவர் கலியுக ரகுநந்தனன்.

அப்:—அம்மா ! வாருங்கள். மன்னன் கட்டளையைச் சிரமேற்கொண்டு நடத்தவேண்டியவனானேன். (இருவரும் நிஷ்கிரமித்தல்)

(காட்சி முடிவு.)

இயற்கை அற்புதங்கள்

இது ஆ. வீ. கஸ்தூரிரங்கய்யங்கார், பி. ஏ., எல். டி., அவர்கள் இயற்றியது.

ஸ்கூல் இன்ஸ்பெக்டர், ராவ் பகதூர் எல். வி. வில்லியம்ஸ் பிள்ளையவர்கள் எழுதிய சிறந்த முகவுரையுடன் கூடியது. சித்திரப் படங்கள் அடங்கியுள்ளது. விலை அணா 10.

தக்கார் தகவில ரென்ப தவரவ ரெச்சத்தாற் காணப் படும்.

லோகநாதன்

துப்பறியும் ஓர் இனிய நாவல்

AN INTERESTING DETECTIVE NOVEL

ஐந்தாவது அத்தியாயம்

புஷ்பவல்லியின் இரகசியம்

பாலய்யா பூங்காவனத்துடன் பேசிக்கொண்டிருக்கையில் ஸுந்தரி விலாஸத்தில் என்ன நடக்கின்றதென சற்று கவனிப்போம். "சோலை மலரொளியோ உந்தன் சுந்தர புன்னகைதான்" என்று கவிஞர் பாடியபடி இனிய சாயங்காலமும் தென்றலும் அவையின் பயனை மனோநிம்மதியும் பரம்பொருளையே ஞாபகப்படுத்தின. சுமார் ஆறு மணிக்கு ஸுந்தரி விலாஸத்தின் சுற்றுத் தோட்டத்தில் ஆதவன் தயங்கித் தயங்கி தன் வழி நடந்தான். பொன் நிலா தோட்டத்தில் விழுந்து மண்ணையும் கற்களையும் மரங்களையும் இலைகளையும் புஷ்பங்களையும் ஹேமமய மாக்கின வனப்பைக்கண்டு தானே மகிழ்ந்தான்போலும். சுற்றிப் பருத்து, பூவும் பிஞ்சுமாய் ஆகாயத்தை அளாவி நின்ற மாமரங்கள் மெல்லிய தங்கத்தகடுகளையே இலையெனக் கொண்டிருந்தன போலும். அவை மென்காற்றி லசையும்பொழுது தங்களுக்குச் சுகம் கொடுத்து வனப்பூட்டிய ஆதவனிடம் தலைவணங்கி உத்தரவு பெற்றுக்கொண்டன போல் விளங்கின. ஆதவனே தன் முகத்தை அச்சமயம் நோக்க தவம் செய்தானோ அறியோம். புவியுடன் கூடும் மகிழ்ச்சியாலோ அறியோம். அவன் முகத்தை எதற்கொப்பிடுவது? நாம் ஒப்பிடும் வஸ்துக்களெல்லாம், அவனழகைச்சற்றுத் ஒத்திருப்பதால் அவை அழகென நாம் மதிக்கிறோம். தங்கம் அழகாகுமா? மாலைச் சூரியனது நிறத்தைத் தங்கம் கொண்டிருப்பதால் தங்கத்தின் நிறம் அழகாயிருக்கின்றதல்லவோ? முழுவனப்பும் முகத்தில் தோன்றி நிற்கும் அழகுக்கு உறைவிடமாம், சாயங்கால சூரியனுக்கு உபமானம் அவனே. அவனை யணுகி நிற்கும் மேகங்களெல்லாம் என்னென்ன புதுமைத் தோற்றங்களை அடைகின்றன. பூவுடன் சேர்ந்து நாரும் மணம் பெற்றாற்போல், ஆதவனாலேயே சிருஷ்டிக்கப்பட்டு ஆதவனையே அடைக்கலம் புகுந்த மேகங்கள் மாயா கல்பிதமான எல்லா வுருவங்களையு மடைந்தன. ஆகாயத்தில் எவ்வளவு மலைகள் தோன்றுகின்றன. எவ்வளவு ஆறுகள் வேண்டும். என்னென்ன வஸ்துக்களைப் பார்க்கவேண்டுமென்று மனம் இச்சைப்படுமுன்னர், அந்தந்த உருவங்கள் மேகங்கள் நடுவே தோன்றுகின்றன. இது வென்ன சக்தியோ! ஆதவன் இந்த அலங்காரமும் சிற்பமும் சித்திரமும் எங்கு கற்றானோ!

யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்; ஆதவன் கீழே விழுந்த பிறகும் என்ன வனப்பு! வானத்து மீன்கள் நிறைந்திருக்கின்றன. எண்ணியெண்ணிப் பார்த்திடினும் அவைகளின் ஒளிக்கும் அமைதிக்கும் சிறப்புக்கும் உவமை கூற மற்றோர் வஸ்துவில்லை. வைரம் நக்ஷத்திரம் மாதிரியிருப்பதால் அழகு வாய்ந்ததாகிறது போலும்!

ஆ! சாயங்கால வெயிலும் புன்மாலை யந்திப்பொழுதின் மெல்லிய நடையும் சோலைவனப்பும் இனிய தென்றலும் மாற்றாறாத துயரமுண்டோ? வனப்பைக்கண்டு கண்ணை மூடிக்கொள்ளும் மாந்தரும் நக்ஷத்திரங்களைக் கண்டதும் மனத்தூய்மையும் அன்பும் அறிவும் அறிவினூறும் ஆனந்தமும் அடைவார்களே. ஸுந்தரி விலாஸத்து மாமர நிழலில் கண்ணீர் விட்டுக் கொண்டு கீழே நோக்கின பார்வையுடன் உட்கார்ந்திருந்த மாதுக்கு இவ்வளவு வனப்பும் சுகமும் களிப்பூட்டவில்லை. ஆறு மணிக்கு வந்து உட்கார்ந்தவள் மணி ஏழாகியும் தலையை நிமிர்த்தவே இல்லை. அம்மாதுக்கு சுமார் நாற்பத்தெட்டு வயதிருக்கும். ஆனால் வயதான குறியொன்றுமேயில்லை. காதில் வைர ஓலைகளையும் கையில் காப்புகளையும் அணிந்திருந்தாள். கழுத்தில் ஒரு கொடி மாத்திரமிருந்தது. "நிமிஷத்துக்கு நிமிஷம் பெருமூச்செறிந்தாள். தோட்டத்துக் காற்று கொஞ்சந் துயரத்தை நீக்குமேயெனத் தோட்டத்தினுள் வந்தாள் போலும். அவள் யாரெனில் மாசிலாமணிப் பிள்ளையின் மனைவி நீலாயதாக்ஷியே. எதையோ நினைத்துக் கொண்டு கண்ணீர் விட்டாள். அப்பொழுது ஒருவன் அவள் பக்கத்தில் பூனையின் நடை எவ்வளவு சந்தடியற்று இருக்குமோ, அவ்வளவு சந்தடியற்று நடந்துவந்து நின்றான்.

இந்த சாயங்காலமெல்லாம் வீணாய்த் தன் பத்தில் செலவிடும்படி ஒன்றும் நேரவில்லை. நாம் கேட்காமலே நமக்கு இந்த அழகிய ஆகா

யத்தையும் தென்றலையும், உடலையும், ஆவியையும் ஆன்மாவையும் அளித்த ஆண்டவனிருக்கும்பொழுது, "அவனன்றி ஓரணுவும் அசையாதல்லவா"? தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமே இல்லை. துன்பமும் கவலையும் பொய், அநித்யம்; ஆநந்தமும், சாந்தியும், களிப்புந்தான் மெய். தாங்கள் கவலைக்கிடமான சம்பவங்கள் நேர்ந்தபொழுது அவையுந் தெய்வத்தின் இச்சையால்தான் நேறுகின்றனவென அறிந்து தெளிந்து பொறுமையுட னிருக்கவேண்டும். இப்பொழுது லோகநாதன்மீது தங்களைப்போலவே எனக்கும் சந்தேகமில்லை. அவன் குற்றத்தில் சம்பந்தப்படவில்லை என்பதைத் தாங்கள்தான் ருஜுப்படுத்தமுடியும். தங்கள் உதவியிருந்தால் என்னவானாலும் முடியும். புஷ்பவல்லி நேற்றையதினம் மூன்று மணியிலிருந்து ஐந்தரை மணி வரை ஒரு முக்கியமான கடிதத்தை எழுதிக் கொண்டிருந்தா ளென்று தெரியவருகிறது. ஐந்தரைமணிக்கு வெளியே சென்றாள். இரவு எட்டுமணிக்குத் திரும்பிவந்தாள். ஆகையால் அவளிடமோர் இரகசியம் இருந்தது. அவளோ சிறிய பெண். அந்த வயதில் அவளுக்கு ஒரே ரகசியந்தான் இருக்கமுடியும். முதிர்ந்த அன்பாகிய காதல். போலீஸார் என்னைப்போல நினைக்க வாரம்பித்தால் லோகநாதனிடந்தான் அவள் காதல்கொண்டிருந்தா ளென்று சொல்லுவார்கள். அவன் வார்த்தைகளுக்கு ஒருவிதமான மதிப்பும் ஏற்படாது. அது பொய் என்று சொல்லக் கூடிய சக்தி உங்களிடந்தானிருக்கிறது. அவள் தங்களைத் தாய்போல நினைத்து மனதிலுள்ள ரகசியத்தை வெளியிட்டிருக்கலாம். தாங்கள், லோகநாதனிடம் புஷ்பவல்லி காதல் கொள்ளவில்லை. ஆனல் மற்றொருவனிடம் காதல் கொண்டிருந்தாள் என்று சொல்லும் பக்ஷத்தில் லோகநாதன்மீதுள்ள சந்தேகமெல்லாம் ஒழிந்துபோய்விடும். எனக்குத் தாங்கள் உதவிசெய்யக் கூடுமோ?" வென்று துப்பன் கேட்டான்.

"என்னைப் பொய்யுரைக்கும்படி வேண்டினல் நான் எவ்வாறு பொய்சொல்வேன்? என் பிள்ளையைக் காப்பாற்றி விடுவேன். எனக்கே இன்பமும் புகழும் விளையும். ஆனல் நான் காட்டிக்கொடுக்கும் மற்றொருவர் பாடு என்ன வாய்விடும்? புஷ்பவல்லி உயிருடனிருந்தால் என்னைப்பற்றி என்ன நினைப்பாள்? உண்மை தெரியாமலிருந்தாலும் லோகநாதனிடம் அவள் அன்பு கொள்ளவில்லையென்று மாத்திரம் சொல்லிவிடுவேன். ஆனல் உண்மை யறிந்த நான் எவ்வாறு அப்படிச் சொல்லமுடியும்? நீர் வேண்டிக்கொள்ளும்படி நான் சொல்லும் பக்ஷத்தில் கொடும்பாதகி யாவேன். நான் உண்மையென அறிந்த விஷயத்தை மாற்றி பொய் சொன்னவளாவேன். அப்படி எதற்கு நானின் பம் பெறல்வேண்டும்? நல்ல வேளையாய் எனக்குத் தெரிந்த ரகஸியம் மற்றொருவருக்குத் தெரியாது" என்றாள்.

வந்தவன் சற்றுநேரம் தயங்கி நின்றான். நீலாயதாக்ஷி மட்டில், "லோகநாதனிடம் இவ்வளவு அன்புகொண்ட நீங்கள் யார்?" என வினவினள். "நான் மயிலை மகாலிங்கம். லோகநாதன் காலையில் எழுதி என்னை இங்கு வரவழைத்தான். அவனும் நானும் நண்பர்கள். உங்களுக்குத்தெரிந்ததையெல்லாம் என்னிடம் சொல்லிவிடலாம். நான் சில கேள்விகள் கேட்கிறேன். அவைகளுக்கெல்லாம் பதில் சொல்லிவிடுங்கள். தாங்களறிந்த உண்மை முழுவதையும் நான் கிரஹித்துக்கொண்டு விடுவேன். லோகநாதன்மீது அபாண்டம் சுமரினும் சுமரலாம். அதை விலக்க நான் இக்கேள்விகளைக் கேட்கிறேன்.

"லோகநாதனுக்கு இதமாயே தாங்கள் உழைப்பீர்கள் என்று எனக்குப் பூர்ண நம்பிக்கையுண்டு. தங்களிடம் உண்மையை உரைக்க எனக்கு ஒரு ஆக்ஷேபனையுமில்லை. கேளுங்கள்."

"லோகநாதன் புஷ்பவல்லியிடம் முதலில் காதல் கொண்டானு? புஷ்பவல்லி, லோகநாதனிடம் முதலில் காதல் கொண்டாளா?"

"அது எனக்குத் தெரியாது. புஷ்பவல்லிதான் என்னிடம் முதலிற் சொன்னாள். அது சகஜந்தான். புஷ்பவல்லி குழந்தை. என்னைத் தாய்போல் மதித்துவந்தாள். தனக்குக் கலியாணம் செய்யும்பொழுது தான் அன்புவைத்திருந்த லோகநாதனை தனக்குக் கலியாணம்செய்து கொடுக்கும்படி என்னை வேண்டிக்கொண்டாள். பைத்தியக்காரி. அவள் அன்பு வைத்ததே ஒரு பெரிய பாத்தியமாய் விடுமாம். பின்னர் அவளைத் தாய்தந்தையர்போல் வளர்த்து வந்த என் கணவரும் நானும் உண்மையில தாய்தந்தையராய் வடுவோமாம். பத்து நாள் களுக்குப் பிறகுதான் லோகநாதன் என்னிடம்

புஷ்பவல்லிமீது தான் காதல் கொண்டிருப்பதாய்ச் சொல்லி அது தகாத காரியமோ வென்று என்னைக் கேட்டான்.

"உங்கள் வீட்டில் அந்தக் கலியாணத்தை யார் சந்தோஷத்துடன் எதிர்பார்ப்பார்கள். யார் தடுக்க முயலுவார்கள்?"

"எனக்கு அக்கலியாணம் நடக்கும்போலிருக்கிறதென்று தோன்றியதுமே பரவசமாய் விட்டது. ஆனால் என் கணவர் மனதை நான் தெரிந்துகொண்டமட்டில் அதற்குச் சம்மதப்படமாட்டார் என்றே நினைக்கிறேன். புஷ்பவல்லியிடம் அவருக்கு மிகுந்த பிரீதி. அவளுக்குப் பணமில்லாதிருந்தால், தானே ஒரு தலைக்கு நின்று கலியாணத்தை முடித்து விடுவார். ஆனால் அவளுக்குப் பணமிருப்பதால் தன் வளப்பின் பணத்தை தானே எடுத்துக்கொண்டதாக உலகம் பழிக்குமோவென உலக அபவாதத்துக்குப் பயப்படுவார். கலியாணத்துக்குச் சம்மதிக்க மாட்டாரென்றே நினைக்கிறேன்."

"காதலரிருவருக்கும் அவரவர்கள் மனது தெரியுமா?"

"புஷ்பவல்லிக்கு லோகநாதனின் ரகசியம் தெரியும். லோகநாதனுக்கு அவள் ரகசியம் தெரியாது.

"அதெப்படி தங்களுக்குத் தெரியும்?"

"ஏனென்றால் அவர்கள் ஒருவருக்கொருவர் நேரிடப் பேசினதில்லை. புஷ்பவல்லி வெட்கம் தெரிந்தபிறகே எங்கள் வீட்டுக்கு வந்தாள். ஆகையால் லோகநாதன் நின்ற விடத்திற்கூட அவள் நிற்பதில்லை. புஷ்பவல்லியிடம் நான் லோநாதனது ரகஸியத்தைச் சொல்லிவிட்டேன். ஆனால் லோகநாதனிடம் சொல்லவில்லை. பெண்ணின் ரகஸியங்கள் வெகு அழகானவை. அவைகளை ஆடவரிடம் வெளியிட்டால் நகைப்புங் கேலியுந்தான் மிஞ்சும். ஆடவரின் ரகசியங்கள் பெண்களிடம் தெரிவிக்கப்பட்டால் அவைகள் ஆழ்ந்து பாயும். கலியாணத்தை நடப்பிவைக்க என்னைவிட அவளே வல்லமை யுள்ளவள் என்ற எண்ணத்தின் பேரில் அதையவளிடம் சொன்னேன்."

"இவை நடந்து எவ்வளவு காலமிருக்கும்?"

"சுமார் ஆறுமாதங்களாகின்றன."

"சந்தேகம் முழுவதும் புஷ்பவல்லியின்மீது திரும்பிவிட்டது. அவள் வரலாறும் குணங்களு மெப்படி என்று சொல்லவேண்டும்?"

"கும்பகோணத்துக் கடுத்த மாங்குடி கிராமத்தில் வைத்தியலிங்கம்பிள்ளை என்றவொரு மிராசுதார் இருந்தார். அவர் சம்பாதித்த நிலங்கள்தான் நேற்று பாலய்யாவுக்கு சாஸனஞ் செய்யப்பட்டன. அந்த வைத்தியலிங்கம் பிள்ளைக்கு ஒரே பெண். அவளைத்தான் என் கணவரின் நண்பரான சரவணமுத்துவுக்குக் கொடுத்திருந்தது. சரவணமுத்து சொல்ப சொத்துக்காரன். மாமனார் வீட்டிலிருந்து நிரம்ப சொத்து வருமென்று துன்மார்க்கங்களில் தன் சொத்தில் முக்கால்வாசியைச் செலவிட்டுவிட்டான். விலைமாதரையும் பிறமாதரையும் இச்சித்து அவர்களுடன் பழகியவர்களுக்கு பெண்டாட்டியைக் கண்டாற் பிடிக்காமற் போவது சகஜந்தானே. வைத்திலிங்கம் பிள்ளையின் மகளை யவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. கொஞ்ச நாளைக்கெல்லாம் அந்தப் பெண்டாட்டிக்கு குழந்தை பிறக்கவில்லையென்று இரண்டாந்தாரம் கலியாணம் செய்துகொண்டான். இளையாளுக்கு ஒரு பெண் பிறந்தது. குழந்தை பிறந்ததும் இளையாள் புருஷனை வருத்தத் தொடங்கினாள். துன்பம் பொறுக்கமுடியாமல் மூத்தவளைச் சேர்த்துக்கொண்டான். அவள் உத்தமி. கணவனின் துன்பத்தைக் கண்டு அவனுக்கு உதவிபுரியவேண்டுமென்று அவன்கூடவிருந்தாள். அப்பொழுது தான் புஷ்பவல்லி பிறந்தாள். வைத்திலிங்கம் பிள்ளை இறந்து போனார். அவர் மனைவியும் இறந்தாள். புஷ்பவல்லியின் தாயு மிறந்துபோய் மூன்று வருஷமாகின்றது. இதற்குள் சரவணமுத்துவின் இளையாள் குழந்தைக்கு வயதுவர, அவளையொரு தகுந்த விடத்தில் கலியாணஞ் செய்து கொடுத்தான். ஆறுமாதத்திற்கெல்லாம் அந்தப் பெண் புருஷனை இழந்து, வீட்டுக்கு வந்துவிட்டது. புஷ்பவல்லியின் தாய் இறந்துபோனது முதல், சரவணமுத்துவின் முன்பாகவே அவள் மாற்றாந்தாயும் அக்காளும் புஷ்பவல்லியை மிக்கப்படுத்தினர். சரவணமுத்துவுக்கு நீர் ரோகம் கண்டுவிட்டது. உடனே வைத்தியலிங்கம பிள்ளையின சொத்துக்களை புஷ்பவல்லிக்கென்றெழுதி அவளுக்கு கார்டியனாக என்கணவரை நியமித்துவிட்டு பெண்ணையும் இங்கேகொண்டு வந்து விட்டுவிட்டு அவன் இறந்துபோய் விட்டான். அவன் இறந்து இப்பொழுது பதினாறு மாதங்களாகின்றன. வந்ததுமுதல் புஷ்பவல்லி

தங்கப் பதுமையோ, தேவ கன்னிகையோ, அல்ல சீதை, தமயந்திபோன்ற உலககன்னிகைகளின் அவதாரமோவென்று நடந்துகொண்டு வந்தாள். குணம் தங்கம், பத்தரைமாத்துத் தங்கம், அவள்மீது உலகமுழுவதும் சந்தேகப்படலாம். ஆனல் லோகநாதனும் என் கணவரும் நானும் ஒருபோதும் சந்தேகப்படமாட்டோம். இது யார் செய்த பாவமோ? நான் கொடுத்துவைக்கவில்லை. ஈசன் கருணைபுரிய வேண்டும். அவள் உயிருடனிருக்கவேண்டும். பாலாற் காலலம்பவேண்டு மென்றிருந்த கையால், அவளைக் குளிப்பாட்ட வருமுன்னர் என் கைகளைக் கொள்ளிக்கட்டைகளுக்கு இரையாக்கி விடுவேன்.''

"அப்படி இருக்கையில் ஏன் உமது கணவர் மாங்குடி நிலங்களை விற்கவேண்டும்?''

"இவ்வளவு கஷ்டங்களையு மனுபவிக்கத்தான். நான் நிலம் அப்படியே யிருக்கட்டுமென்று எவ்வளவோ முறை வேண்டிக் கொண்டேன். எனக்கொன்றுந் தெரியாதென்று சொல்லிவிட்டார். மாங்குடியில் வைத்தியலிங்கம் பிள்ளைக்கு தம்பி பேரன் ஒருவன் இருக்கிறானாம். அவனும் தௌகித்திரப் பேரன். நிலமாய் இருந்தால் அவைகளை அவன் கோர்ட்டில் புஷ்பவல்லிக்குச் சேரக்கூடாதென வாதிக்கலாமாம். ருஜுமேலும் விவேகமில்லாமலும் தீர்ப்புச்செய்யுமிந்த கோர்ட்டுகளில் நியாயம் கிடைக்காதாம். புஷ்பவல்லியின் கணவனின் சாமர்த்தியத்தைப்பொறுத்ததாய்ப் போய்விடுமாம். இவர் கார்டியனுயிருக்கும்பொழுதே விற்றுவிட்டால் புஷ்பவல்லிக்கேசொத்துமுழுவதும் நிச்சயிக்குமாம். அதில் மோசக்கருத்து ஒன்றுமில்லையாம். புஷ்பவல்லி புத்திசாலியாகையால் தான் சொல்வதெல்லாம் சரியென ஒப்புக்கொண்டு விட்டாளாம். நான் பேதையாகையால் பிதற்றினேனும். ஒருகாலால் நின்று நிலங்களையெல்லாம் விற்றுவிட்டார்.''

"சரவணமுத்துவின் இளையாளும் அவள் பெண்ணும் எங்கிருக்கிறார்கள்?''

திருவல்லிக்கேணியில் வீரராகவ முதலித் தெருவில் வசிக்கிறார்கள். அந்த வீடுதான் சரவணமுத்துவின் சொந்த வீடு. அங்கேதான் அவன் செத்துப்போனன். அவன் உயிருடனிருக்கும்பொழுதே பெண்ணுக்கு ஜீவனும்சம் வேண்டு மென்று வழக்காடினன். கோர்ட்டார் ஏதோ ஜீவனும்சம் தீர்ப்பு செய்திருக்கிறார்கள். சரவண முத்துவின் சொந்த சொத்தெல்லாம் அவர்களுக்குத்தான். இளையாள் பெயர் மரகதம். பெண்ணின் பெயர் எனக்குத் தெரியாது. மூத்தவளை நான் பார்த்ததேயில்லை. விதவையாய்ப்போன பெண் கிளிதான்.

"இந்தக் கஷ்டம்வேண்டாம். சரவணமுத்து செத்துப்போன பொழுது துக்கத்துக்குச் சென்றேன், அப்பொழுதுதான் அவர்களையெல்லாம் பார்த்தேன். பெண்ணை நினைத்துக்கொண்டால் எனக்கு நிரம்ப வருத்தமாயிருக்கிறது.''

"புஷ்பவல்லிக்கும் லோகநாதனுக்கும் இருந்த இந்த ரகசியத்தை எவரிடமாவது சொல்லியிருக்கிறீர்களா?''

"ஒருவரிடமும் சொல்லவில்லை. அவர்களுடன் நான் பேசிக்கொண்டிருந்தபொழுது யார் காதிலாவது பட்டிருந்து வெளியில் பரவியிருக்கலாம்.''

"ஆமாம். மத்தியான நேரங்களில் அமிர்தம் வீட்டில் அதிகமாயிருப்பதில்லையே. எங்குபோகிறாள்?''

"நான் அதிகமாய் வம்பளக்கமாட்டேன். புஷ்பவல்லி படித்துக்கொண்டிருப்பாள். திருவல்லிக்கேணி வீரராகவமுதலித் தெருவிலே தான் அவள் வீடாம். பொழுது போகாவிட்டால்அவள் அண்ணன் பெண்சாதியுடன்போய் பேசிக்கொண்டிருந்துவிட்டு வருவாள்.''

மகாலிங்கம் கடியாரத்தை எடுத்துப்பார்த்தார். எட்டடிக்க இருபது நிமிஷங்களிருந்தன. உடனே நீலாயதாக்ஷி ஆச்சியிடம் விடைபெற்றுக்கொண்டு, வேகமாய் சேதுபட்டு ரயிலடிக்குச்சென்றார். பையிலிருந்து ஒரு போஸ்ட்கார்டை எடுத்து அதில் பத்துவரி எழுதி கையில் வைத்துக்கொண்டு பிளாட்பாரத்தில் நின்றார். ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் 'ஸிலோன் போட் மெயில்' வெகு வேகமாய் வந்தது. செட்பட் ஸ்டேஷனில் அது நிற்காது. திறவுகோலை வாங்கச் சற்று வேகங்குறைந்தது. மகாலிங்கம் தபால் வண்டி பக்கத்தில் நின்றதால் அதில் தொத்தி ஏறி, வண்டியிலிருந்த பெட்டியில் கடிதத்தைப் போட்டு விட்டுக் குதித்தார். மெயில் போனதும், ஒரு 'ரிக்ஷா' வண்டி பிடித்துக்கொண்டு மயிலாப்பூருக்குப் போய்ச் சேர்ந்தார்.

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S & LADIES' PAGES

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

ஓர் ஊரில் ஓர் ஏழைக் குடியானவனிருந்தான். அவனுக்கு ஒரு பிரபு இரண்டு பசுமாடுகள் கொடுத்தார். அவன் அந்த இரண்டு பசுக்களையும் நாள்தோறும் காட்டில் புல்லுள்ள இடங்களுக்கு ஓட்டிக்கொண்டுபோய் வயிறார மேய்த்து வருவான். மாலைவேளையில் தவறாமல் தவிடும் பிண்ணாக்கும் தீனியாகவைத்து, குடிக்கக் கழுநீர் காட்டுவான்.

இப்படி போஷிக்கப்பட்டு வந்தமையினால் அந்தப் பசுக்களிரண்டும் மினுமினு என்று எலும்பு தெரியாமல் வளர்ந்திருந்தன. அந்தப் பசுக்களைக் கொடுத்த பிரபு ஒருசமயம் குடியானவனிடம் வந்தார். அவர் அந்தப் பசுவைப் பார்த்துச் சந்தோஷமடைந்து அவனுக்குத் தக்க வெகுமதி தந்து சென்றார்.

குடியானவன் நல்ல விவேகி. தெய்வபக்தியுடையவன்; அவனுடைய பேச்சுக்கு எவரும் வரமாட்டார்கள்; அவனை எல்லோரும் அன்பாய் நடத்துவார்கள்; அவனுக்கு இரங்குவார்கள்; இப்படிப்பட்ட நல்லவனுடைய பசுக்களை ஒரு திருடன் கொண்டுபோக ஒருநாள் இரவு புறப்பட்டு வந்தான்.

வழியில் அவனுக்குப் பல கெட்ட சகுனங்கள் உண்டாயின. அதனால் அவன் மலைத்து மலைத்து நின்றான். இருந்தாலும் முன் வைத்த காலைப் பின்வைப்பதா என்றெண்ணி அவன் நடந்தான். வழியில் இராக்ஷஸனொருவன் ஒரு மனிதனைப்போல் வேஷம் கொண்டு எதிர்ப்பட்டான். அவனைக்கண்ட திருடன், 'நீ யார்? எங்கே போகிறாய்?" என்று கேட்டான்.

அவன், நான், "கொழுத்த பசுமாடு இரண்டு வைத்திருக்கிறானே அவனைக் கொல்லப்போகிறேன். அவன் எனக்கு இரண்டு ஆடுகள் தருவதாகச் சொல்லி ஏமாற்றிவிட்டான். அப்படி அவமானப் படுத்தியவனை உயிரோடிருக்க விடப்படாது. நீ யார்? எங்கே போகிறாய்?" என்று கேட்டான்.

திருடன், "நானும் அந்தக் குடியானவன் வீட்டுக்குத்தான் போகிறேன். அவனுடைய பசுமாடுகளிரண்டையும் கொண்டுவந்து விடவேண்டும்" என்றான். அவன், "அப்படியானால் நல்லதாயிற்று. வா போவோம்" என்றான். இருவரும் வெகு வேகமாய் நடந்து குடியானவனுடைய வீட்டிற்குச் சென்றார்கள்.

குடியானவன் தன் வீட்டுக் கூடத்தில் பயமில்லாமல் தூங்குகிறான். மாடுகளிரண்டும் கவலைவிட்டு முற்றத்தில் கட்டியிருக்கின்றன. இவர்களிருவரும் புழைக்கடைப்புறத்துக் கதவைத்திறந்து வீட்டிற்குள் நுழைந்தனர்.

திருடன் முதலில் மாடுகளை அவிழ்க்கப் போனான். கொல்ல வந்தவன், "அவிழ்க்காதே, பொறு. நான் குடியானவனைக் கொன்று விடுகிறேன். அப்பால் நீ உன்வேலையைச் சுலபமாய் முடித்துக்கொள். நீ மாடுகளை அவிழ்க்கும் போது குடியானவன் விழித்துக் கொண்டால் என் காரியம் கெட்டுப்போகும்" என்றான்.

திருடன், "நீ கொல்லப் போகும்போது குடியானவன் விழித்துக்கொண்டால் என் காரியம் கெட்டுப்போகும். ஆகையினால் நான் முன்னமே என்வேலையை முடித்துக்கொள்கிறேன். நீ பொறு" என்றான்.

இதுவரையில் இருவரும் மெதுவாய்ப் பேசினார்கள். பிறகு நீ முன்னே நான் முன்னே என்றுசொல்லியவாறே உரத்துப்பேசத் தொடங்கி விட்டார்கள். இவர்கள்போட்ட கூச்சலில் குடியானவன் விழித்துக்கொண்டான். எழுந்து அவர்களை மடக்கிக்கொண்டான்.

திருடன், "ஐயா, இவன் உன்னைக் கொல்ல வந்தவன்" என்றான். அவன், "ஐயா! இவன் உன் மாடுகளைக் கொண்டுபோகவந்தவன்! நான் நீ கும்பிடுந் தெய்வத்திற்கு அடிமை வேலை செய்யும் இராக்ஷஸன். உன் ஆண்டவன் ஆணைப்படி உன்னை எச்சரிக்கை செய்ய இப்படி வந்தேன்" என்று சொல்லி மறைந்தான்.

குடியானவன், உடனே திருடனைப் பிடித்துக்கொண்டு, "அடே எனக்கு ஆண்டவன் துணையுண்டென்பதை எல்லோரும் அறிவார்களே! உனக்கேன் தெரியாமல் போயிற்று?" என்று கேட்டான். திருடன் "இனித் தெரிந்து கொண்டேன். இந்தச் சமயம் என்னை மன்னித்துவிடு" என்று கெஞ்சிக்கேட்டான். குடியானவன், "ஓடிப்போ ஒருவருடைய கண்ணில் படாமல்" என்று சொல்லித் துரத்திவிட்டான்.

நல்லகாலமும் தெய்வபலனுமிருந்தால் இப்படித்தான் விரோதிகளும் நன்மை செய்வார்கள்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

வெளிநாட்டிலுள்ள ஐரோப்பியரும், இந்தியரின் தொகையும் வருமாறு:—

	ஐரோப்பியர்	இந்தியர்
கானடா தேசம்	87,87,998	1,200
நியூபவுண்ட்லாந்து	2,62,938	...
ஆஸ்திரேலியா	54,36,794	2,000
நியூஸீலண்ட்	13,20,275	600
தென் ஆப்பிரிக்கா (நெடால் தவிர)	14,02,082	20,000
நெட்டால் மாத்திரம்	1,30,838	1,42,000

இரண்டரை வருஷ காலத்திற்குள் பத்து லக்ஷம் ஐரோப்பியர்களுக்கு மேல் விருத்தியாகியிருக்கிறார்கள். நெட்டாலைத்தவிர, மற்ற நாடுகளில் இந்தியரின் தொகை குறைந்துகொண்டே வருகிறது. நெட்டாலிலும் வருஷா வருஷம் அதிகரிக்க வேண்டிய தொகை குறைய ஆரம்பித்துவிட்டது ஆச்சரியமல்ல.

* * *

அமெரிக்க பெரிய யுத்தக்கப்பல்.—அமெரிக்க அரசாங்கத்தாரால் புதிதாகச் செய்யப்பட்ட ஒரு பெரிய யுத்தக்கப்பல், எட்டு 16 அங்குல பீரங்கிகளும், பதினன்கு 5 அங்குல பீரங்கிகளும், நான்கு 3 அங்குல பீரங்கிகளும், தண்ணீருக்குள் சென்று கப்பலைத் துளைக்குங்கருவியை விடும் பீரங்கிகள் இரண்டுமிருக்கின்றன.

* * *

இரத்தமே மனிதனின் வாழ்க்கைக்கு ஆதாரம்.—பழங்களின் ரசத்தையும், காய்கனிகளையும், கீரைகளையும் பெரியோர்கள் ரத்தசுத்தி செய்யும் வஸ்துக்களாகக் கூறுவது வழக்கம். விரைசம்பந்தமான வியாதிகளைக் கண்டிப்பதில் ஆப்பிள் பழத்திற்குச் சமமானது ஒன்றுமேயில்லை. எலுமிச்சை, ஆரஞ்சுப் பழங்கள் ஜுரங்களை நிவர்த்திக்கக் கூடிய சக்தியுள்ளவைகளாயிருக்கின்றன. திராட்சைப் பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டே வந்தால் தேகத்தில் எப்பொழுதும் பலம் இருந்துகொண்டேயிருக்கும். ஜாஸ்தியாக கீரைகளையும், காய்கறிகளையும் சாப்பிட்டு வந்தால் தேகத்தில் யாதொரு வியாதியும் வாராது. இரத்த சுத்தி ஏற்படும்.

காலஞ்சென்ற ஸ்ரீமான் ஆர். ரங்காச்சாரியார் எம். ஏ., எல். டி.—சென்னைக் கிறிஸ்துவ கலாசாலையில் தமிழ் ஆசிரியராக விருந்த ஸ்ரீமான் ஆர். ரங்காச்சாரியார், எம். ஏ., எல். டி., தமது 40-வது வயதில் மயிலையில் நாளது மீ 11௳ காலகதியடைந்ததாகக் கேட்டு வருந்துகின்றோம். ஸ்ரீமான் அனவரத விநாயகம் பிள்ளை தமிழ் அகராதி கமிட்டியின் தலைவராக நியமிக்கப்பட்டபின் அவரிருந்த ஸ்தானத்திற்கு இவர் நியமிக்கப்பட்டார். தமிழ் பாஷையினிடம் பேரன்பு பூண்டு அதன் அபிவிருத்திக்கு இவர் பெரிதும் பாடுபட்டு வந்தவர். எமது பத்திரிகையின் அபிவிருத்தியில் மிகவும் அக்கரை கொண்டவர். அவரது பல அருமையான வியாசங்கள், அவப்போது எமது பத்திரிகையில் வெளிவந்திருக்கின்றன. இவரது மரணம் நமக்கு மாத்திரமல்ல, தமிழபிமானிகளுக்கே பெரிய நஷ்டத்தை விளைவித்து விட்டதென்றே சொல்லவேண்டும்.

* * *

அமெரிக்காவில் பத்திரிகைகள்.—ஐக்கியநாடுகளில் 2,500 தினசரிப் பத்திரிகைகள் இருக்கின்றன. இவற்றில் 500-பத்திரிகைகள், தினசரி 10,000-க்கு மேல் செலவாகின்றன. தேசத்திற்குள் மொத்தம் 16,277 - வாரப் பத்திரிகைகள் வெளியாகின்றன. ஜனத்தொகையில் 3,000 முதல் 5,000-வரையில் இருக்கக்கூடிய சிறு பட்டணங்களில் 213 பத்திரிகைகள் நடைபெறுகின்றன. ஆனால் நம் நாட்டிலோ —

* * *

மற்றொரு துக்க சம்பவம்.—தென் இந்தியா ரெயில்வே, எம். எஸ். எம். ரெயில்வே ஆகிய வற்றை மேற்பார்வையிடும் கவர்ன்மெண்டு பரீக்ஷகரான ராவ் பகதூர் ஏ. ராஜகோபாலய்யர் சிலகாலம் நோயால் வருந்தி 3௳ யன்று மயிலாப்பூரில் காலமாகி விட்டார். அவர் 20-வருஷகாலம் சேவை செய்திருக்கிறார். அவருக்கு வயது 42-தான். மிஸ்டர் ஐயர் எமது பத்திரிகாபிமானிகளுள் ஒருவர். மிகவும் உயர்ந்த குணங்கள் வாய்ந்தவர். இவரது அகால மரணத்துக்கு நாம் வருந்துவதுடன் அவர் குடும்பத்தார்க்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பாண்டவ சரித்திரம் அல்லது தருமமே ஜயம்.—மஹாபாரதம் பூராவும் 400-பக்கங்களில் இனிய நடையில் எழுதப்பட்டது. படங்களுடன் ரூ. 2—4.

170



குமரக்கடவுள், வேடுவர் சிறுமியை
சிறைபிடித் தோடியது.